# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் கற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64)தகுதியும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

## இளங்கலை பட்டப்படிப்பு

## 11A



# பகுதி-I : தமிழ் தாள்-I

முதற் பருவம்

இளங்கலை பட்டப்படிப்பு

# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் கற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64) தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

### இளங்கலை பட்டப்படிப்பு

### முதற் பருவம்

### 11A

# பகுதி-I : தமிழ் தாள்-I

| Reviewer | |
|---|---|
| Dr. V. Thiruveni | Assistant Professor in Tamil<br>Directorate of Distance Education<br>Alagappa University, Karaikudi |

**Author: Srinivasan Banumathi,** Freelance Author



"The copyright shall be vested with Alagappa University"

All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.

Information contained in this book has been published by VIKAS® Publishing House Pvt. Ltd. and has been obtained by its Authors from sources believed to be reliable and are correct to the best of their knowledge. However, the Alagappa University, Publisher and its Authors shall in no event be liable for any errors, omissions or damages arising out of use of this information and specifically disclaim any implied warranties or merchantability or fitness for any particular use.



VIKAS®

Vikas® is the registered trademark of Vikas® Publishing House Pvt. Ltd.

VIKAS® PUBLISHING HOUSE PVT. LTD.
E-28, Sector-8, Noida - 201301 (UP)
Phone: 0120-4078900 • Fax: 0120-4078999
Regd. Office: 7361, Ravindra Mansion, Ram Nagar, New Delhi 110 055
• Website: www.vikaspublishing.com • Email: helpline@vikaspublishing.com

**Work Order No. AU/DDE/DE1-238/Preparation and Printing of Course Materials/2018 Dated 30.08.2018 Copies - 500**

# First Semester

**Under Graduate Programmes**

| Course Code | Title of the course |
|---|---|
| 11 A | Part-1: Tamil Paper - I |

# பாடத்திட்டங்கள்

**நோக்கம்:** மொழி அறிவு, இலக்கண அறிவை வளர்த்தல்

**கூறு 1**

**1. கண்ணதாசன் – ஸ்ரீ கிருஷ்ண கானம்**

1. புல்லாங்குழல் கொடுத்த
2. குருவாயூருக்கு வாருங்கள்

**கூறு 2**

1. கோகுலத்து பசுக்கள்
2. கோகுலத்தில் ஒரு நாள் ராதை
3. ஆயர்பாடி மாளிகையில்

**கூறு 3**

**பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்**

1. நெஞ்சில் குடியிருக்கும்
2. செய்யும் தொழிலே தெய்வம்

**கூறு 4**

பாரதியார்
கண்ணன் என் விளையாட்டுப் பிள்ளை
பாரத மாதா
திருப்பள்ளி எழுச்சி

**கூறு 5**

1. பாரதிதாசன் - உலகப்பன் பாட்டு (5)
2. நாமக்கல் கவிஞர் – நோயற்ற வாழ்வு பாட்டு 7
3. பெ. தூரன் - நிலா பிஞ்சு

**கூறு 6**

1. வல்லிக் கண்ணன் - வெறும் புகழ்
2. கு. ப. இராஜகோபாலன் - எதற்காக?
3. மீரா – பதினைந்து

**கூறு 7**

1. சிற்பி – சர்ப்ப யாகம்
2. ஞானக்கூத்தன் - தோழர் மோசிகீரனார்

**கூறு 8**

1. அப்துல் ரகுமான் - கண்ணும் எழுதேம்
2. சண்முக சுப்பையா - வயிறு

**கூறு 9**

1. சிலப்பதிகாரம் - வழக்குரை காதை
2. கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்

**கூறு 10**

1. சீறாப்புராணம் - ஈத்தங்குலை வரவழைத்த படலம் (1)

**கூறு 11**

தேம்பாவணி – காட்சிப்படலம்

பாடல் எண் (ஒவ்வொரு பாடலின் முதல்வரி)

1. இன்னவாயில்
2. கொழுந்துறும்
3. பஞ்(ச) அரங்கில்

**கூறு 12**

தேம்பாவணி – காட்சிப்படலம்

பாடல் எண் (ஒவ்வொரு பாடலின் முதல்வரி)

4. எண்ணுளே
5. ஒண்தலங்கள்
6. இரவியேந்த கஞ்சக்

**கூறு 13**

தேம்பாவணி – காட்சிப்படலம்

பாடல் எண் (ஒவ்வொரு பாடலின் முதல்வரி)

7. கன்னியாயதாயும்
8. ஏந்தி ஓங்கு உளத்து
9. ஆவ தேமுனர்
10. கொல்லும் வேலொடும்

**கூறு 14**

தேம்பாவணி – காட்சிப்படலம்

பாடல் எண் (ஒவ்வொரு பாடலின் முதல்வரி)

11. என்ற வாசகம்
12. அம்பினால்
13. வேண்டும் ஓர் வினை

## பொருளடக்கம்


**கூறு 1** 1

**1. கண்ணதாசன் – ஸ்ரீ கிருஷ்ண கானம்**

1. புல்லாங்குழல் கொடுத்த
2. குருவாயூருக்கு வாருங்கள்

**கூறு 2** 9

1. கோகுலத்து பசுக்கள்
2. கோகுலத்தில் ஒரு நாள் ராதை
3. ஆயர்பாடி மாளிகையில்

**கூறு 3** 16

**பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்**

1. நெஞ்சில் குடியிருக்கும்
2. செய்யும் தொழிலே தெய்வம்

**கூறு 4** 24

பாரதியார்
கண்ணன் என் விளையாட்டுப் பிள்ளை
பாரத மாதா
திருப்பள்ளி எழுச்சி

**கூறு 5** 39

1. பாரதிதாசன் - உலகப்பன் பாட்டு (5)
2. நாமக்கல் கவிஞர் – நோயற்ற வாழ்வு பாட்டு 7
3. பெ. தூரன் - நிலா பிஞ்சு

**கூறு 6** 57

1. வல்லிக் கண்ணன் - வெறும் புகழ்
2. கு. ப. இராஜகோபாலன் - எதற்காக?
3. மீரா – பதினைந்து

**கூறு 7** 67

1. சிற்பி – சர்ப்ப யாகம்
2. ஞானக்கூத்தன் - தோழர் மோசிகீரனார்

**கூறு 8** 78

1. அப்துல் ரகுமான் - கண்ணும் எழுதேம்
2. சண்முக சுப்பையா - வயிறு

**கூறு 9** 83

1. சிலப்பதிகாரம் - வழக்குரை காதை
2. கம்பராமாயணம் - அயோத்தியா காண்டம்

**கூறு 10** 119

1. சீறாப்புராணம் - ஈத்தங்குலை வரவழைத்த படலம் (1)

**கூறு 11** 124

தேம்பாவணி – காட்சிப்படலம்

பாடல் எண் (ஒவ்வொரு பாடலின் முதல்வரி)

1. இன்னவாயில்
2. கொழுந்துறும்
3. பஞ்(ச) அரங்கில்

**கூறு 12** 125

தேம்பாவணி – காட்சிப்படலம்

பாடல் எண் (ஒவ்வொரு பாடலின் முதல்வரி)

4. எண்ணுளே
5. ஒண்தலங்கள்
6. இரவியேந்த கஞ்சக்

**கூறு 13** 126

தேம்பாவணி – காட்சிப்படலம்

பாடல் எண் (ஒவ்வொரு பாடலின் முதல்வரி)

7. கன்னியாயதாயும்
8. ஏந்தி ஓங்கு உளத்து
9. ஆவ தேமுனர்
10. கொல்லும் வேலொடும்

**கூறு 14** 127

தேம்பாவணி – காட்சிப்படலம்

பாடல் எண் (ஒவ்வொரு பாடலின் முதல்வரி)

11. என்ற வாசகம்
12. அம்பினால்
13. வேண்டும் ஓர் வினை

**மாதிரி வினாத்தாள்-I** **138**

**மாதிரி வினாத்தாள்-II** **139**

# கூறு 1

# ஸ்ரீ கிருஷ்ண கானம்

## கண்ணதாசன்

குறிப்பு

இருபதாம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ்க் கவிஞர்களுள் ஒருவர் கண்ணதாசன். கவியரசு என்று போற்றப்பட்டவர். அரசியலும திரைப் படமும் விளம்பரம் மிக்க துறைகள் அல்லவா? தமது திறமையால் இந்த இரண்டிலும் முன்வரிசையில் இடம் பிடித்தவர் இவர். இலக்கியப் பத்திரிகைகள் நடத்தி இதழியல் துறையிலும் சிறந்து நின்றவர். இதனால் உலகறிந்த புகழுடன் விளங்கினார். இவரது கவிதைகள் பற்றி அறிந்து கொள்ளும் வகையில் இந்தப் பாடப் பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டின் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ளது சிறுகூடல்பட்டி என்னும் சிற்றூர். இங்கு வாழ்ந்த சாத்தப்பன்-விசாலாட்சி பெற்ற எட்டுப் பிள்ளைகளுள் ஒருவர் முத்தையா. இலக்கிய ஆர்வத்தால் தம் பெயரைக் கண்ணதாசன் என்று புனைந்து கொண்டார். பிறந்த நாள்: 24.6.1927.

### ஆர்வமும் ஆற்றலும்

இளமையிலேயே கவிதை புனையும் ஆற்றல் பெற்றிருந்தார். இலக்கியப் படைப்பில் ஆர்வம் மிகுதி. தந்தை பெரியாரின் சமூகச் சிந்தனைகளும், அறிஞர் அண்ணாவின் தமிழும், அரசியல் கருத்துகளும் இவரை ஈர்த்தன. சிறந்த மேடைப் பேச்சாளர்; திராவிட இயக்க முன்னணித தலைவர்களுள் ஒருவர் ஆனார்.

### சாதனைகள்

தமிழ்த் திரைப்பட உலகில் நல்ல தமிழும், பகுத்தறிவுக் கருத்துகளும் நுழைந்த காலப்பகுதி அது. பாரதிதாசன், உடுமலை நாராயணகவி, கம்பதாசன் இவர்களைத் தொடர்ந்து திரைத்துறையினுள் கண்ணதாசன் புகுந்தார். அழியாத இலக்கியங்கள் என்று பாராட்டப்படும் ஆயிரக் கணக்கான திரைப்பாடல்களை எழுதினார். இவரது திரைப்பட உரையாடல்களில் இலக்கியத் தரம் இருந்தது.

### அரசியலும் கொள்கையும்

அரசியலில் திராவிட இயக்கத்திலிருந்து அதற்கு எதிரான தேசிய இயக்கத்திற்கு மாறினார். இந்தக் கொள்கை மாற்றம் இவரது இலக்கியப்



10811A_rev2.indd 1 12/5/2018 3:48:29 PM

படைப்புகளில் இருவேறு முரண்பட்ட நிலைகளை ஏற்படுத்தி விட்டது. நாடு, இனம், மொழி, சமயம் பற்றிய கருத்துகளில் இந்த முரண்பட்ட நிலைகளைக் காணலாம்.

குறிப்பு

## படைப்புகள்

ஆறு கவிதைத் தொகுதிகள்; ஆயிரக் கணக்கான திரைப்பாடல்கள்; மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி என்னும் குறுங்காவியங்கள்; இயேசு காவியம், கிருஷ்ண அந்தாதி, தைப்பாவை ஆகியவை இவரது கவிதைப் படைப்புகள். வனவாசம், மனவாசம், அர்த்தமுள்ள இந்து மதம் இவை இவரது உரைநடைப் படைப்புகளில் சிறந்தவை. செப்புமொழி, குட்டிக்கதைகள் ஆகிய தொகுப்புகள் புகழ்பெற்றவை.

பல திரைப்படங்களுக்குத் திரைக்கதை, உரையாடல் தீட்டியுள்ளார். பல புதினங்களைப் படைத்துள்ளார். சேரமான் காதலி இந்திய அளவில் சிறந்த இலக்கியப் படைப்புக்கு வழங்கப்படும் சாகித்ய அகாதமி விருது பெற்றது.

தென்றல், தென்றல்திரை, கடிதம், கண்ணதாசன் முதலிய சிறந்த இலக்கிய இதழ்களை நடத்தினார். கண்ணதாசன் தமிழின் தலைசிறந்த இலக்கிய இதழ்களுள் ஒன்றாகும்.

## மறைவு

அமெரிக்க சிகாகோ நகரில் 17.10.1981 அன்று உயிர் நீத்தார்.

கவிஞர் கண்ணதாசனின் பாடல்களில் ஸ்ரீ கிருஷ்ண கானம் என்ற பேரில் ஐந்து பாடல்கள் பாடமாக உள்ளன. அவையாவன

1. புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே…
2. குருவாயூருக்கு வாருங்கள்…
3. கோகுலத்து பசுக்கள்…
4. கோகுலத்தில் ஒரு நாள் ராதை…
5. ஆயர்பாடி மாளிகையில்…

---

### 1

---

புல்லாங் குழல் கொடுத்த மூங்கில்களே – எங்கள்
புருஷோத்தமன் புகழ் பாடுங்களே!

குறிப்பு

புல்லாங் குழல் கொடுத்த மூங்கில்களே – எங்கள்
புருஷோத்தமன் புகழ் பாடுங்களே!
வண்டாடும் கங்கை மலர்த் தோட்டங்களே - எங்கள்
மதுசூதனன் புகழ் பாடுங்களே!

பன்னீர் மலர் சொரியும் மேகங்களே - எங்கள்
பரந்தாமன் மெய்யழகைப் பாடுங்களே
தென்கோடித் தென்றல்தரும் ராகங்களே - எங்கள்
ஸ்ரீ கிருஷ்ண மூர்த்திபுகழ் பாடுங்களே - எங்கள்
ஸ்ரீ கிருஷ்ண மூர்த்திபுகழ் பாடுங்களே.
குருவாயூர் தன்னில் அவன் தவழ்கின்றவன் - ஒரு
கொடியோடு மதுராவை ஆள்கின்றவன்
திருவேங்கடத்தில் அவன் அருள்கின்றவன் - அந்த
ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொள்கின்றவன் - அந்த
ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொள்கின்றவன்

பாஞ்சாலி புகழ் காக்க தன்கை கொடுத்தான் - அந்த
பாரதப்போர் முடிக்கச் சங்கை எடுத்தான்
பாண்டவர்க்கு உரிமையுள்ள பங்கைக் கொடுத்தான் - நாம்
படிப்பதற்குக் கீதை என்னும் பாடம் கொடுத்தான் - நாம்
படிப்பதற்குக் கீதை என்னும் பாடம் கொடுத்தான் - புல்லாங்

## 2

குருவா யூருக்கு வாருங்கள் - ஒரு
குழந்தை சிரிப்பதைப் பாருங்கள்
ஒருவாய் சோறுஊட்டும் தாய்முன்
உட்கார்ந் திருப்பதைக் காணுங்கள்...குரு

கண்ணனின் மேனி கடல்நீலம் - அவன்
கண்கள் இரண்டும் வான்நீலம்

கடலும் வானும் அவனே என்பதைக்
காட்டும் குருவாயூர்க் கோலம்...குரு

சந்தியா காலத்தில் நீராடி...அவன்
சந்நிற வுருவார் ஒருகோடி ... குரு

குறிப்பு

நாராயண நாராயண ஹரிஹரி
நாராயண நாராயண
நாராயண நாராயண ஹரிஹரி
நாராயண நாராயண

சந்தியா காலத்தில் நீராடி – அவன்
சந்நிதி வருவார் ஒருகோடி
மந்திரக் குழந்தைக்கு வாகைசாத்து
மாலைகள் இடுவார் குறைவோடி
நாராயண ... நாராயண ... ஹரிஹரி ... குரு

உச்சிக் காலத்தில் சிருங்காரம் - அவன்
ஒவ்வொரு அழகுக்கும் அலங்காரம்

பச்சைக் குழந்தையைப் பார்க்கும்போது
பாவையர் தாய்மை ரீங்காரம்

நாராயண ... நாராயண
நாராயண ஹரிஹரி நாராயணா
நாராயண நாராயண
நாராயண ஹரிஹரி நாராயணா

மாலை நேரத்தில் சீவேலி – அவன்
மாளிகை முழுவதும் நெய்வேலி
நெய்விளக் கேற்றி கண்ணிகள் அகற்று
நித்தம் தருவாள் ஸ்ரீ தேவி

சாத்திரம் தந்த கண்ணனுக்கு
ராத்திரிப் பூஜை ஒருகோடி
பாத்திரம் கண்ணன் பால்போல் மக்கள்
பக்தியில் சிறந்த உயர்நீதி

நாராயண ... நாராயண
நாராயண ... ஹரிஹரி நாராயணா
நாராயண நாராயண
நாராயண ஹரிஹரி நாராயணா

குருவா யூருக்கு வாருங்கள் - ஒரு



10811A_rev2.indd 4 12/5/2018 3:48:29 PM

குழந்தை சிரிப்பதைப் பாருங்கள்
ஒருவாய் சோறுஊட்டும் தாய்முன்
உட்கார்ந் திருப்பதைக் காணுங்கள்...குரு

நாராயண ... நாராயண
நாராயண ... ஹரிஹரி நாராயணா
நாராயண நாராயண
நாராயண ஹரிஹரி நாராயணா...குரு

குறிப்பு

## விளக்கவுரை

### 1

கண்ணனிடம் கொண்ட பக்தி காரணமாகத் தன் பெயரைக் கண்ணதாசன் என்று புனைந்து கொண்டவர் கவியரசர். இந்த ஐந்து பாடல்களிலும் கிருஷ்ணனின் புகழைத்தான் பாடுகிறார்.

புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே என்று தொடங்கும் பாடலில் கவிஞர் இயற்கைப் பொருள்களை அழைக்கிறார். மூங்கில்களே மலர்த் தோட்டங்களே மேகங்களே தென்றலே நீங்கள் கண்ணன் புகழ் பாடுங்கள். கண்ணன் கைப்பட, வாய்ப்பட, குழலூதப் புல்லாங்குழல் கொடுத்தன மூங்கில்கள். ரீங்காரம் இடும் வண்டுகளை உடையன மலர்த்தோட்டங்கள். கண்ணன் நிறத்தை ஒத்தன மேகங்கள். தென்கோடியில் பிறந்ததனால் ராகங்களை உடையன தென்றல. ஆகவே கண்ணன் புகழ்பாட நீங்கள் தகுதி உடையவர்கள். அதனால் அவன் புகழைப் பாடுங்கள் என்று வேண்டுகிறார். கண்ணனைப் புருஷோத்தமன், மதுசூதனன், பரந்தாமன், கிருஷ்ணமூர்த்தி என்று பல பெயராலும் அழைக்கிறார். உலகம் முழுவதும் கண்ணன் புகழ் பரவ வேண்டும் என்பது கவிஞனின் பெரு விருப்பம்.

அடுத்து கண்ணனின் பல செயல்களையும் குறிப்பிடுகிறார். குருவாயூரில் தவழ்கிறான். மதுராவை ஆள்கின்றான் திருவேங்கடத்தில் ஏழு மலையானாக அருள்புரிகின்றான் திருவரங்கத்தில் பள்ளி கொண்ட பெருமாளாக விளங்குகின்றான். கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, வடநாடு என்று பல இடங்களிலும் புகழோடு நிறைந்து நிற்கும் கண்ணனைக் கவிஞர் இப் பாடலில் நினைந்து போற்றிப் புகழ்கிறார்.

அடுத்து பிறருக்கு உதவும் கண்ணனின் பெருந்தன்மையைக் கவிஞர் பாடுகிறார். துரியோதனன் அவையில் பாஞ்சாலி துகிலுரியப்படுகிறாள்.



10811A_rev2.indd 5 12/5/2018 3:48:30 PM

தன்மானம் காக்கப் போராடுகிறாள். இறுதியில் கண்ணனை நினைக்கிறாள். கண்ணன் அபயக் கரம் காட்ட அவள் புகழ் காப்பாற்றப்படுகிறது.

குறிப்பு

கண்ணனின் சங்கநாதம் பாரதப் போரை முடித்து வைக்கிறது. அருச்சுனனுக்குத் தேரோட்டியாக அமைவதோடு பாண்டவர் வாழ்க்கை முழுவதற்கும் வழிகாட்டியாகவும் அமைகின்றான் கண்ணன். அவன் நெறிப்பட்டதனால் பாண்டவர்கள் பாரதப்போரிலும் வென்று ஆட்சி பெறுகிறார்கள். போர்க்களத்தில் பிறந்ததுதான் கீதோபதேஷம். அது கண்ணனுடைய அறிவுரை, அருளுரை. அது அருச்சுனனுக்கு மட்டுமன்று அகில உலகத்தினருக்கும் அருளியதாகும்.

புருஷோத்தமன் புகழ் பாடுங்களே! கிருஷ்ணமூர்த்தி புகழ் பாடுங்களே ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொள்கின்றவன், படிப்பதற்குக் கீதை என்னும் பாடம் கொடுத்தான் என்று இரட்டித்து வருபவை. கவிஞர் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று நினைத்துப் பாடுவனவாகும். பெரும்பாலும் இசைப் பாடல்களில் இவ்வாறு வரும்.

## 2

கவிஞர் கண்ணதாசன் குருவாயூரப்பனைக் கண்ணனைக் குழந்தையாகக் கண்டு பாடுகிறார். அது சிரிப்பதைப் பாருங்கள். சோறு ஊட்டும் தாய்முன் உட்கார்ந்திருப்பதைப் பாருங்கள். இதைப் பார்ப்பதற்காகவே குருவாயூருக்கு வாருங்கள் என்கிறார்.

சூரியநிறக் கண்ணனைக் கவிஞர் எப்படி எல்லாம் பாராட்டுகிறார் பாருங்கள். அவன் மேனி கடல் நீலம் - அவன் கண்களோ வானத்து நீலம் - இந்தக் குருவாயூர்க் கோலம் கடலும் வானும் நானே என்று கண்ணன் மக்களுக்கு உணர்த்துவதாகப் பாடுகிறார். பஞ்ச பூதங்களையும் இறைவன் படைக்கிறான். எல்லாமாக நிறைந்து இருக்கிறான் என்பது ஆன்றோர் வாக்கு.

### இறை வழிபாடும் பயனும்

பக்தர்கள் சந்தியா காலத்தில் நீராடி இறைவன் முன்னர் வருவர். வாகை மாலைகள் சாத்துவர் – அவ்வாறு வருபவர்கள் கோடானுகோடி ‘பெறும் பயன்’ குறைகள் எல்லாம் அவர்களை விட்டு ஓடும். கண்ணன் திருநாமத்தை 108 முறைகள், 1008 முறைகள் என ஓதுவர். இவ்வாறு வழிபடும் பழக்கம் இன்றும் நாட்டில் உள்ளது. இறைவன் பெயரை உச்சரிக்க உச்சரிக்க அதுவே மந்திரமாகி விடுகிறது. இறைவனை மந்திரக் குழந்தை என்கிறார். நாராயண என்றும் ஹரி என்றும் பலமுறை கூறிக் கூறிக் கவிஞர் உருகுகிறார்.



10811A_rev2.indd 6 12/5/2018 3:48:30 PM

குறிப்பு

கண்ணனுக்குத் தான் எத்தனை விதமான அலங்காரங்கள். உச்சிக் காலத்தில் சிருங்கார நாயகனாகத் தோன்றுகின்றான். பச்சைக் குழந்தையைப் பார்க்கும்போது அதைப் பெற்றெடுத்த தாயை யல்லவா பாராட்டுகிறோம். அங்கு தாய்மை போற்றப் படுகிறது என்கிறார் கவிஞர்.

மாலை நேரத்தில் சீவேலி. அவன் மாளிகை முழுவதும் நெய் விளக்குகள். அதைக் கவிஞர் கோவிலைச் சுற்றி நெய்யாலேயே வேலியிட்டதாகக் கூறுகிறார். அது தான் கவிதை. நெய் விளக்கு ஏற்றியதற்குப் பயன் ஸ்ரீதேவி நித்தம் செல்வம் தருவாள் என்று உரைக்கிறார்.

இரவு நேரத்திலும் அவனுக்குக் கோடிப் பூசை நிகழும். கண்ணனைப் பாத்திரமாகவும், மக்களைப் பாலாகவும் உருவகம் செய்கிறார் கவிஞர். பாலுக்குப் பாத்திரம் தேவை. அதுபோல மக்களுக்குக் கண்ணன் தேவை. இவ்வாறு உணர்வதுதான் நீதி. அதுமட்டுமல்ல அது பக்தியுமாகும்.

திரும்பவும் நாராயணனைப் பலமுறை கூறி வழிபடுகிறார். மக்களே குருவாயூருக்கு வாருங்கள் அவன் அடக்கத்தைப் பாருங்கள் அழகை பாருங்கள்.

### வினா விடைகள்

1. கண்ணனைப் புகழ் பாட தகுதியுள்ளவர்கள் என இயற்கைப் பொருள்களை கண்ணதாசன் எவ்வாறு விளக்குகிறார்?

   புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே என்று தொடங்கும் பாடலில் கவிஞர் இயற்கைப் பொருள்களை அழைக்கிறார். மூங்கில்களே, மலர்த்தோட்டங்களே, மேகங்களே, தென்றலே நீங்கள் கண்ணன் புகழ் பாடுங்கள். கண்ணன் கைப்பட, வாய்ப்பட, குழலூதப் புல்லாங்குழல் கொடுத்தன மூங்கில்கள். ரீங்காரம் இடும் வண்டுகளை உடையன மலர்த்தோட்டங்கள். கண்ணன் நிறத்தை ஒத்தன மேகங்கள். தென்கோடியில் பிறந்ததனால் ராகங்களை உடையன தென்றல். ஆகவே கண்ணன் புகழ்பாட நீங்கள் தகுதி உடையவர்கள். அதனால் அவன் புகழைப் பாடுங்கள் என்று வேண்டுகிறார்.

2. சூரிய நிறக் கண்ணனை கவிஞர் எப்படி எல்லாம் பாராட்டுகிறார்?

   சூரிய நிறக் கண்ணனைக் கவிஞர், அவன் மேனி கடல் நீலம் - அவன் கண்களோ வானத்து நீலம் - இந்தக் குருவாயூர்க் கோலம் கடலும் வானும் நானே என்று கண்ணன் மக்களுக்கு உணர்த்துவதாகப் பாடுகிறார். பஞ்ச பூதங்களையும் இறைவன் படைக்கிறான். எல்லாமாக நிறைந்து இருக்கிறான் என்பது ஆன்றோர் வாக்கு.



10811A_rev2.indd 7 12/5/2018 3:48:30 PM

குறிப்பு

3. கவிஞர் மக்களை குருவாயூருக்கு வாருங்கள் என ஏன் அழைக்கிறார்?

கண்ணனுக்குத் தான் எத்தனை விதமான அலங்காரங்கள். உச்சிக் காலத்தில் சிருங்கார நாயகனாகத் தோன்றுகிறான். பச்சைக் குழந்தையைப் பார்க்கும்போது அதை பெற்றெடுத்த தாயை யல்லவா பாராட்டுகிறோம். அங்கு தாய்மை போற்றப் படுகிறது என்கிறார் கவிஞர்.

மாலை நேரத்தில் சீவேலி. அவன் மாளிகை முழுவதும் நெய் விளக்குகள். அதைக் கவிஞர் கோவிலைச் சுற்றி நெய்யாலேயே வேலியிட்டதாகக் கூறுகிறார். அது தான் கவிதை, நெய் விளக்கு ஏற்றியதற்குப் பயன் ஸ்ரீதேவி நித்தம் செல்வம் தருவாள் என்று உரைக்கிறார்.

இரவு நேரத்திலும் அவனுக்குக் கோடிப் பூசை நிகழும். கண்ணனைப் பாத்திரமாகவும், மக்களைப் பாலாகவும் உருவகம் செய்திறார் கவிஞர். பாலுக்குப் பாத்திரம் தேவை. அதுபோல மக்களுக்கு கண்ணன் தேவை. இவ்வாறு உணர்வதுதான் நீதி. அதுமட்டுமல்ல அது பக்தியுமாகும்.

மக்களே குருவாயூருக்கு வாருங்கள். அவன் அடக்கத்தைப் பாருங்கள். அழகைப் பாருங்கள் எனக் கூறுகிறார்.

4. "ஸ்ரீ கிருஷ்ண கானம்" என்ற பெயரில் பாடல்களை எழுதியவர் யார்?

ஸ்ரீ கிருஷ்ண கானம் என்ற பெயரில் கண்ணனைப் பற்றி பாடல்களை கவியரசு கண்ணதாசன் எழுதியுள்ளார்.

5. கண்ணதாசன் பற்றி குறிப்பு வரைக.

கவியரசு கண்ணதாசன் கவிதைகள் பல எழுதியவர். திரையுலகில் பெரும்புகழ் பெற்றவை இவர் தம் பாடல்கள். கண்ணதாசன் கவிதைகள் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. கவிஞரிடம் காதல் கவிதைகள் போலவே தத்துவக் கவிதைகளும் பிறக்கின்றன. இவர் இயற்பெயர் முத்தையா. "மன்னா உலகத்தில் மன்னுதல் குறித்தோர் தம் புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே" என்னும் வரிகளுக்கு இலக்கணமாக வாழ்ந்து மறைந்த பெருங் கவிஞர் ஆவார். சிறுகூடற்பட்டியில் பிறந்தவர். மாங்கனி, கிழவன்-சேதுபதி, இயேசு காவியம் போன்ற சிறுகாவியங்களும், தைப்பாவை என்னும் சிற்றிலக்கியமும் இவர் படைத்தவை. புதினம், சிறுகதை, நாடகம் என பல எழுதியுள்ளார். அர்த்தமுள்ள இந்துமதம் இவர் எழுதிய சிறந்த உரைநடை நூலாகும்.



10811A_rev2.indd 8 12/5/2018 3:48:30 PM

# கூறு 2

## 1

குறிப்பு

கோகுலத்துப் பசுக்கள் எல்லாம்
கோபாலன் குழலைக் கேட்டு
நாலுபடி பால் கறக்குது ராமாரி – அந்த
மோகனனின் பேரைச் சொல்லி
மூடிவைத்த பாத்திரத்தில்
மூன்றுபடி நெய்யிருக்குது கிருஷ்ணாரி
ராமாரி ஹரே கிருஷ்ணாரி ஹரிஹரி
ராமாரி ஹரே கிருஷ்ணாரி

கண்ணனவன் நடனமிட்டுக்
காளிந்தியை வென்றபின்தான்
தண்ணிப் பாம்பில் நஞ்சுஇல்லை ராமாரி – அவன்
கனிஇதழில் பால்குடித்து
பூதகியைக் கொன்ற பின்தான்
கன்னியர்க்கோர் வஞ்சமில்லை கிருஷ்ணாரி
ராமாரி ஹரே கிருஷ்ணாரி ஹரிஹரி
ராமாரி ஹரே கிருஷ்ணாரி

குளத்தில் முங்கிக் குளிக்கையிலே
கோவிந்தன் பேரைச் சொன்னால்
கழுத்தில் உள்ள தாலிமின்னுது ராமாரி – சேலை
திருத்தும் போது அவன் பெயரை
ஸ்ரீரங்கா என்று சொன்னால்
அழுத்தமான சுகமிருக்குது கிருஷ்ணாரி

ராமாரி ஹரே கிருஷ்ணாரி ஹரிஹரி
ராமாரி ஹரே கிருஷ்ணாரி

படிப்படியாய் மலையில் ஏறி
பக்தி செய்தால் துன்பம் எல்லாம்
பொடிப்பொடியாய் நொறுங்குதடி ராமாரி – அடி
படிப்பில்லாத ஆட்கள் கூட
பாதத்திலே போய் விழுந்தால்



10811A_rev2.indd 9 12/5/2018 3:48:30 PM

வேதத்துக்கே பொருள் விளங்குது கிருஷ்ணாரி
வேதத்துக்கே பொருள் விளங்குது கிருஷ்ணாரி
ராமாரி ஹரே கிருஷ்ணாரி ஹரிஹரி
ராமாரி ஹரே கிருஷ்ணாரி

குறிப்பு

## 2

கோகுலத்தில் ஒருநாள் ராதை
கோபத்தில் ஆழ்ந்திருந்தாள்
ஏனடி ராதா இன்று என்னடி
சேதி என்று ஸ்ரீநந்த பாலன் வந்தான்
தானொரு ஆனந்த ராகம் தந்தான்

கோபியர் தம்மைத்தொட்டு
கொஞ்கிய கைகள் எந்தன்
கூந்தலைத் தொடவேண்டாம் நான்
கோடியில் ஒன்று அல்ல
கோவிலின் பெண்மை என்னை
கொஞ்சிட வரவேண்டாம் - இனி என்
கோலமும் கெடவேண்டாம்...கோகு
ராதையின் ஊடலுக்கும்
கீதை படித்த கண்ணன்
கோதையை வசியம் செய்தான்
கோதையை வசியம் செய்தான் - அங்கு
சோலை யமுனை வெள்ளம் துள்ளி எழுந்து அவள்
மேனியை வசியம் செய்தான் - கண்ணன்
மீண்டொரு கலகம் செய்தான்...கோகு

## 3

ஆயர்பாடி மாளிகையில் தாய்மடியில் கன்றினைப்போல்
மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ – அவன்
வாய்நிறைய மண்ணைஉண்டு மண்டலத்தைக் காட்டியபின்
ஓய்வெடுத்துத் தூங்குகின்றான் ஆராரோ ... ஆயர்
பின்னலிட்ட கோபியரின் கன்னத்தில் கன்னமிட்டு
மன்னவன் போல்லீலை செய்தான் தாலேலோ – அந்த



10811A_rev2.indd 10 12/5/2018 3:48:30 PM

மந்திரத்தில் அவருறங்க – அந்த
மயக்கத்திலே இவனுறங்க
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ … ஆயர்

**குறிப்பு**

நாகபடம் மீதில் அவன் நர்த்தனங்கள் ஆடியபின்
தாகமெல்லாம் தீர்த்துக் கொண்டான் தாலேலோ – அவன்
மோகநிலை கூட ஒருயோகநிலை போலிருக்கும்
யாரவனைத் தூங்க விட்டார் ஆராரோ
யாரவனைத் தூங்க விட்டார் ஆராரோ … ஆயர்

கண்ணனவன் தூங்கிவிட்டால் காசினியே தூங்கிவிடும்
அன்னையரே துயில்எழுப்ப வாரீரோ – அவன்
பொன்னழகைப் பார்ப்பதற்கும் போதைமுத்தம் பெறுவதற்கும்
கன்னியரே கோபியரே வாரீரோ
கன்னியரே கோபியரே வாரீரோ … ஆயர்

## விளக்கவுரை

### 1

இந்தப் பாடலில் கண்ணனுடைய குழலோசையின் மகிமையை உணர்த்துகிறார். கோபாலன் குழல் கேட்டு கோகுலத்துப் பசுக்கள் எல்லாம் 4 படி பால் கறக்குது. உறியிலோ 3 படி நெய் இருக்குது என்று பெருமிதம் பொங்கக் கூறுகிறார்.

யமுனை நதி தீரத்தில் கண்ணன் காளிந்தி என்ற பாம்பினை வென்றான். அதன் பிறகு தான் தண்ணிப் பாம்புக்கு விஷமில்லை என்று கவிஞர் ஒரு புதிய கருத்தைக் கூறுகிறார். மேலும் கம்சனால் ஏவப்பட்டுக் கண்ணனைக் கொல்ல பூதகி என்ற கொடிய அரக்கி வருகிறாள். அவளுடைய விஷம் நிறைந்த பாலைக் குடித்துக் குடித்தே அவளைக் கண்ணன் கொன்று விடுகிறான். அது முதல் தான் பெண்களுடைய பாலிலும் விஷத்தன்மை நீங்கிப் பால் அமுதமாயிற்று என்றும் ஒரு புதிய கருத்தைக் கூறுகிறார்.

ராமாஹரி, கிருஷ்ணாஹரி என்பனை விரைவாகக் கூறும்போது ராமாரி, கிருஷ்ணாரி என்று ஒலிக்கப் பெறுவது இயல்பு. ராமாரி, கிருஷ்ணாரி, ஹரி, ஹரே என்றெல்லாம் கண்ணனை அழைக்கிறார்.



10811A_rev2.indd 11 12/5/2018 3:48:30 PM

குறிப்பு

## இறைவனை எப்போது, எப்படி வணங்குவது

இறைவனை எப்பொழுதும் வணங்கலாம். குளத்தில் குளிக்கையில் கோவிந்தா என்றால் கழுத்தில் உள்ள தாலி மின்னுது என்கிறார் கவிஞர். இதன் பொருள் - தாலிப் பாக்கியம் நிலைக்கிறது நீடிக்கிறது என்பதாகும். சேலை திருத்தும்போது ஸ்ரீரங்கா என்றால் அதிலேயும் ஒரு சுகம் இருக்கிறது. நாம் என்ன செயல்களைச் செய்தாலும் இறைவன் சிந்தனையோடு செய்வது நலம் பயக்கும் என்கிறார் கவிஞர்.

மேலும் படிப்படியாய் மலையில் ஏறிப் பக்தி செய்தால் துன்பம் பொடிப்பொடியாய் ஆகி நீங்கும் என்று உறுதி கூறுகிறார். அது மட்டுமல்ல படியாதவர்கள் கூடப் பக்தியோடு இறைவன் திருப்பாதத்தைச் சரண் அடைந்தால் அவர்கள் ஞானவான் ஆகலாம். வேதக் கருத்துக்களே கூட அவர்களுக்குப் புரியும் என்கிறார். பக்தியின் மேம்பாட்டைக் கண்ணதாசன் இவ்வாறு வலியுறுத்துகிறார்.

---

## 2

---

ஊடல் என்பது மருத நிலத்து ஒழுக்கமாகும். ஊடுதல் காமத்திற்கு இன்பம் என்பர் வள்ளுவர். ராதையின் ஊடலையும் கண்ணன் ஊடல் தணித்ததையும் இந்தப் பாடலில் கண்ணதாசன் பாடுகிறார்.

ராதை ஒரு நாள் கோகுலத்தில் கோபமாக இருக்கிறார். அதைப் பார்த்த கண்ணன் ஏனடி ராதா இன்று என்னடி சேதி ஒரு மாதிரியாய் இருக்கிறாயே என்று கேட்டு விட்டு அவள் கோபத்தைக் கொஞ்சம் கூடப் பொருட்படுத்தாமல் ஒரு ஆனந்த ராகம் தருகிறான்.

### ராதையின் பேச்சு

கோபியரைக் கொஞ்சிய கைகளால் கண்ணன் தன் கூந்தலைத் தொட வேண்டாம் என்கிறாள். தன்னுடைய கோலம் கெடவும் வேண்டாம் என்கிறார். மேலும் என்னை யாரென்று இந்தக் கண்ணன் நினைத்தான் நான் கோடிப் பெண்கள் போல ஒருத்தி இல்லை. நான் கோடிக்கு ஒருத்தி. என் பெண்மை கோவிலில் இருக்க வேண்டிய பெண்மையாகும் என்று ராதை தன் பெருமிதம் தோன்றப் பேசுகிறாள்.

உலகத்திற்கே கீதை தந்த கண்ணன் இவள் உள்ளத்தை அறிய மாட்டானா கோதையைத் தன் வழிக்குக் கொண்டு வருகிறான். அவளை



10811A_rev2.indd 12 12/5/2018 3:48:30 PM

குறிப்பு

வசியம் செய்கிறான். அவனுடைய முயற்சியைக் கவிஞர் அடுக்கிச் சொல்கிறார். அந்த வசியத்தில் யமுனை வெள்ளம் துள்ளி எழுகிறது பாய்ந்து பரவுகிறது.

ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின் என்பர் வள்ளுவர்

இப்பாடலில் கவிஞர் மக்களுடைய ஊடல் ஒழுக்கத்தைச் சிறப்பிக்கிறார்.

## 3

### தாலாட்டுப் பாடலும் கண்ணன் உறக்கமும்

அழுகின்ற குழந்தைகளுக்கு நிலவினைக் காட்டிச் சோறு ஊட்டலும், சோறு ஊட்டியபின் தொட்டிலிற் கிடத்தித் தாலாட்டித் தூங்க வைத்தலும் தாய்மார்கள் மேற்கொள்கின்ற இன்பக் கடமைகளாகும். இப்பாடலில் கவிஞர் தாலாட்டுகிறார் கண்ணன் தூக்கத்தைப் பாடுகிறார்.

ஆயர்பாடி மாளிகையில் கண்ணன் உறங்குகின்றான். தாய் மடியில் கன்றினைப் போல் என்று அவன் தூக்கத்திற்கு உவமை கூறுகிறார் கவிஞர். அன்னையிடம் துயில்கின்ற குழந்தை உலகை மறந்து அச்சமின்றித் துன்பமின்றி ஆதரவோடும் அணைப்போடும் தூங்குகிறது. அவ்வாறு தூங்குகிறான் கண்ணன்.

வாய்நிறைய மண்ணை உண்டு அன்னை யசோதைக்க வாயைத் திறந்து உலகையே காட்டுகிறான் கண்ணன். அதனால் அவனைக் கவிஞர் மாயக் கண்ணன் என்கிறார். ஒரு பெருஞ்செயல் செய்தபின் ஓய்வு எடுத்தல் உலக இயல்பு. அதுபோலக் கண்ணனும் ஓய்வெடுத்துத் தூங்குகின்றான்.

### கண்ணன் துயிலும் காசினியின் உறக்கமும்

கோபியரின் கன்னத்தில் கன்னம் வைத்து மன்னன் போல் லீலை செய்தவனே தூங்கு. அந்த லீலை காரணமாக மாதர்கள் தூங்குகின்றனர். அவர்கள் மட்டுமா அவனும் தூங்குகிறான். அவன் மட்டுமா அகில உலகமும் தூங்குகிறது.

ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடா தாரே
அடங்குவித்தால் ஆரொருவர் அடங்காதாரே என்று

திருநாவுக்கரசர் பாடுவார். அதுபோல இறைவனின் ஒடுக்கம் சகல உயிர்களின் ஒடுக்கமாகிறது. அதை இங்கு கண்ணதாசன் கண்ணன் உறங்க உலகம் உறங்குவதாகக் காட்டுகிறார்.



10811A_rev2.indd 13 12/5/2018 3:48:30 PM

குறிப்பு

மக்கள் தரையிலே நடனம் ஆடுவார்கள். இவன் மாயக் கண்ணன். அதனால் நாகப்படம் மீதில் ஆடுகின்றான். ஆடவேண்டும் என்ற அவனுடைய தாகம் தீர்கிறது. அவன் எந்த நிலையில் இருக்கிறான் அவன் மோகநிலை கூட ஒரு யோகநிலை போலிருக்கும் என்று கவிஞர் வியக்கிறார்.

அவன் தூங்கினால் உலகம் தூங்கிவிடும் உலகம் தூங்கக் கூடாது. அவனை எழுப்புங்கள் என்று அடுத்த பாடலில் கோரிக்கை விடுக்கிறார். அன்னையர் குழந்தையின் தூக்கத்தைக் கெடுத்து எழுப்புவார்களா எழுப்ப மாட்டார்கள். அதற்குக் காரணம் சொல்லுகிறார் கவிஞர் அவன் பொன்னழகைப் பார்ப்பதற்கும் போதை முத்தம் பெறுவதற்கும் அன்னையரே வாரீர் அவனை எழுப்புங்கள் என்கிறார்.

அன்னையர் வருவாரோ மாட்டாரோ

கன்னியரே கோபியரே வாரீர் என அடுத்து அழைக்கிறார். கண்ணன் துயிலெழுப்ப வருகின்றவர்களை வாழீர் என வாழ்த்துகிறார்.

இவ்வாறு கவிஞர் இந்தப் பாடலில் தாலாட்டும் பாடித் தூங்க வைத்துப் பின்னர் துயில் எழுப்பவும் பாடுகிறார்.

ஸ்ரீ கிருஷ்ண கானம் மொத்தத்தில் கண்ணன் பெருமையையும், அவன் குழலின் நாதப் பெருமையையும் இசைக்கிறது.

### வினா விடைகள்

1. குழலோசையின் சிறப்பாகக் கண்ணதாசன் கூறுவதை விளக்குக.

   கோபாலன் குழல் கேட்டு கோகுலத்துப் பசுக்கள் எல்லாம் 4 படி பால் கறக்குது. உறியிலோ 3 படி நெய் இருக்குது என்று குழலோசையின் மகிமையை பெருமை பொங்கக் கூறுகிறார்.

2. பெண்களின் தாய்ப்பாலை அமுதத்திற்கு எவ்வாறு ஆசிரியர் ஒப்பிடுகிறார்?

   யமுனை நதி தீரத்தில் கண்ணன் காளிந்தி என்ற பாம்பினை வென்றான். அதன் பிறகு தான் தண்ணிப் பாம்புக்கு விஷமில்லை என்று கவிஞர் ஒரு புதிய கருத்தைக் கூறுகிறார். மேலும் கம்சனால் ஏவப்பட்டுக் கண்ணனைக் கொல்ல பூதகி என்ற கொடிய அரக்கி வருகிறாள். அவளுடைய விஷம் நிறைந்த பாலைக் குடித்துக் குடித்தே அவளைக் கொன்று விடுகிறான். அது முதல் தான் பெண்களுடைய பாலிலும் விஷத்தன்மை நீங்கிப் பால் அமுதமாயிற்று என்றும் ஒரு புதிய கருத்தைக் கூறுகிறார்.



10811A_rev2.indd 14 12/5/2018 3:48:31 PM

குறிப்பு

3. இறைவனை எப்போது, எப்படி வணங்குவது என கவிஞர் கூறுகிறார்?

கவிஞர் கூறுவது, இறைவனை எப்பொழுதும் வணங்கலாம். குளத்தில் குளிக்கையில் கோவிந்தா என்றால் கழுத்தில் உள்ள தாலி மின்னுது என்கிறார் கவிஞர். இதன் பொருள் - தாலிப் பாக்கியம் நிலைக்கிறது, நீடிக்கிறது என்பதாகும். சேலை திருத்தும்போது ஸ்ரீரங்கா என்றால் அதிலேயும் ஒரு சுகம் இருக்கிறது. நாம் என்ன செயல்களைச் செய்தாலும் இறைவன் சிந்தனையோடு செய்வது நலம் பயக்கும் என்கிறார் கவிஞர்.

மேலும் படிப்படியாய் மலையில் ஏறிப் பக்தி செய்தால் துன்பம் பொடிப்பொடியாய் ஆகி நீங்கும் என்று உறுதி கூறுகிறார். அது மட்டுமல்ல, படியாதவர்கள் கூடப் பக்தியோடு இறைவன் திருப்பாதத்தைச் சரண் அடைந்தால் அவர்கள் ஞானவான் ஆகலாம். வேதக் கருத்துக்களே கூட அவர்களுக்குப புரியும் என்கிறார். பக்தியின் மேம்பாட்டைக் கண்ணதாசன் இவ்வாறு வலியுறுத்துகிறார்.

4. கண்ணனின் உறக்கத்தை எதற்கு ஒப்பிடுகிறார் கவிஞர்?

ஆயர்பாடி மாளிகையில் கண்ணன் உறங்குகின்றான். தாய் மடியில் கன்றினைப் போல் என்று அவன் தூக்கத்திற்கு உவமை கூறுகிறார் கவிஞர். அன்னையிடம் துயில்கின்ற குழந்தை உலகை மறந்து அச்சமின்றித் துன்பமின்றி ஆதரவோடும் அணைப்போடும் தூங்குகிறது. அவ்வாறு தூங்குகின்றான் கண்ணன்.

5. கண்ணனை துயில் எழுப்ப எவ்வாறு கோபியரை அழைக்கிறார் கவிஞர்?

கண்ணன் தூங்கினால் உலகம் தூங்கிவிடும். உலகம் தூங்கக் கூடாது. அவனை எழுப்புங்கள் என்கிறார். அன்னையர் குழந்தையின் தூக்கத்தைக் கெடுத்து எழுப்புவார்களா? எழுப்ப மாட்டார்கள். அதற்க காரணமாக கவிஞர் அவன் பொன்னழகைப் பார்ப்பதற்கும், போதை முத்தம் பெறுவதற்கும் அன்னையரே வாரீர் அவனை எழுப்புங்கள் என்கிறார்.

மேலும், அன்னையர் வருவாரோ மாட்டாரோ கன்னியரே கோபியரே வாரீர் என அழைக்கிறார்.



10811A_rev2.indd 15 12/5/2018 3:48:31 PM

# கூறு 3

# பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

குறிப்பு

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாரதிதாசனின் கவிதைகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டவர்; பொதுவுடைமையை விரும்பியவர்; ஏழைகளின் வாழ்க்கையைக் கவிதையாக்கியவர்; இளமையிலிருந்தே சுயமரியாதையோடு வாழ்ந்தவர்; மக்களின் நிலை உயர எழுதியதாலும், அவர்கள் படும்பாட்டையும் பண்பாட்டையும் அவர்கள் புரிந்து கொள்ளும் முறையில் எழுதியதாலும் ' மக்கள் கவிஞர்' என அழைக்கப்பட்டவர். பொது மக்கள் புரிந்து கொள்ளும் படியாக எளிய பாடல்களைப் பாடித் திரைப்படத் துறையில் சாதனை படைத்தவர்.

பிறப்பிடம் : தஞ்சை மாவட்டத்திலுள்ள செங்கப்படுத்தான் காடு

தந்தை : அருணாசலக் கவிராயர்

தாய் : விசாலாட்சி

பிறப்பு : 13.04.1930

கல்வி : அண்ணன் கணபதி சுந்தரத்தோடு உள்ளூர் சுந்தரம் பிள்ளை திண்ணைப் பள்ளியில் அரிச்சுவடி படித்திருக்கிறார்.

அதில் அவருக்கு நாட்டமில்லை. ஆனால் அடிப்படைக் கல்வியை அண்ணனிடம் கற்றுக் கொண்டார். தம் வாழ்க்கையின் வழிகாட்டியாக, பட்டுக்கோட்டையார் அண்ணனையே ஏற்றுக்கொண்டார்.

தந்தை அருணாசலம் கவிஞராக இருந்ததால் அவர் மகன்களான கணபதி சுந்தரமும், கல்யாணசுந்தரமும் கவிபாடும் திறத்தைப் பெற்று இருந்தனர். பட்டுக்கோட்டையார் சிறுவயதிலேயே கவிதை பாடுவதில் ஆர்வம் காட்டினார்.

அவர் வாழ்ந்த ஊர் நிலவளம் நிறைந்தது. ஏரிக்கரையில் ஒருநாள் வயலைப் பார்க்கச் சென்ற பட்டுக்கோட்டையார் வீடு திரும்பும் போது, வேப்பமர நிழலில் அமர்ந்து ஏரியைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஏரியில் நீர் நெளிவதை, சூரிய ஒளிவீச்சில் நீர் சிரிக்கிறது எனக்கண்டு மகிழ்ந்தார். தாமரை மலர்கள் பளிச்செனக் காட்சியளித்தன. அந்த நேரத்தில் கெண்டைமீன் துள்ளித் தாமரை இலைமீது நீர்த்துளியைத் தெளித்துத் தலைகீழாய்க் குதித்தது. இதைப் பார்த்துக் கொண்டிருந்த அவர்,



10811A_rev2.indd 16 12/5/2018 3:48:31 PM

குறிப்பு

ஓடிப்போ ஓடிப்போ
கெண்டைக் குஞ்சே – கரை
ஓரத்தில் மேயாதே
கெண்டைக் குஞ்சே
தூண்டிக்காரன் வரும்நேரமாச்சு  ரொம்பத்
துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குஞ்சே
(கே. சீவபாரதி (தொ. ஆ), பட்டுக்கோட்டையார் பாடல்கள், ப. 63)

என்று பாடினார். இந்தப் பாட்டை எல்லோரிடமும் பாடிக் காட்டினார். அனைவரும் ரசித்தனர். இவ்வாறு பட்டுக்கோட்டையார் இளமையிலிருந்தே பாடல் எழுதி வளர்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அதைவிட, அந்த இளமைப் பருவத்திலேயே வர்க்க எண்ணம் - துன்புறுவோர்  துன்புறுத்துவோர் பற்றிய எண்ணம் - துன்புறுவோர் சார்பாக அவர்களுக்குத் துணையாக நிற்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குத் தோன்றிவிட்டது என்பதை இப்பாடல் தெளிவுபடுத்துகிறது. பிற்கால வளர்ச்சியில் தூண்டிலில் பிடிக்கப்படும் மக்களுக்கான படைப்பாளியாகவே அவர் ஆகிவிட்டார் என்பதைக் காணலாம்.

பெரியார்ஈ. வெ. ரா. 1925இல் காங்கிரசை விட்டு வெளியேறிச் சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். நீதிக் கட்சியோடு இணைந்து சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, பிற்பட்ட சாதியினர் கோயிலுக்குள் நுழையும் உரிமை, பெண் முன்னேற்றம் முதலியன குறித்துத் தீவிரமாகப் பேசினார். இதனால் நாட்டில் ஒரு புது எழுச்சி ஏற்பட்டது. இந்தக் காலக்கட்டத்தில் கவிஞர் கல்யாணசுந்தரம் அரசியல் போக்கையும், நாட்டின் நிலையையும் உணர்ந்து பாடல்கள் படைத்தார்.

பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனைகள், கல்யாணசுந்தரத்தின் பாடலில் பளிச்சிட்டன. “தான் பிறந்த சமூகத்தில் இருந்துவரும் மூடநம்பிக்கைகளையும், ஆசார அனுட்டானங்களையும் கிண்டல் செய்து பல பாடல்களைத் தன் நண்பர்களிடமும், உறவினர்களிடமும் பாடிக் காட்டிக் கிண்டல் செய்யும் பழக்கம் உடையவர் கவிஞர்” என்று திரு ஆ. மு. பழனிவேல் கூறுகிறார்.

பாரதிதாசன் பாடல்களின் தாக்கத்தால் பொதுவுடைமைச் சிந்தனைகளும், சமூகக் கொடுமைகளின் மீதான சாடலும் பட்டுக்கோட்டையார் கவிதைகளில் மேலோங்கித் தெரிந்தன.

கொடுக்கிற காலம் நெருங்குவதால் - இனி
எடுக்கிற அவசியம் இருக்காது



10811A_rev2.indd 17 12/5/2018 3:48:31 PM

இருக்கிறதெல்லாம் பொதுவாய்ப் போனால்
பதுக்குற வேலையும் இருக்காது
(பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல். படம்: திருடாதே. 1961)

குறிப்பு

என்று பொதுவுடைமை யுகத்தின் வருகையை அறிவிக்கிறார்.

பொதுமைச் சிந்தனைக்குப் பாரதிதாசன்தான் அடித்தளம் அமைத்துக் கொடுத்திருக்கிறார். பட்டுக்கோட்டையார் விவசாயக் குடும்பத்தில் பிறந்ததால் ஏழை விவசாயியின் துயரங்களைத் தெரிந்து சொல்கிறார்.

வாழை நிலைக்குது சோலை தழைக்குது
ஏழைகளுக்கதில் என்ன கிடைக்குது
கூழைக்குடிக்குது; நாளைக் கழிக்குது
ஓலைக்குடிசையில் ஒட்டிக்கிடக்குது
காடு வௌஞ்சென்ன மச்சான் - உழைப்போர்க்கு
கையுங்காலுந்தானே மிச்சம்
(பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள், ஜனசக்தி 1956)

கவிஞரின் சொந்த வாழ்க்கைச் சூழல், அவர் வாழும் சமூகம் ஆகியன கவிதையின் கருப்பொருளாகின்றன என்பதை இதன்மூலம் உணரலாம்.

## தொழிலும் பாட்டும்

பட்டுக்கோட்டையார் தம் பாடல்களில் உழவர், கட்டிடத் தொழிலாளர், சுரங்கத் தொழிலாளர், கல் உடைக்கும் தொழிலாளர், மீன் பிடிப்போர், முத்தெடுப்போர், தச்சர், தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர் போன்றோரைப் பாடியதுடன் அவர்கள் விழிப்படையவும் பாடல்கள் மூலம் உணர்ச்சி ஊட்டுகிறார்.

செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமை தான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி – கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி
(படம்: ஆளுக்கொரு வீடு, 1960)

இந்த வரிகளில், கையும் காலையும் பயன்படுத்திக் கடமை உணர்வோடு செய்கின்ற தொழிலைத் தெய்வமாகப் போற்றி உழைத்தால் அதுவே வாழ்வுக்கான சிறந்த செல்வம் என்ற கருத்தை அழுத்தமாகச் சொல்கிறார்.

ஓதுவார் தொழுவாரெல்லாம்



10811A_rev2.indd 18 12/5/2018 3:48:31 PM

உழுவார் தலைக்கடையிலே
உலகம் செழிப்பதெல்லாம்
ஏர் நடக்கும் நடையிலே

(வே. பாலசுப்பிரமணியன், பட்டுக்கோட்டையார் பாடல்கள் – ஒரு திறனாய்வு, பக்கம் 181)

குறிப்பு

என்ற வரிகளில், உடல் உழைப்பில் ஈடுபடாமல் உயர்ந்தவர்களென்று சொல்லிக் கொள்கின்ற ஓதும் தொழில் செய்வோரைக் காட்டிலும் சிறந்தவர், உலகம் செழிக்க உழவுத்தொழிலைச் செய்கிறவர்கள்தான் என்று உழவரையும், உழவையும் பெருமைப்படுத்துகிறார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். கல்வி அதிகம் பயிலாதவர்.

உழைப்பாளர்களையும், தொழிலாளர்களையும் கவிதையின் பாடு பொருளாக்கியவர்; ஏழை × பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு மாறப் பாடியவர். விவசாயக் குடும்பத்தில் பிறந்ததால் விவசாயிகளின் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு எழுதியவர்.

பொதுவுடைமை விரும்பி; வர்க்க எதிர்ப்பாளர்; பெரியார் ஈ. வெ. ரா. வின் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பாடலில் பாடியவர்; மூட நம்பிக்கைகளைச் சாடியவர்; சாதி ஏற்றத்தாழ்வு கூடாது எனப் பாடியவர்.

திரைப்படத்தை தம்முடைய கருத்துக்களைச் சொல்ல ஊடகமாகப் பயன்படுத்தியவர்; நல்ல இலக்கியப்படைப்பாளர். இக்கருத்துகளை இப்பாடத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

## 1. நெஞ்சில் குடியிருக்கும்

பெண் நெஞ்சில் குடியிருக்கும்
அன்பருக்கு நானிருக்கும்
நிலைமை என்னவென்று தெரியுமா
நினைவைப் புரிந்து கொள்ள முடியுமா – என்

ஆண் கண்ணில் குடியிருக்கும்
காதலிக்கு நானிருக்கும்
கவனம் என்னவென்று தெரியுமா
கருத்தைப் புரிந்து கொள்ள முடியுமா – என்
கருத்தைப் புரிந்து கொள்ள முடியுமா



10811A_rev2.indd 19 12/5/2018 3:48:31 PM

குறிப்பு

பெண் என்றும் பேசாத தென்றல்
இன்று மட்டும் காதில் வந்து
இன்பம் இன்பம் என்று சொல்வதும் என்ன

ஆண் ஓரவிழிப் பார்வையிலே
உள்ள தெல்லாம் சொல்லி விட்டு
ஒன்றும் தெரியாததுபோல்
கேட்பதுமேனோ

பெண் மலர்க்கொடி தலையாட்ட
மரக்கிளையும் கைநீட்டக்
கிளையில் கொடி இணையும்படி
ஆனதுமேனோ

ஆண் இயற்கையின் வளர்ச்சிமுறை
இளமை செய்யும் கிளர்ச்சி முறை
ஏனென்று நீ கேட்டால் யானறிவேனோ

(படம்: இரும்புத்திரை)

## 2. செய்யும் தொழிலே தெய்வம்

செய்யும் தொழிலே தெய்வம் - அந்தத்
திறமை தான் நமது செல்வம்
கையும் காலுந்தான் உதவி – கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி (செய்யும்)

பயிரை வளர்த்தால் பலனாகும் - அது
உயிரைக் காக்கும் உணவாகும்
வெயிலே நமக்குத் துணையாகும் - இந்த
வேர்வைகள் எல்லாம் விதையாகும்

தினம் வேலை உண்டு குலமானம் உண்டு
வருங்காலம் உண்டு அதை நம்பிடுவோம் (செய்யும்)

சாமிக்குத் தெரியும் பூமிக்குத் தெரியும்
ஏழைகள் நிலைமை – அந்தச்
சாமி மறந்தாலும் பூமி தந்திடும்



10811A_rev2.indd 20 12/5/2018 3:48:31 PM

தகுந்த பலனை - இதைப்
பாடிப் பாடி விளையாடி ஆடிப் பல
கோடிக் கோடி முறை கும்பிடுவோம் (செய்யும்)

குறிப்பு

காயும் ஒருநாள் கனியாகும் - நம்
கனவும் ஒருநாள் நனவாகும்
காயும் கனியும் விலையாகும் - நம்
கனவும் நினைவும் நிலையாகும் - உடல்

வாடினாலும் பசி மீறினாலும் - வழி
மாறிடாமலே வாழ்ந்திடுவோம் (செய்யும்)

(— ஆளுக்கொரு வீடு)

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் என்ற நூலிலிருந்து இவை எடுக்கப் பெற்றன.

## விளக்கவுரை

பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலிக்கப் பிறந்தவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். மக்கள் கவியாக விளங்கிய இவர் ஏழை எளிய மக்களுக்காகவே பாடியவர் ஆவார். இவர் பாடல்களின் திறத்தாலே சினிமாவின் தரம் உயர்ந்தது.

தனியுடைமைக் கொடுமைகள் தீர
தொண்டு செய்யான் என்றும்
காயும் ஒரு நாள் கனியாகும் - நம்
கனவும் ஒரு நாள் நனவாகும் என்றும்
நம்பிக்கை தந்தார்.

தமிழ்த் தென்பாங்க சிந்து, இலாவணி போன்ற நாட்டுப் பாடல்களுக்குத் திரையுலகில் புத்துயிரூட்டினார்.

## காதற்பாட்டு

நெஞ்சில் குடியிருக்கும் என்ற பாடல் இரும்புத் திரை என்னும் படத்தில் வருகிறது. ஆணும் பெண்ணுமாகப் பாடும் பாடல்.

தன் நிலைமையை-நினைவைப் புரிந்து கொள்ள முடியுமா என்கிறாள் தலைவி. தன் கருத்தை-கவனத்தை அவளால் புரிந்து கொள்ள முடியுமா என்கிறான் தலைவன்.

தலைவி தென்றல், காதில் வந்து இன்பம் இன்பம் என்று சொல்லுவது ஏன் என்கிறாள்.

தலைவன் உன் பார்வையிலே உள்ளதெல்லாம் உனக்குத் தெரியாதா என்கிறான்.

தலைவி மலர்க்கொடி தலையாட்ட மரக்கிளை கைநீட்ட கிளையில் கொடி இணையும்படி ஆனதுமேனோ அவள் கேள்வி.

தலைவன் பதில் இயற்கையின் வளர்ச்சி முறை இளமை இளங்கொடி அருகிருக்கும் மரத்தைச் சுற்றிப் படரும் என்னும் இயல்பைப் பட்டுக்கோட்டையார் இப்படிப் பாடுகிறார்.

## செய்யும் தொழிலே தெய்வம்

பட்டுக்கோட்டையார் தொழிலின் மேன்மையை மக்களுக்கு உணர்த்துகிறார். செய்யும் தொழிலே தெய்வம் என்கிறார். பாரதியாரும், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்றார். தொழிலைத் திறமையாகச் செய்வதே செல்வம் என்றார். பிறருதவியை நம்ப வேண்டாம். நமக்குக் கையும் காலுமே உதவி என்று வலியுறுத்துகிறார். வேலை செய்வதால் குலமானம் காக்கலாம். எதிர்காலம் உண்டு என்று நம்பிக்கை தெரிவிக்கிறார்.

ஏழைகள் நிலைமை சாமிக்கும் தெரியும், பூமிக்கும் தெரியும். பூமி தரும் பலனைக் கும்பிடுவோம்.

உடல் வாடினாலும், பசி மீறினாலும் வழி மாறிடாமலே வாழ்ந்திடுவோம் என்று ஏழைகளுக்கு நல்வழி காட்டுகிறார். உழைத்து வாழு என்பது அவரது சித்தாந்தமாகும்.

## வினா விடைகள்

1. ‘நெஞ்சில் குடியிருக்கும்’ என்ற பாடலில் தலைவனும் - தலைவியும் எவ்வாறு உரையாடுகிறார்கள்?

   நெஞ்சில் குடியிருக்கும் என்ற பாடல் இரும்புத்திரை என்னும் படத்தில் வருகிறது. ஆணும் பெண்ணுமாகப் பாடும் பாடல். தன் நிலைமையை – நினைவைப் புரிந்து கொள்ள முடியுமா என்கிறாள் தலைவி. தன் கருத்தை – கவனத்தை அவளால் புரிந்து கொள்ள முடியுமா என்கிறான் தலைவன். தலைவி தென்றல், காதில் வந்து இன்பம் இன்பம் என்று சொல்லுவது ஏன் என்கிறாள். தலைவன் உன் பார்வையிலே உள்ளதெல்லாம் உணக்குத் தெரியாதா என்கிறான். தலைவி மலர்க்கொடி தலையாட்ட மரக்கிளை கைநீட்ட கிளையில் கொடி இணையும்படி ஆனதமேனா

என்று அவள் கேட்கிறாள். தலைவனின் பதில் இயற்கையின் வளர்ச்சி முறை இளமை இளங்கொடி அருகிருக்கும் மரத்தைச் சுற்றிப் படரும் என்னும் இயல்பைப் பட்டுக்கோட்டையார் இவ்வாறு விளக்குகிறார்.



2. பட்டுக்கோட்டையார் தொழிலின் சிறப்புகளாகக் கூறுவனவற்றைத் தொகுக்க.

பட்டுக்கோட்டையார் தொழிலின் மேன்மையை மக்களுக்கு உணர்த்துகிறார். செய்யும் தொழிலே தெய்வம் என்கிறார். பாரதியாரும், உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்றார். தொழிலைத் திறமையாகச் செய்வதே செல்வம் என்றார். பிறருதவியை நம்ப வேண்டாம். நமக்குக் கையும் காலுமே உதவி என்று வலியுறுத்துகிறார். வேலை செய்வதால் குலமானம் காக்கலாம். எதிர்காலம் உண்டு என்று நம்பிக்கை தெரிவிக்கிறார். ஏழைகள் நிலைமை சாமிக்கும் தெரியும். பூமிக்கும் தெரியும். பூமி தரும் பலனைக் கும்பிடுவோம். உடல் வாடினாலும், பசி மீறினாலும் வழி மாறிடாமலே வாழ்ந்திடுவோம் என்று ஏழைகளுக்கு நல்வழி காட்டுகிறார். உழைத்து வாழ வேண்டும் என்பது அவர் கூறுவதாகும்.

# கூறு 4

# மகாகவி பாரதியார்

குறிப்பு

வாழையடி வாழையெனத் தமிழ்ப் பாரம்பரியத்தைக் (வசயனவைழை) காத்து வரும் புலவர் திருக்கூட்டம் ஒன்று தமிழுக்கு உண்டு. அக்கூட்டத்திலே தாமும் ஒருவர் என உரிமை பாராட்டிக் கொண்டவர் பாரதியார். “எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா, யானும்வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்” (பாரதி அறுபத்தாறு: 1-2) என ஒப்புதல் வாக்குமூலம் தந்தவர் அவர். எட்டயபுரத்தில் ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்த அவர் “சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொல்புதிது,“எனக் கவிதை படைத்த அவரின் கண்ணன் என் விளையாட்டுப்பிள்ளை மற்றும் பாரத மாதா பற்றி இந்தப் பாடத்தில் படிக்கலாம்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையுலகின் தலைமகன் பாரதி. பாரதிதாசன் மொழியிலே குறிப்பிடுவது என்றால், பாரதி பைந்தமிழ்த் தேர்ப்பாகன்; அவன் ஒரு செந்தமிழ்த் தேனீ; சிந்துக்குத் தந்தை; குவிக்கும் கவிதைக்குயில். வைரமுத்துவின் வார்த்தைகளிலே கூறுவது என்றால் பாரதி, எட்டயபுரத்துக் கொட்டு முரசம்; சுதந்திரச் சூரியன்; தமிழுக்குப் புது ரத்தம் தந்த கவிஞன்; எழுத்துக்கும் வாழ்வுக்கும் இடையே பள்ளம் இல்லாத பாவலன்.

“இத் தரணியில் தமிழ்மொழி உள்ள வரையில் பாரதியாரின் தீஞ்சுவைச் சொற்கள் மந்திரம் போன்று ஒவ்வொரு தமிழனின் உள்ளத்திலும் ஒலித்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமில்லை”; என்பார் ப. கோதண்டராம்.

நம்மைப் பெற்று, வளர்த்து உருவாக்கும் தாயின் மீது நாம் மிகுந்தா பற்றுக் கொண்டிருப்போம் இல்லையா? தாய்க்கு ஒரு துன்பம் அல்லது ஆபத்து வந்தால், மிகவும் துடித்து விடுவோம்; துன்பப்படுவோம் அவள் துன்பத்தைப் போக்குவதற்கு நம்மால் முடிந்த உதவிகளை உடனே செய்வோம். அதைப்போல, நாம் பிறந்து வளர்ந்த, நமது தாய் நாட்டிற்கு ஒரு துன்பம் அல்லது ஆபத்து வந்தால் உடனே உதவ வேண்டும். இது நமது முதன்மையான கடமை. இதனையே பாரதியார் தமது தேசியப் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். இந்தப் பாடம் பாரதியார் இந்திய நாட்டையும், அதன் விடுதலையையும் பற்றிப் பாடிய பாடல்களை விளக்குகிறது. பாரதியாரின் தேசியப் பாடல்கள் பாரதநாடு, தமிழ்நாடு, சுதந்திரம்,தேசிய இயக்கப் பாடல்கள், தேசியத் தலைவர்கள், பிற நாடுகள் என்னும் தலைப்புகளின் கீழ், பல உள்தலைப்புகள் கொண்டு விளங்குகின்றன.



10811A_rev2.indd 24 12/5/2018 3:48:31 PM

குறிப்பு

பாரத நாடு பழம்பெருமை வாய்ந்த நாடு. சிறந்த பாரம்பரியத்தையும், உயர்ந்த பண்பாட்டையும் உடைய நாடு. இங்குத் தோன்றிய சிந்துவெளி நாகரிகம், உலக நாகரிகங்களுள் தொன்மையானது. நில வளமும் நீர்வளமும் கலைவளமும் மிகுந்த நாடு. இதன் சிறப்பினைப் பாரதியார் பல பாடல்களின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

தமிழில் கிடைக்கும் நூல்களில் மிகப் பழமையானது தொல்காப்பியம். அந்நூலில் திருமால், முருகன், இந்திரன், வருணன் முதலிய தெய்வங்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. அதையடுத்துத் தோன்றிய சங்க இலக்கியங்களிலும் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலங்களுக்குரிய தெய்வங்களுடன் சிவபெருமானைப் பற்றிய செய்திகளும் இடம் பெற்றுள்ளன. இருப்பினும் பக்தியை மட்டும் பாடல் கருத்தாகக் கொண்டு முதலில் எழுந்த நூல்கள் நாயன்மார்கள் இயற்றிய தேவாரம், திருவாசகம் மற்றும் ஆழ்வார்கள் இயற்றிய நாலாயிர திவ்ய பிரபந்தம் என்னும் நூல்களேயாகும். பாரதியார் பாடாத துறையே இல்லை என்று சொல்லுமளவு தமிழ்நாடு, தமிழ் மொழி, பாரத நாடு, குயில், கிளி, தராசு முதலியன பற்றிப் பாடியுள்ளார்.

பாரதியாரின் தெய்வப் பாடல்களாகத் தொகுக்கப்பட்டிருக்கும் பாடல்களில் முதலாவது இடம்பெற்றிருப்பது விநாயர் நான்மணிமாலை. இதையடுத்து, முருகன், வள்ளி, பராசக்கி (காளி, சக்தி, தேசமுத்துமாரி,கோமதி) இராமர், கண்ணன், திருமகள், கலைமகள், புத்தர், இயேசு கிறிஸ்து, அல்லா முதலிய தெய்வங்களைப் பற்றிப் பாடியிருக்கிறார். இயற்கையையும் தெய்வமாகவே கொண்டு சிறப்பாகப் பாடியுள்ளார்.

சமுதாயம், அரசியல் முதலியவற்றில் பாரதியார் புரட்சிகரமான சீர்திருத்தவாதி என்றாலும் தெய்வ நம்பிக்கை மனித வாழ்க்கைக்கு மிக இன்றியமையாதது என்று கருதினார். வேத ஆகம சாஸ்திரங்களின் உண்மைக் கருத்துகளைத் தெளிவாக உணர்ந்த பாரதி, கடவுளை நம்பினோர் கைவிடப் படார் என எண்ணினார் ஆயினும் எல்லா மதங்களும் மனித நலத்தையே பேசுகின்றன என்பது அவரது உறுதியான கொள்கை.

## தெய்வ நம்பிக்கையும் வழிபாடும்

'தெய்வ நம்பிக்கையும் வழிபாடும்' என்பது கடவுள் மீது கொண்ட உறுதியால் அவரை வணங்கும் செயலைக் குறிப்பது. பாரத நாட்டில் தெய்வ நம்பிக்கையும் வழிபாடும் பண்டைக்காலம் தொட்டே காணப்படுகிறது. தமிழ் நாட்டில் பக்தியைப் பாடல் பொருளாகக் கொண்டு பாடியவர்கள் எல்லாம் தாங்கள் வழிபட்ட தெய்வத்தை மட்டுமே பாடினார்கள். சைவ சமயத்தைச் சார்ந்த நாயன்மார்கள் சிவபெருமான் மீதும், வைணவ சமயத்தைச் சார்ந்த



10811A_rev2.indd 25 12/5/2018 3:48:32 PM

ஆழ்வார்கள் திருமால் மீதும் பாடியிருப்பதை நோக்கும்போது, அவர்கள் பிற சமயத்திலுள்ள தெய்வங்கள் பற்றிப் பாடவில்லை என்பது தெரிகிறது. ஆனால் பாரதியார் இவர்களிலிருந்து வேறுபட்டு நிற்கின்றார். அவர் வைதிகச் (வேதத்தை ஆதாரமாகக் கொண்ட சமயம்) சமயத்தைச் சார்ந்தவர். ஆயினும் பிற சமயத் தெய்வங்களான புத்தர், இயேசு கிறிஸ்து, அல்லா ஆகியோரையும் பாடியுள்ளார். அவர் பாடிய பாடல்களிலோ, கட்டுரைகளிலோ ஓர் இடத்தில் கூடச் சமய வெறுப்புணர்வு இடம்பெறவில்லை. மக்கள் எல்லோரும் சகோதரர்கள் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் ஆணிவேராய் நிலை பெற்றிருந்தது. அனைவரையும் ஒன்றாகப் பார்க்கும் பொதுநோக்கு, பரந்த உள்ளம், சமயப் பொறை போன்றவை அவரிடம் காணப்பட்டன. எல்லாத் தெய்வங்களையும் பாரதி வணங்குகிறார். இந்த ஒப்பற்ற மேலான நிலை வேறு எந்தக் கவிஞனிடமும் தென்படவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

## கண்ணன் பாட்டு

பாரதி சக்தியின் பல வடிவங்களைப் பாடியவர் என்பதை முன்னரே கண்டோம். சக்தியை மட்டுமன்றி, பிள்ளையார், முருகன், வள்ளி, கலைமகள், திருமகள், ஞாயிறு, நிலவு, அக்கினி, ஆகிய தெய்வங்களைப் பாடுவதோடு தோத்திரப் பாடல்கள் அல்லது தெய்வப்பாடல்களில் கண்ணனையும் பாடுகின்றார். தெய்வப் பாடல்களிலேயே பாரதியார் கண்ணனைக் கண்ணம்மா ஆக்கியிருக்கிறார். இவற்றைத் தவிரக் 'கண்ணன் பாட்டு' என்ற தலைப்பில் இருபத்து மூன்று தலைப்புகளில் கண்ணனைப் பல கோணங்களில் புனைந்து எழுதியுள்ளார். தோழன், தாய், தந்தை, சேவகன், அரசன், சீடன், சற்குரு, குழந்தை, விளையாட்டுப்பிள்ளை, காதலன், காதலி, ஆண்டாள், குல தெய்வம் எனப் பல்வேறு உறவு நிலைகளில் பாரதியார் கண்ணனை இப்பாடல்களில் வைத்து எண்ணுகின்றார்.

மகாபாரதம், பாகவதம் ஆகிய இரு நூல்கள் கண்ணனின் அழகு, இளமை, அறிவு, ஆண்மை, அரசியல் தந்திரம், ஆட்சித்திறம், எல்லாவற்றுக்கும் மேலான தெய்வப் பேராற்றல் ஆகியவற்றைப் புனைகின்றன. மகாபாரதத்தின் பகுதியாகிய 'பகவத் கீதை'யில் கண்ணனை அத்வைத வேதாந்தத்தின் சிகரமாகக் காண்கிறோம். தமிழில் தோன்றிய சிலப்பதிகாரம் காட்டும் ' ஆய்ச்சியர் குரவை', ஆழ்வார்களின் பாசுரங்கள் ஆகியன கண்ணனைப் போற்றுகின்றன. பகவத் கீதையில் அருச்சுனன் "மகனுக்குத் தந்தையாகவும், தோழனுக்குத் தோழனாகவும், காதலிக்குக் காதலனாகவும் அருள் செய்க" என்று கண்ணனை வேண்டுகிறான்.

நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்ப்
பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய்

(கண்ணன் பாட்டு – 4)

குறிப்பு

விளங்குகிறான் கண்ணன் எனப் பாரதியார் கூறுவது அவர் பகவத் கீதையின் தாக்கத்தைப் பெற்றிருந்தார் எனக்காட்டும். ஆழ்வார்கள் வைணவ சித்தாந்தங்களுடன் பக்தி உணர்ச்சியோடும் கண்ணனை அணுகியிருக்கின்றனர். பாரதி இந்த எல்லைகளைத் தாண்டி மிக உரிமையோடு கண்ணனை அணுகுகின்றார்.

### பாரதி நோக்கில் கண்ணன்

பாரதி கண்ணனைத் திருமாலின் ஓர் அவதாரமாகக் கண்டு, அந்த அவதாரத்தின் செயற்கரிய செயல்கள் புரிந்த வித்தகத்தைப் (திறமையை) போற்றி வழிபடும் தோத்திரப் பாடல்களுக்கு உாயி கருப்பொருளாகக் காணவில்லை. மனிதர்களின் வேண்டுகோளை ஏற்று அவர்களின் தேவைகளை நிறைவேற்றுகின்றவனாகவும், மனிதர்களுக்கு மிக நெருங்கிய உறவினனாகவும் பாரதி கண்ணனைக் காண்கிறார். அவருடைய இந்த அணுகு முறை குறித்து,

> “இறைவனைப் பாடுதல் இரண்டு வகை. ஒன்று உலகியல் வட்டத்திலிருந்து பாடுதல், பிறிதொன்று இறை வட்டத்திலிருந்து பாடுதல்’ என்கிறார் பி. ஸ்ரீ. பாரதி. உலகியல் வட்டத்திலிருந்து கண்ணன் பாடல்களைப் பாடுகிறார் என்பது தெளிவு. மீராபாய், ஆழ்வார்கள் போல் பாரதி பக்தி மயமாக மட்டும் வாழ்ந்தவரல்லர். தன் இறைப்பற்றின் வெளிப்படலாகப் பல பக்திப் பாடல்களைப் பாடுகிறார். என்றாலும் அவர் வறுமை, அறியாமை, நோய், பிணி ஆகிய சமுதாயத் தீமைகளை நீக்கும் ஆசையும், தேசவிடுதலை, பெண்விடுதலை போன்ற சமுதாயக் கடமைகளும் நிறைந்தவர். அவர் பாடிய கண்ணன் பாடல்களிலும் இச் சமுதாய உணர்வுதான் மேலோங்கிச் சிறக்கிறது”

என்று கூறுவது கருதத்தக்கது. கண்ணனை வைணவ சமயவழியாக அணுகும் அணுகுமுறை பாரதியிடம் இல்லை. இதனைப் பக்தி இலக்கியத்தின் ஒரு வளர்ச்சி என்றும், இறைவனைக் கோயிலிலிருந்து வீட்டுக்கே கொண்டு போய்விடும் நோக்கு எனவும் கூறலாம்.

### பக்தி இலக்கியத்தில் ஒரு பரிணாமம்

பக்தி இலக்கியத்தில் மூன்றுவகைக் கோட்பாடுகளை இலக்கியங்களின் வழியாக நாம் காணலாம். அவையாவன:



10811A_rev2.indd 27 12/5/2018 3:48:32 PM

குறிப்பு

1. இறைவனைப் போற்றும் மந்திரங்கள், (108, 1008 போன்றவை) போற்றிப் பாடல்கள் வழியாகத் தொழுது போற்றுதல்.
2. இறைவனை ஆண்டவனாகவும், பிறவிப்பிணி நீக்குபவனாகவும் கருதி வீட்டுலகம் வேண்டும் பாடல்களைப் பாடுதல்.
3. இறைவனை நாயகனாகவும் தன்னை நாயகியாகவும் வைத்து, பக்தியில் காதற்சுவையைக் குழைத்து என்னை ஏற்றுக் கொள் என வேண்டுதல்.

தமிழ் இலக்கிய வரலாற்றின் இருபது நூற்றாண்டு இலக்கியங்களில் மேற்கூறிய மூன்று தன்மைகளே காணப்பெறுகின்றன. பாரதி இந்த மூன்றையும் கடந்து, கடவுளை இன்னும் நெருக்கமான முறையில் நோக்குகின்றார். இந்த உரிமையைப் பாரதியாருக்கு யார் கொடுத்தது? நாட்டின், சமூகத்தின் கதியற்ற நிலை, பிணி தீர்ப்பதற்குரிய நெருக்கமான ஆள் இல்லாத சூழல் ஆகியன பாரதியாருக்கு இந்த நோக்கு நிலையை (உரிமையை) வழங்கியிருக்கிறது. மேலும் முன்னை இலக்கியங்களில் இந்த உரிமை மனப்பாங்க ஆங்காங்கு இல்லாமல் இல்லை. முருகனை கடவுள் ஆயினும் ஆக, மடவை மன்ற வாழிய முருகே' (முருகனே வாழ்க! நீ திண்ணமாக அறியாமை உடையவன்) என்று நற்றிணையில் (34, அடி 11) கூறுவதையும், இடைக்காலத்தில் இறைவனைப் பழிப்பதுபோல் புகழும் நெறியில் புலவர்கள் பாடிய (நிந்தாஸ்துதி) பாடல்களையும் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். எனினும் பாரதியே இதனை முழுப் பரிமாணங்களோடு விரிவுபடுத்தியவர் என்பதைக் கண்ணன் பாட்டுக் காட்டுக்கின்றது. பாரதியார் பாடியுள்ள தெய்வப்பாடல்களில், கண்ணன் பாட்டிலேயே இந்தப் பரிணாமம் தெளிவாக வெளிப்பட்டுள்ளது.

**பாரத நாடு**

பாரத நாடு பழம்பெருமை வாய்ந்த நாடு. சிறந்த பாரம்பரியத்தையும், உயர்ந்த பண்பாட்டையும் உடைய நாடு. இங்குத் தோன்றிய சிந்துவெளி நாகரிகம், உலக நாகரிகங்களுள் தொன்மையானது. நில வளமும் நீர்வளமும் கலைவளமும் மிகுந்த நாடு. இதன் சிறப்பினைப் பாரதியார் பல பாடல்களின் மூலம் வெளிப்படுத்துகிறார்.

'பாருக்குள்ளே நல்ல நாடு'

உலகில் உள்ள நாடுகளுள், பாரத நாடு ஒரு நல்ல நாடு. அறிவிலும், வீரத்திலும், மானத்திலும், கற்பிலும், இரக்கத்திலும், ஆன்மீகத்திலும் சிறந்த ஒரு நாடு. இவற்றைக் கருதித்தான் பாரதியார்,

பாருக்குள்ளே நல்ல நாடு – எங்கள்
பாரத நாடு (பாரத நாடு – பல்லவி)

என்று புகழ்கிறார். மேலும் இந்த நாட்டின் பெருமைக்கு என்ன காரணம் என்பதனையும் வரிசையாக எடுத்துக் கூறுகிறார். உலகிலுள்ள மிக உயர்ந்த மலையாகிய இமயமலையை உடைய நாடு. வற்றாத கங்கை நதியை உடைய நாடு. வேதங்களை உடைய நாடு. கௌதம புத்தர் தோன்றியதும் இந்நாடு. இத்தகைய சிறப்புகளைப் பாரதியார் தம் பாடல்களில் பாடிப் பெருமை அடைகிறார்.

**குறிப்பு**

மன்னும் இமயமலை எங்கள் மலையே
மாநிலம் மீதிது போல்பிறிது இலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் ஆறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே?

பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரான் அருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம் பெரும் நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே.

(எங்கள் நாடு – 1, 2)

இவ்வாறு, பாரத நாட்டின் பெருமையைப் பற்றிப் பாடி மகிழ்கிறார் பாரதியார்.

## திருப்பள்ளி எழுச்சி

பாரதியார் பாடிய பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி என்ற பாடல் எண்சீர் ஆசிரிய விருத்தத்தால் ஆனது. இது மாணிக்க வாசகர் சிவபெருமானைப் பள்ளி எழுந்தருளுமாறு பாடிய திருப்பள்ளி எழுச்சி என்னும் இலக்கிய வகை போன்றது. பாரதியார்,

நின்னெழில விழியருள் காண்பதற்கு எங்கள்
நெஞ்சகத்து ஆவலை நீஅறி யாயோ?
இன்னமும் துயிலுதி யேல்இது நன்றோ?
இன்னுயி ரேபள்ளி எழுந்தரு ளாயே!

(பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி – 14)

என்று பாரத மாதாவைத் துயில் உணர்த்துகிறார். இப்பாடல் பாரதியின் சுதந்திர வேட்கையைக் காட்டுகிறது.

பாரத நாட்டின் அனைத்து மாநில மக்களும் சுதந்திரத்திற்காகப் போராடும் நிலையை,

விதமுறு நின்மொழி பதினெட்டும் கூறி



10811A_rev2.indd 29 12/5/2018 3:48:32 PM

வேண்டிய வாறுஉனைப் பாடுதும் காணாய்
(பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி – 5)

குறிப்பு

(விதம் = வகை)

என்றும்,

பொங்கியது எங்கும் சுதந்திர நாதம்
(பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி – 2)

என்றும் விளக்குகின்றார்.

## 1. கண்ணன் – என் விளையாட்டுப் பிள்ளை

கேதாரம், கண்டஜாதி ஏகதாளம்
ரசங்கள் அற்புதம், சிருங்காரம்

தீராத விளையாட்டுப் பிள்ளை – கண்ணன்
தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை (தீராத) 1

தின்னப் பழங்கொண்டு தருவான் - பாதி
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பான்
என்னப்பன் என்னையன் என்றால் - அதனை
எச்சிற் படுத்திக் கடித்துக் கொடுப்பான் (தீராத) 2

தேனொத்த பண்டங்கள் கொண்டு – என்ன
செய்தாலும் எட்டாத உயரத்தில் வைப்பான்
மானொத்த பெண்ணடி என்பான் - சற்று
மனமகிழு நேரத்தி லேகிள்ளி விடுவான் (தீராத) 3

அழகுள்ள மலர்கொண்டு வந்தே – என்னை
அழஅழச் செய்துபின் கண்ணைமூ டிக்கொள்,
குழலிலே சூட்டுவேன் என்பான் - என்னைக்
குருடாக்கி மலரினைத் தோழிக்கு வைப்பான் (தீராத) 4

பின்னலைப் பின்னின் றிழுப்பான் - தலை
பின்னேதி ரும்புமுன் னேசென்று மறைவான்
வன்னப் புதுச்சேலை தனிலே – புழுதி
வாரிச் சொரிந்தே வருத்திக் குலைப்பான் (தீராத) 5

குறிப்பு

புல்லாங் குழல்கொண்டு வருவான் - அமுது
பொங்கித் ததும்புநற் கீதம் படிப்பான்
கள்ளால் மயங்குவது போலே — அதைக்
கண்மூடி வாய்திறந் தேகேட் டிருப்போம் (தீராத) 6

அங்காந் திருக்கும்வாய் தனிலே — கண்ணன்
ஆறேழு கட்டெறும் பைப்போட்டு விடுவான்
எங்காகிலும் பார்த்த துண்டோ — கண்ணன்
எங்களைச் செய்கின்ற வேடிக்கை யொன்றோ (தீராத) 7

விளையாட வாவென் றழைப்பான் - வீட்டில்
வேலையென் றாலதைக் கேளா திழுப்பான்
இளையாரொ டாடிக் குதிப்பான் - எம்மை
இடையிற் பிரிந்துபோய் வீட்டிலே சொல்வான் (தீராத) 8
அம்மைக்கு நல்லவன் கண்டீர் - மூளி
அத்தைக்கு நல்லவன் தந்தைக்கு மஃதே
எம்மைத் துயர்செய்யும் பெரியோர் — வீட்டில்
யாவர்க்கு நல்லவன் போலே நடப்பான் (தீராத) 9

கோளுக்கு மிகவுஞ் சமர்த்தன் - பொய்மை
சூத்திரம் பழிசொலக் கூசாச் சழக்கன்
ஆளுக் கிசைந்தபடி பேசி — தெருவில்
அத்தனை பெண்களையு மாகா தடிப்பான் (தீராத) 10

## 2. பாரத மாதா

### திருப் பள்ளி எழுச்சி

பொழுது புலர்ந்தது, யாஞ்செய்த தவத்தால்
புன்மை இருட்கணம் போயின யாவும்
எழுபசும் பொற்சுடர் எங்கணும் பரவி
யெழுந்து விளங்கிய தறிவெனும் இரவி
தொழுதுனை வாழ்த்தி வணங்குதற் கிங்குன்
தொண்டர்பல் லாயிரர் சூழ்ந்து நிற்கின்றோம்.
விழிதுயில் கின்றனை யின்னுமெந் தாயே,
வியப்பிது காண் பள்ளி யெழுந்தரு ளாயே 1
புள்ளினம் ஆர்த்தன, ஆர்த்தன முரசம்

**குறிப்பு**

பொங்கின தெங்கும் சுதந்திர நாதம்
வெள்ளிய சங்க முழங்கின கேளாய்
வீதியெ லாமணு குற்றனர் மாதர்
தெள்ளிய அந்தணர் வேதமும் நின்றன
சீர்த்திரு நாமமும் ஓதிநிற் கின்றார்.
அள்ளிய தெள்ளமு தன்னையெ மன்னை
ஆருயி ரேபள்ளி யெழுந்தரு ளாயே. 2

பருதியின் பேரொளி வானிடைக் கண்டோம்
பார் மிசை நின்னொளி காணுதற் கலந்தோம்
கருதிநின் சேவடி யணிவதற் கென்றே
கனிவுறு நெஞ்சக மலர்கொடு வந்தோம்
சுருதிகள் பயந்தனை சாத்திரம் கோடி
சொல்லரு மாண்பின் ஈன்றனை யம்மே
நிருதர்கள் நடுக்குறச் சூல்-கரத் தேற்றாய்
நிர்மலை யேபள்ளி யெழுந்தரு ளாயே 3

நின்னெழில் விழியருள் காண்பதற் கெங்கள்
நெஞ்சகத் தாவலை நீயறி யாயோ
பொன்னனை யாய்வெண் பனிமுடி யிமையப்
பொருப்பின னீந்த பெருந்தனப் பொருளே
என்னத வங்கள்செய் தெத்தனை காலம்
ஏங்குவம் நின்னருட் கேழையம் யாமே
இன்னமும் துயிலுதி யேலிது நன்றோ
இன்னுயிரேபள்ளி யெழுந்தரு ளாயே 4

மதலைய ரெழுப்பவும் தாய்துயில் வாயோ
மாநிலம் பெற்றவளிஃதுண ராயோ
சூதலை மொழிக்கிரங் காதொரு தாயோ
கோமக ளேபெரும் பாரதர்க் கரசே
விதமுறு நின்மொழி பதினெட்டுங் கூறி
வேண்டிய வாறுனைப் பாடுதுங் காணாய்
இதமுற வந்தெமை யாண்டருள் செய்வாய்
ஈன்றவ ளேபள்ளி யெழுந்தருள் வாயே 5



10811A_rev2.indd 32 12/5/2018 3:48:32 PM

குறிப்பு

## விளக்கவுரை

"எளிய பதங்கள், எளிய நடை எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோன் ஆகின்றான்" எனப் பாஞ்சாலி சபதத்தில் முகவுரையில் பாரதி கூறுகிறார். இக்கொள்கையைப் பின்பற்றியே பாரதியின் கவிதைகள் அமைகின்றன. எளிமையும் நேர்மையும் உண்மையும் இவர் கவிதைகளில் ஒளிவிடுகின்றன.

நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற் குழைத்தல் என்பார் பாரதியார்

வயிற்றுக்குச் சோறிடவேண்டும் - இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்
பாரினை உயர்த்திட வேண்டும் என்பது பாரதியின் ஆசை.

## 1. கண்ணன் – என் விளையாட்டுப் பிள்ளை

கண்ணனைத் தாயாகத் தந்தையாகக் குருவாக அரசனாகப் பலவடிவங்களில் அமைத்துப் பாடியவர் பாரதியார். அதுவும் போதாதென்று பெண்ணாகப் பாவித்து கண்ணம்மா என் காதலி, என் குலதெய்வம் என்றும் பாடுகிறார்.

கண்ணனைத் தீராத விளையாட்டுப் பிள்ளையாகக் காண்கிறார்.

கண்ணனின் குறும்புத்தனங்கள்

தெருவில் உள்ள அத்தனை பெண்களுக்கும் ஓயாத தொல்லையாக விளங்குகிறான் கண்ணன். அவன் செய்யும் குறும்புகள் தான் எத்தனை? எத்தனை? பெண்கள் கூறுவதாகப் பட்டியல் இடுகிறார் கவிஞர்.

1. பழங் கொண்டு வந்து தருவான். அதை முழுவதுமாகத் தின்ன விடமாட்டான். பாதியிலேயே தட்டிப் பறிப்பான். ஏனப்பா இப்படிச் செய்தாய் என்றால் அதை எச்சிற் படுத்துவான். பின்னர் கடித்துக் கொடுப்பான்.
2. தேன் போன்ற சுவையான பண்டங்கள் கொண்டு வருவான். அதை எடுக்கவே முடியாதபடி உயரத்தில் வைப்பான். அது நமக்கு வருத்தத்தைத் தரும். வருத்தம் போக்க மானொத்த பெண்ணடி என்று புகழ்வான். உலகில் புகழ்ச்சிக்கு மயங்காதவர் யார்? நாம் மயங்கி மகிழும் நேரத்தில் கிள்ளி விடுவான்.



10811A_rev2.indd 33 12/5/2018 3:48:32 PM

3. கண்ணைப் பறிக்கும் மலர் கொண்டு வருவான். கெஞ்சிக் கேட்டாலும் தர மாட்டான். அழ வைத்துப் பின்னர் கண்ணை மூடிக் கொள்ளச் சொல்லுவான். நம்மைக் குருடாக்கி மலரினைத் தோழிக்குச் சூட்டுவான்.

குறிப்பு

4. பின் இருந்து பின்னலை இழுப்பான். வேதனையோடு நாம் திரும்பும் முன்னே மறைவான். புத்தம் புதுச்சேலை உடுத்தி நாம் மகிழும்போது அதில் புழுதி வாரித் தூற்றி அழுக்கு ஆக்குவான்.
5. இதோ பார் புல்லாங்குழல் அதில் கீதம் ஒன்று இசைப்பான். அது தேவகானம் போலிருக்கும். மக்கள் கள்ளால் மயங்குவது போலே நாங்கள் கண் மூடி வாய் திறந்து கேட்டிருப்போம் என்று பெண்கள் கூறுகின்றனர். கீதத்துக்குக் கள்ளை உவமையாக்குகிறார் கவியரசர் பாரதியார். கள் குடித்தவர் மயங்குமாறு போல இசைமடுத்தவரும் மயங்குவார். அந்த மயக்கத்தில் கண் மூடிக் கொள்கிறது. வாய் திறந்து கொள்கிறது. காது நிறைந்து இருக்கிறது.
6. அங்காந்த வாய்தனில் ஒன்றா, இரண்டா, ஆறேழு கட்டெறும்பைப் போட்டு விடுவான் என்று குற்றம் சாட்டுகின்றனர் பெண்கள். எங்களிடம் கண்ணன் செய்கினற குறும்புகள் ஒன்றோ என்று பெண்கள் முறையிடுகின்றனர்.
7. விளையாட வா என்று அழைப்பான். வீட்டில் வேலை என்றாலும் கேட்க மாட்டான். கையைப் பிடித்து இழுப்பான். பின்னர் நம்மை விட்டுவிட்டு இளைய பெண்களோடு ஆடிக் குதிப்பான். இடையே போய் நம் வீட்டிலும் புகார் சொல்லி விடுவான்.
8. வீட்டில் உள்ள அம்மா, அப்பா, அத்தை – அத்தனை பேருக்கம் நல்லவன் போல் நடிப்பான். இவன் தொல்லை பொறாது இவனோடு திரிந்தால் வீட்டில் உள்ளவர்கள் நமக்குத் துன்பம் செய்வர்.
9. பொய் சொல்லல், பழி சொல்லல், சண்டை போடுதல் - இவற்றில் எல்லாம் கைதேர்ந்தவன் கண்ணன் ஆனாலும் ஆள் ஆளுக்கு இசைந்தபடி பேசி அத்தனை பெண்களையும் ஒன்றும் செய்யாத படி செய்து விடுவான்.

ஆகவே கண்ணன் - தீராத விளையாட்டுப் பிள்ளை என்ற பெண்களின் குரலைப் பாரதியார் பிரதிபலிக்கிறார்.

## 2. பாரத மாதா திருப் பள்ளி எழுச்சி

பெருங்கவிஞர் பாரதியார் சுதந்திர தாகம் கொண்டவர். அடிமைத் தளையில் மூழ்கிக் கிடக்கிற நாட்டை-மக்களைப் பார்க்கிறார். நெஞ்சு பொறுக்குதில்லையே என்று நொந்து போகிறார். அவருடைய ஆவேசம் பாரதமாதாவின் திருப்பள்ளி



10811A_rev2.indd 34 12/5/2018 3:48:32 PM

குறிப்பு

எழுச்சியாக மலர்கிறது. தன் பாட்டின் திறத்தாலே நாட்டுமக்களுக்குச் சுதந்திர உணர்வை ஊட்டி விடுகிறார்.

திருப்பள்ளி எழுச்சி என்பது துயில்கின்ற இறைவனைத் துயில் நீக்கி எழுந்தருளச் செய்வது. இங்கு பாரதமாதாவைத் துயிலெழச் செய்கிறார் பாரதியார். இது தொல்காப்பியத்தில் துயிலெடைநிலை எனக் குறிக்கப்பெறுகிறது.

### காலைக் காட்சி

மக்கள் செய்த தவத்தால் பொழுது விடிந்தது என்கிறார் பாரதியார். புல்லிய இருள் கூட்டங்கள் கலைந்தன. எங்கும் பொற்சுடரைப் பரப்பிச் சூரியன் எழுந்தான். சூரியனை – அறிவு எனும் சூரியன் - (அறிவன்) எழுந்தான் என்கிறார். நீ எழவில்லையே என்று பாரதியார். பாரத மாதாவைக் கேட்கிறார். உன்னைச் சூழ்ந்து உன்னை வணங்குவதற்குத் தொண்டர் பல்லாயிரவர் நிற்கிறார். தாயே இன்னுமா தூங்குகிறாய், எங்களுக்கு இது வியப்பைத் தருகிறது தாயே விழித்து எழு என்கிறார்.

காலைச் செயல்களாகப் பலவற்றை பாரதியார் காட்டுகிறார். பறவைகளின் ஓசை, முரசங்களின் ஓசை மக்களிடம் பொங்குகிற சுதந்திர ஓசை (வந்தே மாதரம்) வெண்சங்குகள் முழங்குகின்றன. வீதியெல்லாம் பெண்கள் வந்து நிற்கிறார்கள். இத்தனை ஓசைகளுக்கும் இடையே எம் அன்னையே, அமுதே ஆருயிரே நீ துயில்கின்றாயே அம்மா விழித்து எழு.

### பாரத மாதாவின் பழம் பெருமைகள்

சூரியனின் பேரொளியை விண்ணிடைக் கண்ட நாங்கள் தாயே உன் அருள் ஒளியை மண்ணிடைக் காண்பதற்கு விருப்புற்றோம். எண்ணிப் பார்த்து எங்கள் இதயமாகிய மலர்களை உன் சிறந்த பாதங்களில் சூட்ட வந்தோம். சுருதிகள் தந்தவளே சாத்திரங்கள் பல படைத்தவளே அரக்கர்கள் சாய்வுறக் கரத்தில் சூலாயுதம் ஏந்தியவளே மாசற்றவளே தாயே விழித்து எழு.

உன் கண்களில் பொங்கும் கருணை காண்பதற்கு எங்கள் உள்ளத்து ஆவலை அறியாயா பொன் போன்றவளே பருவத ராசன் ஈன்ற பார்வதியே தவமே ஏழைகளாகிய நாங்கள் நின் அருள் பெறுவதற்கு எத்தனை காலம் தவம் செய்வோம் ஏங்குவோம் தாயே இன்னமும் நீ தூங்குகிறாய் என்றால் இது நல்லதா எங்கட்கு உயிர் போன்றவளே விழித்தெழு.



10811A_rev2.indd 35 12/5/2018 3:48:33 PM

**குறிப்பு**

## உலக வழக்கம்

தாயார் பிள்ளைகளை எழுப்புவர். நாங்கள் எழுப்ப நீ துயிலலாமா? உனக்குக் கோடானு கோடி மக்கள் (மாநிலம் அவ்வளவு) பெற்றவளுக்கு இது தெரிய வேண்டாமா? பிள்ளைக்கு இரங்காதவள் ஒரு தாயா என பாரதியார் கேட்கிறார். அரசியே பாரத மக்களுக்கு அரசியே பதினெட்டு மொழியினரும் உன்னைப் பாடுகிறார்கள், புகழ்கிறார்கள். அன்பாக வந்து எம்மை ஆண்டு அருள் செய்வாய் (உலகு) ஈன்றவளே விழித்து எழு.

பாரத மாதா விழித்து எழுவதற்குப் பல காரணங்களை அடுக்கிப் பாடுகிறார் மகாகவி பாரதி. அடிமைத் தளையில் வீழ்ந்து கிடக்கும் பாரதமாதாவை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை பாரதியால். பொங்கி எழுகிறது அவருள்ளம். அங்கு வெள்ளமென வெளிப்படுகிறது திருப்பள்ளி எழுச்சிப் பாடல்கள்.

## வினா விடைகள்

1. கண்ணன் செய்யும் குறும்புகள் யாவை?

   1. பழம் கொண்டு வந்து தருவான். அதை முழுவதுமாகத் தின்ன விடமாட்டான். பாதியிலே தட்டிப் பறிப்பான். ஏனப்பா இப்படிச் செய்தாய் என்றால் அதை எச்சிற் படுத்துவான். பின்னர் கடித்துக் கொடுப்பான்.

   2. தேன் போன்ற சுவையான பண்டங்கள் கொண்டு வருவான். அதை எடுக்கவே முடியாதபடி உயரத்தில் வைப்பான். அது நமக்கு வருத்தத்தைத் தரும். வருத்தம் போக்க மானொத்த பெண்ணடி என்று புகழ்வான். உலகில் புகழ்ச்சிக்கு மயங்காதவர் யார்? நாம் மயங்கி மகிழும் நேரத்தில் கிள்ளி விடுவான்.

   3. கண்ணைப் பறிக்கும் மலர் கொண்டு வருவான். கெஞ்சிக் கேட்டாலும் தர மாட்டான். அழ வைத்துப் பின்னர் கண்ணை மூடிக் கொள்ளச் சொல்வான். நம்மைக் குருடாக்கி மலரினைத் தோழிக்குச் சூட்டுவான்.

   4. பின்னால் இருந்து பின்னலை இழுப்பான். வேதனையோடு நாம் திரும்பும் முன்னே மறைவான். புத்தம் புதுச்சேலை உடுத்தி நாம் மகிழும்போது அதில் புழுதி வாரித் தூற்றி அழுக்கு ஆக்குவான்.

   5. புல்லாங்குழலில் கீதம் ஒன்று இசைப்பான். அது தேவகானம் போலிருக்கும். மக்கள் கள்ளால் மயங்குவது போலே நாங்கள் கண் மூடி வாய் திறந்து கேட்டுருப்போம் என்று பெண்கள் கூறுகின்றனர்.



10811A_rev2.indd 36 12/5/2018 3:48:33 PM

கீதத்துக்குக் கள்ளை உவமையாக்குகிறார் கவிஞர் பாரதியார். கள் குடித்தவர் மயங்குமாறு போல இசைமடுத்தவரும் மயங்குவார். அந்த மயக்கத்தில் கண் மூடிக் கொள்கிறது. வாய் திறந்து கொள்கிறது. காது நிறைந்து இருக்கிறது.

**குறிப்பு**

6. அங்காந்த வாய்தனில் ஒன்றா, இரண்டா, ஆறேழு கட்டெறும்பைப் போட்டு விடுவான் என்று குற்றம் சாட்டுகின்றனர் பெண்கள். எங்களிடம் கண்ணன் செய்கின்ற குறும்புகள் ஒன்றோ, பல என்று பெண்கள் முறையிடுகின்றனர்.

7. விளையாட வா என்று அழைப்பான். வீட்டில் வேவை என்றாலும் கேட்க மாட்டான். கையைப் பிடித்து இழுப்பான். பின்னர் நம்மை விட்டு இளைய பெண்களோடு ஆடிக் குதிப்பான். இடையே போய் நம் வீட்டிலும் புகார் சொல்லி விடுவான்.

8. வீட்டில் உள்ள அம்மா, அப்பா, அத்தை  அத்தனை பேருக்கும் நல்லவன் போல் நடிப்பான். இவன் தொல்லை பொறாது இவனோடு திரிந்தால் வீட்டில் உள்ளவர்கள் நமக்குத் துன்பம் செய்வர்.

9. பொய் சொல்லல், பழி சொல்லல், சண்டை போடுதல் - இவற்றில் எல்லாம் கைதேர்ந்தவன் கண்ணன். ஆனாலும் ஆள் ஆளுக்கு இசைந்தபடி பேசி அத்தனை பெண்களையும் ஒன்றும் செய்யாதபடி செய்து விடுவான்.

இவ்வாறு கண்ணன் செய்யும் குறும்புகளைப் பெண்கள் பட்டியலிடுவதாக பாரதியார் பாடுகிறார்.

2. பாரத மாதாவின் திருப்பள்ளி எழுச்சிச் சிறப்பை விவரி.

திருப்பள்ளி எழுச்சி என்பது துயில்கின்ற இறைவனைத் துயில் நீக்கி எழுந்தருளச் செய்வது. இங்கு பாரதமாதாவைத் துயிலெழச் செய்கிறார் பாரதியார். இது தொல்காப்பியத்தில் துயிலெடைநிலை எனக் குறிக்கப்படுகிறது. மக்கள் செய்த தவத்தால் பொழுது விடிந்தது என்கிறார் பாரதியார். புல்லிய இருள் கூட்டங்கள் கலைந்தன. எங்கும் பொற்சுடரைப் பரப்பிச் சூரியன் எழுந்தான்.

சூரியனை – அறிவு எனும் சூரியன் - (அறிவன்) எழுந்தான் என்கிறார். நீ எழவில்லையே என்று பாரதியார் பாரத மாதாவைக் கேட்கிறார். உன்னைச் சூழ்ந்து உன்னை வணங்குவதற்குத் தொண்டர் பல்லாயிரவர் நிற்கிறார். தாயே இன்னுமா தூங்குகிறாய், எங்களுக்கு இது வியப்பைத் தருகிறது. தாயே விழித்து எழு என்கிறார்.

குறிப்பு

காலைச் செயல்களைப் பலவற்றை பாரதியார் காட்டுகிறார். பறவைகளின் ஓசை மக்களிடம் பொங்குகிற சுதந்திர ஓசை (வந்தே மாதரம்) வெண்சங்குகள் முழங்குகின்றன. வீதியெல்லாம் பெண்கள் வந்து நிற்கிறார்கள். இத்தனை ஓசைகளுக்கும் இடையே எம் அன்னையே, அமுதே, ஆருயிரே நீ துயல்கின்றாயே அம்மா விழித்து எழு என பாரத மாதாவை திருப்பள்ளி எழுச்சி கொள்ளுமாறு கூறுகிறார்.

3. உலக வழக்கம் என எதை பாரதியார் கூறுகிறார்?

தாயார் பிள்ளைகளை எழுப்புவர். நாங்கள் எழுப்ப நீ துயிலலாமா? உனக்குக் கோடானு கோடி மக்கள் (மாநிலம் அவ்வளவு) பெற்றவளுக்கு இது தெரிய வேண்டாமா? பிள்ளைக்கு இரங்காதவள் ஒரு தாயா என பாரதியார் கேட்கிறார். அரசியே, பாரத மக்களுக்கு அரசியே பதினெட்டு மொழியினரும் உன்னைப் பாடுகிறார்கள், புகழ்கிறார்கள். அன்பாக வந்து எம்மை ஆண்டு அருள் செய்வாய் (உலகு) ஈன்றவளே விழித்து எழு. இதுதான் உலக வழக்கம் என பாரதியார் கூறுகிறார்.



10811A_rev2.indd 38 12/5/2018 3:48:33 PM

# கூறு 5

## பாரதிதாசன்

குறிப்பு

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க்கவிதை உலகில் பெருவேந்தர்களாகத் திகழ்பவர் இருவர். ஒருவர் சுப்பிரமணிய பாரதியார்; மற்றொருவர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்.

### பாரதிதாசன்

புதுச்சேரியில் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் கனகசபை மற்றும் லக்குமி அம்மையாருக்கு மகனாக பிறந்தார். இவரின் இயற்பெயர் கனகசுப்புரத்தினம். தமிழாசிரியர், கவிஞர், அரசியல்வாதி, திரைக்கதாசிரியர், எழுத்தாளர் என பல பரிமாணங்களில் தனது திறமையை நிருபித்தவர்தான், பாரதம் வியக்கும் "பாரதிதாசன்".

தமிழ்த்தாய் பெற்றெடுத்த தவப்புதல்வர்; தமிழுக்கென்று தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர்; தமிழக மக்களுக்கு எழுச்சி உணர்வை தூண்டியவர்; புரட்சிக்கவிஞர், பாவேந்தர் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டவர்; 'தமிழ்க்கு அமுதென்று என்று பேர்' இந்த வரிகளுக்கு சொந்தக்காரர்; தமிழாசிரியர்,கவிஞர், அரசியல்வாதி, திரைக்கதாசிரியர், எழுத்தாளர் என பல பரிமாணங்களில் தனது திறமையை நிருபித்தவர்தான், பாரதம் வியக்கும் "பாரதிதாசன்".

திருப்புள்ளி சாமியிடம் தனது ஆரம்பகல்வியை பயின்றார். பிரெஞ்சு மொழி பள்ளியில் கல்வி பயின்றாலும் தமிழில் எழுதுவதிலேயே அதிக ஈடுபாடு காட்டினார். தனது 16-வது வயதில் கல்வே கல்லூரியில் சேர்ந்தார். தமிழ் புலமையின் காரணமாக மூன்று ஆண்டுகள் படிக்க வேண்டிய கல்வியை இரண்டாண்டுகளிலேயே முடித்தார். (1919) தனது 18 வது வயதிலிருந்து தமிழாசிரியராக பணியாற்றினார். மகாவித்வான் பு.அ. பெரியசாமி, புலவர் பங்காரு பத்தரிடமும் இலக்கண இலக்கியங்கள், சித்தாந்த வேதாந்த பாடங்களை கற்றார். சிறு வயது முதலே கவிதை இசையில் ஆர்வம் இருந்ததால் பாடல்களை எழுதி தோழர்களுக்க பாடிகாட்டுவார். நன்றாக, பாடல் பாடுவார். உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் செலுத்துவார், சிலம்பம் மற்றும் குத்துசண்டை போன்ற கலைகளை பயின்றார்.



10811A_rev2.indd 39 12/5/2018 3:48:33 PM

குறிப்பு

## கனககப்புரத்தினத்திருந்துபாரதியின்தாசனாக

ஒரு நாள் தன் நண்பரின் திருமணத்திற்கு சென்றிருந்தார், பாரதிதாசன். அங்கு பாரதியும் சென்றிருந்தார். பாரதிதாசன் விருந்துக்குப் பிறகு திருமணத்தில் பாரதியாரின் நாட்டுபுற பாடல் ஒன்றை பாடியுள்ளார். பாரதியார் திருமணத்திற்கு வந்திருப்பது அவருக்கு தெரியாது. அப்பாடல் நிகழ்வே இவர்கள் இருவரையும் முதன்முதலில் சந்திக்க வைத்தது. பிறகு, பாரதி தன் நண்பர்கள் முன்னால் பாரதிதாசனை அறிமுகம் செய்து பாடல் பாடுமாறு கூறியுள்ளார். அப்பொழுது எங்கெங்கு காணினும் சக்தியடா என்ற பாடலை பாடியுள்ளார். பாரதியாரின் மீது கொண்ட பற்றினால் தனது பெயரை பாரதிதாசன் என மாற்றிக்கொண்டார். தேச சேவகன், புதுவை கலைமகன், தேசோபகாரி, தேசபக்தன், ஆனந்தபோதினி, சுதேசிமித்திரன், புதுவை முரசு, குயில் போன்ற இதழ்களின் ஆசிரியராக பணியாற்றினார்.

## பாரதிதாசனின் படைப்புகள்

கடவுள் மறுப்பு, சாதி மறுப்பு, மத எதிர்ப்பு போன்ற தலைப்புகளிலேயே தனது படைப்புகளை எழுதினார். கவிதை, இசைப்பாடல், நாடகம்,புதினம், சிறுகதை, கட்டுரை என பல வடிவங்களி படைப்புகளை எழுதினார். பாரதிதாசனின் சில படைப்புகள்,...

1. அம்மைச்சி (நாடகம்)
2. 1948 – ல் உயிரின் இயற்கை, மன்றம் வெளியீடு, உரிமை கொண்டாட்டமா, கடவுளை கண்டீர், எது பழிப்பு (குயில்)
3. கழைக்கூத்தியின் காதல் (நாடகம்)
4. 1955 – கலை மன்றம், விடுதலை வேட்கை
5. 1959 – வீட்டுக் கோழியும் காட்டுக்கோழியும் குயில் புதுவை
6. 1960 – கற்பு காப்பியம் (குயில்)
7. சத்திமுத்துப் புலவர் (நாடகம்)
8. நீலவண்ணன் புறப்பாடு
9. பிசிராந்தையார் (நாடகம்)
10. 1967 – ல் பாரி நிலையம்
11. பெண்கள் விடுதலை
12. ரஸ்புடீன் (நாடகம்)



10811A_rev2.indd 40 12/5/2018 3:48:33 PM

13. திருக்குறளின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில் ஐந்து கட்டளை கலித்துறை பாடலையும் எழுதியுள்ளார்.

தமிழுக்க பெரும் தொண்டாற்றிய பாவேந்தர் தனது 73-ம் வயதில், 21.04.1964 ஆண்டு காலமானார்.

**குறிப்பு**

### சமத்துவம் சாத்தியம்

உலகம் இப்படியே இருந்துவிடாது என்றும் அவர் கருதுகின்றார். ஏழை கோழையாக இருக்கும் வரைதான் இந்த நிலை இருக்கும். அவன் தாழ்ந்து குனிந்து பணிந்து வாழும் நிலையிலிருந்து நிமிரும் நிலை வரும். அப்படி நிமிர்ந்தால் ஒரே நொடியில் உலகம் மாறிவிடாதா எனக் கேட்கின்றார். கையிலே திருவோடுதான் உண்டு என்று கூறும் ஓடப்பர் ஒருபுறம்; செல்வநிலையின் உச்சியிலே இருக்கும் உயர்ப்பர் மற்றொருபுறம். ஏழையப்பராக இருக்கும் ஓடப்பரும், உயரப்பரும் ஒன்றாக முடியுமா? முடியும் என்கிறார் கவிஞர்.

ஓடப்ப ராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ!

(உலகப்பன் பாட்டு: 37-40, முதல் தொகுதி)

அடி, உதை என்றாலே அஞ்சுவோர் கீழோர் அல்லவா? அந்த நிலையிலேதான் இவர்கள் சுரண்டிச் சுருட்டி வைத்திருக்கும் செல்வத்தைப் பிறரோடு பகிர்ந்து கொள்வார்கள். இயந்திரத்தில் இட்டுப் பிழிந்தால்தானே கரும்பு சாறுதரும்? உலகம் வழங்கும் உடைமை எல்லாம் பொது எனும் மனநிலை வரவேண்டுமென்று பாரதிதாசன் கருதுகின்றார். பொருளாதார நிலையில் ஒரு சமத்துவம் நிலவும் சமுதாயத்தையே அவர் காண விரும்பினார்.

### உலகப்பன் பாட்டு

பகுத்தறிவு மன்றத்தில் உலகம் என்ற
 பழையமுத லாளியினை நிற்க வைத்து
மிகுத்திருந்த உன்நன்செய் புன்செய் யாவும்
 வெகுகாலத்தின் முன்னே மக்கள் யாரும்
சுகித்திருக்கக் குத்தகைக்கு விட்ட துண்டோ
சொல் என்றேன் உலகப்பன் ஆம் ஆம் என்றான்
வகுத்த அந்தக் குத்தகைக்குச் சீட்டு முண்டோ
வாய்ச் சொல்லோ என்றுரைத்தேன் வாய்ச்சொல் என்றான் 1

குறிப்பு

குததகைக் காரர்தமக்குக் குறித்த எல்லை
குறித்தபடி உள்ளதுவா என்று கேட்டேன்
கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட பேர்கள்
கண்மூடி மக்களது நிலத்தை யெல்லாம்
கொத்திக்கொண் டேப்பமிட்டு வந்த தாலே
கூலிமக்கள் அதிகரித்தார் என்ன செய்வேன்
பொத்தல்இலைக் கலமானார் ஏழை மக்கள்
புனல்நிறைந்த தொட்டியைப் போலானார் செல்வர் 2
அதிகரித்த தொகைதொகையாய்ச் செல்வ மெல்லாம்
அடுக்கடுக்காய்ச் சிலரிடம் போயேறிக் கொண்டு
சதிராடு தேவடியாள் போல்ஆ டிற்று
தரித்திரரோ புழுப்போலே துடிக்கின் றார்கள்
இதுஇந்நாள் நிலையென்றான் உலகப் பன்தான்
இந்நிலை யிலிருப்பதனால் உலகப் பாநீ
புதுக் கணக்குப் போட்டுவிடு பொருளை யெல்லாம்
பொதுவாக எல்லார்க்கும் நீகுத்தகை செய் 3

ஏழை முதலாளி என்பதில் லாமல்செய்
என்றுரைத்தேன் உலகப்பன் எழுந்து துள்ளி,
ஆழமப்பா உன்வார்த்தை உண்மை யப்பா,
அதற்கென்ன தடையப்பா, இல்லை யப்பா
ஆழமப்பா உன்கருத்து மெய்தானப்பா
அழகாயும் இருக்குதப்பா, நல்ல தப்பா,
தாழ்வாயவ நீங்குமப்பா என்று சொல்லித்
தகதகென ஆடினான் நான் சிரித்து 4

ஆடுகின்றாய் உலகப்பா யோசித்துப் பார்
ஆர்ப்பாட்டக் காரர்இதை ஒப்பா ரப்பா
தேடப்பா ஒருவழியை என்று சொன்னேன்
செகத்தப்பன் யோசித்துச் சித்தம் சோர்ந்தான்
ஒடப்ப ராயிருக்கும் ஏழை யப்பர்
உதையப்ப ராகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவர் உணரப் பாநீ 5



10811A_rev2.indd 42 12/5/2018 3:48:33 PM

## பாரதிதாசன் உலகப்பன் பாட்டு

குறிப்பு

பாரதியாருக்குப் பின்னர் பாவேந்தராகவும், புரட்சிக் கவிஞராகவும், புதுவை தந்த குயிலாகவும் விளங்கியவர் பாரதிதாசன் ஆவார்.

காலையிளம் பருதியிலே அவளைக் கண்டேன்
கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன் அந்தச்
சோலையிலே மலர்களிலே, தளிர்கள் தம்மில்
தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப்பட்டாள்
மாலையிலே மேற்றிசையில் இலக கின்ற
மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
தனிலந்த அழகென்பாள் கவிகை தந்தாள்

என்று அழகின் சிரிப்பை வடித்துத் தருகிறார்.

ஏழை மக்கள் இயல்பான ஏழைமக்களாக இருப்பதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் வஞ்சகராலும் செல்வர்களாலும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. இவ்வாறு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைக்கிறார். ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். செல்வம் எல்லோருக்கும் பொதுவாக அமைதல் வேண்டும். கற்பனை விரிகிறது. கவிஞரிடம் உலகப்பன் பாட்டு தோன்றுகிறது. நீதிமன்றத்தில் உலகை நிறுத்துகிறார். அது பகுத்தறிவு மன்றம் வழக்குரைஞராகக் கவிஞர் கேட்கிறார். உலகே பழங்காலத்தில் உன்னுடைய நன்செய் பன்செய் நிலங்களை மக்களுக்குக் குத்தகைக்கு விட்டதுண்டா.

உலகப்பன் ஆமாம் என்கிறான்

கேள்வி அதற்கு எதாவது ஒப்பந்தச் சீட்டு உண்டா இல்லை வாய்ச் சொல் தானா

உலகப்பன் வாய்ச்சொல் என்கிறான். வாய்மொழிக்குப் பழைய காலத்தில் அவ்வளவு மரியாதை. உலகம் மாறினும் மக்கள் சொன்ன சொல் மாறமாட்டார்கள்.

கவிஞர் அடுத்து கேட்கிறார்

குத்தகைதாரர்களுக்குச் சொன்னபடி, கால எல்லை, நில எல்லை உள்ளனவா

உலகப்பன் கையைப் பிசைந்தபடி சொல்லுகிறான்

கைத்திறனும் வாய்த்திறமையும் உள்ளவர்கள் மற்றவர்களது நிலத்தை அபகரித்துக் கொண்டார்கள். மற்றவர்கள் தூங்கினார்கள். நான் என்ன

செய்வது கவிஞர் இந்தப் பாடலில் இரண்டு உவமைகளைக் கையாள்கிறார். ஏழை மக்கள் பொத்தல் இலையானார் (பொத்தல் இலை, இருந்தும பயன் இல்லாதது) செல்வர் நீர் நிறைந்த தொட்டியானார். மேன்மேலும் வரவு இருப்பதனால. தொட்டி நீர் நிறைந்ததாயிற்று.



## செல்வர் நிலை

சிலரிடம் செல்வம் சேர்ந்து சேர்ந்து ஆடுகிறது. அந்தச் செல்வ ஆட்டத்தைச் சதிராடும் தேவடியாளுக்கு ஒப்பிடுகிறார் கவிஞர் இது ஒரு புறம்.

மறுபுறம் தரித்திரர் புழுப்போலத் துடிக்கிறார். இது இந்நாள் நிலைமை என்கிறான் உலகப்பன்

கவிஞர் கட்டளை இடுகிறார். உலகப்பா நீ புதுக்கணக்குப் போடு. பொருளை எல்லாம் எல்லார்க்கும் குத்தகை செய்.

## புரட்சிக் கவிஞரின் கருத்து

ஏழை, முதலாளி இல்லாமல் செய். உலகப்பன் துள்ளினான், மகிழ்ந்தான். உன் வார்த்தை ஆழம் உன் கருத்து ஆழம் நிறைந்தது என்று கவிஞரைப் பாராட்டினான். அதுதான் சரி. தாழ்வு உயர்வு நீங்கும். உன் கருத்து நன்றாகவும் இருக்கிறது. அழகாகவும் இருக்கிறது. (குலத்தாழ்ச்சி, உயர்ச்சி சொலல் பாவம் என்பார் பாரதியார்) உலகப்பன் மகிழ்ச்சியில் தகதக வெனக் குதித்தான்.

அவனைக் கையமர்த்திக் கவிஞர் கூறுகிறார் அப்பா உலகப்பா நீ யோசி ஆர்ப்பாட்டக் கார மக்கள் இதை ஒப்புக் கொள்ளுவாரா ஒரு வழி தேடு – உலகப்பன் சிந்தித்து வழி தெரியாது திகைத்தான்.

## கவிஞர் காட்டும் வழி

ஓடப்பராய் இருக்கும் ஏழை மக்கள் உதையப்பர் ஆகிவிட்டால் நொடிப்பொழுதில் ஓடப்பர், உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பொப்பர் ஆகிவிடுவார் என்று கூறுகிறார். மேலும் உலகப்பனைப் பார்த்து இதை உணரப்பா என்கிறார்.

கவிஞர் காட்டும் வழி, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளை அடையும் வழியாகும்.

## நாமக்கல் கவிஞர்

தேசிய எழுச்சியோடு நடைபோட்டவர்; விடுதலை வரலாற்றில் இடம் பெற்றவர். ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தவர். நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்.

தந்தை வெங்கட்ராமப் பிள்ளை, தாய் அம்மணி அம்மாள் ஆகிய இருவருக்கும் 19.10.1888 இல், நாமக்கல்லில் பிறந்தார்.



10811A_rev2.indd 44 12/5/2018 3:48:33 PM

குறிப்பு

வெங்கட்ராமர், இள வயதில் மிகுந்த வறுமையில் வாழ்ந்து வந்தார். இவர் ஏழு பெண் குழந்தைகளுக்குத் தந்தை. ஒருமுறை, வெங்கட்ராமர், தம் வேலை தொடர்பாக, காவல் துறை ஆய்வாளர் ஒருவரைப் பார்க்க வந்திருந்தார். ஆய்வாளரின் மூன்று வயது ஆண் குழந்தை தெருவில் விளையாடிக் கொண்டிருந்தது. அந்த வழியே வந்த குதிரை வண்டி ஒன்றின் கீழ்க் குழந்தை அகப்பட்டுக்கொண்டது. வண்டிக்காரன் வண்டியை நிறுத்த முடியாமல் திணறிக் கொண்டிருந்தான். இதைப் பார்த்த வெங்கட்ராமர் ஒரே தாவாகத் தாவிச் சென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டார். அவ்வண்டியில் வந்தவர் ஆய்வாளர் சுந்தராசுலு தான் தன் குழந்தையைக் காப்பாற்றிய வெங்கட்ராமரைப் பாராட்டி அவருக்கு காவல்துறை பணிக்கு பரிந்துரைத்தார். அந்த வேலையில் சேர்ந்த வெங்கட்ராமர் பின் தலைமைக் காவலராகப் பதவி உயர்வு பெற்றார். இந்தச் சூழலில்தான் வெங்கட்ராமருக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார் நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்.

நாமக்கல் கவிஞர் பிறப்பதற்கு முன்னரே அவருடைய தாயார் பலராலும் புகழப்பட்டார். பிறக்கும் குழந்தை ஆணாக இருக்கும் என்று பலர் வாழ்த்தினார். 'சிறந்த அறிவாளியாகவும் நிறைந்த ஆயள் உடையவராகவும் விரிந்த புகழுடையவராகவும் உம் மகன் விளங்குவான்' என்று அந்தணர் ஒருவர் பாராட்டியது அனைத்தும் கவிஞர் வாழ்வில் உண்மையாயிற்று.

'எட்டாவது குழந்தை கட்டி அரசாளும்' என்ற பழமொழிக்கு ஏற்ப, கவிஞர் தமிழ் நாட்டில் கவிதை உலகில் தனிப்பெரும் மன்னராக, அரசவைக் கவிஞராக விளங்கினார். இதற்குக் காரணம் அவர் இளமைப் பருவத்தில் பெற்ற கல்வியாகும். விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பார்கள். அதற்கு நாமக்கல் கவிஞர் சிறந்த சான்றாவார்.

## கல்வி

| | | |
|---|---|---|
| ஆரம்பக் கல்வி | : | நம்மாழ்வார் பள்ளி, நாமக்கல் |
| உயர்நிலைக் கல்வி | : | கோவை மெட்ரிகுலேஷன் பள்ளி |
| கல்லூரிக் கல்வி | : | பிஷப் ஈபர் கல்லூரி, திருச்சி |

## திருமணம்

கவிஞருக்கு இரண்டு மனைவியர். முதல் மனைவி முத்தம்மாள். அவர் வயிற்று வலியால் 1924இல் இறந்து விடுகிறார். அவர் வேண்டுகோளுக்கேற்ப, அவர்தம் தங்கை சௌந்தரம்மாளை மணக்கிறார் கவிஞர். அவர் மூலமாகப் பிறந்த குழந்தைகள் ஐவர். பெண்கள் இருவர்; ஆண்கள் மூவர்.



10811A_rev2.indd 45 12/5/2018 3:48:33 PM

**குறிப்பு**

## ஓவியப் புலமை

நாமக்கல் கவிஞர் நான்காம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது நம்மாழ்வார் என்ற ஆசிரியர் ஒரு கணக்குக் கொடுத்திருந்தார். எல்லா மாணவர்களும் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் இராமலிங்கம் மட்டும் அன்றைய நாடக விளம்பரத்தில் அச்சடிக்கபட்டிருந்த கமலஇந்திரசபா நாடகப் படத்தைப் பார்த்து, பார்த்துத் தம் பலகையில் எழுதிக் கொண்டிருந்தார். ஆசிரியர் கணக்கைக் காட்டச் சொன்னார். இராமலிங்கம் ஓவியத்தைக் காட்ட பளீர் என அடி விழுந்தது. உயர்நிலைப் பள்ளியிலும் இது தொடர்ந்தது.

மற்றொரு நிகழ்ச்சியையும் இங்கே சுட்டிக்காட்டலாம். கல்லூரியில் ஆங்கிலக் கட்டுரை ஒன்று எழுத முதல்வர் பணித்தார். அதை எழுதி முடித்துவிட்டு, இராமலிங்கம், முதல்வர் அமர்ந்து எதையோ படித்துக் கொண்டிருப்பதை அப்படியே வரைந்தார். இதைப் பார்த்த முதல்வர் அவரை பாராட்டினார். கட்டுரை எழுதிய திறத்தையும், ஓவியம் வரைந்த திறத்தையம் பாராட்டி, பைபிளையம் கட்டுரை எழுதுவது எப்படி என்ற ஒரு நூலையும் பரிசாகத் தந்து, ஓவியக் கலைப் பயிற்சியை விடாமற் செய்து வருமாறு ஊக்கப்படுத்தினார்.

இராமலிங்கம் பிள்ளை, தம் நண்பரும் சிறந்த வழக்குரைஞருமான நாகராஜ ஐயங்காரின் தூண்டுதலால் திரு. இராமகிருட்டிணர், திரு. விவேகானந்தர், திலகர், அரவிந்தர், லஜபதிராய் முதலிய தலைவர்களைப் படமாக வரைந்தார். அந்த ஓவியங்களைக் கொண்டு கண்காட்சி அமைத்தார். ஓவியப் புலமை கைவரப் பெற்றவர் கவிஞர் என்பதை இதனால் அறிய முடிகின்றதல்லவா?

## ஓவியத்தின் மூலம் வருமானம் ஈட்டல்

கவிஞர் இராமலிங்கத்தின் ஆசான் திரு. வி. லட்சுமணன் தம் வேலையிலிருந்து ஓய்வு பெற்றபோது அவருடைய படத்தை நாமக்கல் நகர மண்டபத்தில் திறந்து வைக்க, அவருடைய மாணவர்கள் விரும்பினர். அதற்கு இராமலிங்கம் பிள்ளை படம் வரைந்து கொடுத்தார். அப்படம் நகர மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டது. தொழில் துறையில் வருவாயும், வெற்றியும் இராமலிங்கத்துக்கு தேடிக் கொடுத்த படம் இதுவாகும்.

இதுவரையில் இராமலிங்கத்தின் பிறப்பு, சூழல், கல்வி, திருமணம், ஓவியப்புலமை ஆகியவற்றைப் பார்த்தோம்.

இனி, கவிஞரின் படைப்புகளைப் பற்றி அறியலாம்.



10811A_rev2.indd 46 12/5/2018 3:48:34 PM

குறிப்பு

## படைப்புகள்

நாமக்கல் இராமலிங்கம் அவர்கள் மிகச் சிறந்த கவிதைகள் பலவற்றைப் பாடியுள்ளார். அவை தேசிய உணர்வை வெளிப்படுத்தும் உன்னதமான பாடல்கள். உரைநடை நூல்கள் பலவற்றையும் படைத்துள்ளார். மேலும் புகழ்வாய்ந்த புதினங்களையும் எழுதியுள்ளார்.

### கவிதை

1. தேசபக்திப் பாடல்கள், 1938.
2. பிரார்த்தனை, 1938.
3. தமிழன் இதயம், 1942.
4. காந்தி அஞ்சலி, 1951.
5. சங்கொலி, 1953.
6. கவிதாஞ்சலி, 1953.
7. மலர்ந்த பூக்கள், 1953.
8. தமிழ்மணம், 1953.
9. தமிழ்த்தேன், 1953.
10. நாமக்கல் கவிஞர் பாடல்கள், 1960.
11. அவனும் அவளும்

### உரைநடைக் கட்டுரைகள்

1. தமிழ்மொழியும் தமிழரசும், 1956.
2. இசைத்தமிழ், 1965.
3. கவிஞன் குரல், 1953.
4. ஆரியராவது திராவிடராவது, 1947.
5. பார்ப்பனச் சூழ்ச்சியா, 1948.
6. திருக்குறள் - உரை
7. கம்பன் கவிதை இன்பக் குவியல்

### புதினம்

1. மலைக்கள்ளன், 1942.
2. தாமரைக்கண்ணி, 1966.



10811A_rev2.indd 47 12/5/2018 3:48:34 PM

3. கற்பகவல்லி, 1962.
4. மரகதவல்லி, 1962.
5. காதல் திருமணம், 1962.
6. மாமன் மகள்

**குறிப்பு**

உலகில் பல்வேறு இயக்கங்கள் தோன்றித் தத்தம் கொள்கைகளை நிறைவேற்றியுள்ளன. அவற்றுள் இந்திய வரலாற்றில் திலகர் சகாப்தம் என்பது ஒன்று; காந்தி சகாப்தம் என்பது மற்றொன்று. அந்நாளில் இவ்விரு சகாப்தங்கள் உருவாயின. காந்தி சகாப்தமானது விடுதலை இயக்கத்தோடு சேர்ந்து கிளை இயக்கங்கள் பல தோன்றின. அவை கதர் வளர்ச்சி இயக்கம். தீண்டாமை ஒழிப்பு இயக்கம், அகிம்சை பிரசார இயக்கம் என்பனவாகும். இவை அத்தனைக்கும் பாடல்களைப் புனைந்து அளித்த பெருமை கவிஞர் இராமலிங்கம் பிள்ளை அவர்களையே சாரும்.

## நாமக்கல் கவிஞர்
## நோயற்ற வாழ்வு

உலகினிற் சிறந்த தென்றும்
உருவினில் பரந்த தென்றும்
உயர்தவ யோக சித்தர்
ஒப்பிலார் இருந்த தென்றும்
பலவளம் நிறைந்த தென்றும்
பகுத்தறி வுயர்ந்த தென்றும்
படித்தனம் கேட்டோ மந்தப்
பாரத தேச மக்கள்
புலபுல வென்று நித்தம்
புதுப்புது நோய்களாலே
புழுக்கள்போல் விழுந்து மாண்டு
போவதைக் கண்டு மையோ

விலகிட வழிதே டாமல்
விலங்கினம் போல வாழ்ந்து
விதியென வாதம் பேசி
வீணரா யிருத்தல் நன்றோ 1

கற்பமும் அறிந்து காய
சித்தியும் கற்க மேலோர்

**குறிப்பு**

பற்பலர் இருந்த இந்தப்
பாரத தேச மக்கள்
அற்பமாய் ஆயள் குன்றி
ஆழ்ந்திடல் ஏனோ வென்று
சொற்பனந் தன்னிற் கூட
எண்ணிடத் துணிந்தோ மில்லை 2

உடல்வலி மிகுந்து நல்ல
ஊக்கமும் உறுதி பொங்க
உலகினில் இன்ப மெல்லாம்
உயர்வழி அனுப வித்த

திடமுள்ள தீர வீரர்
திகழ்ந்த இச்சிறந்த நாட்டில்
சிறிய தோர் நோய்வந் தாலும்
தாங்கிடத் திறனில் லாமல்

நடைபிணம் போல நாமும்
நாள்கழித் திருந்தோ மையோ
நாடிலோம் இதனை மாற்ற
நல்வழி என்ன வென்று

மடமையோ மதியோ வன்று
விதியெனு மயக்கந் தானோ
மாற்றநாம் அல்ல தென்றால்
மதியினாற் பயன்தா னென்னே 3
முற்றிய ஒழுக்கத் தாலும்
முறைதெரி வாழ்க்கை யாலும்
பெற்றவர் காண முன்னாள்
பிள்ளைகள் இறந்த தில்லை
கற்றவர் பெரியோர் நித்தம்
கதைகளிற் சொல்லக் கேட்டோம்
இற்றை-நாள் கோடி கோடி
பிறக்குமுன் இறப்ப தேனோ 4

மணத்தையே விரும்பி யோடி
மலரினைக் கசக்கு வார்போல்



10811A_rev2.indd 49 12/5/2018 3:48:34 PM

குறிப்பு

பணத்தையே பெரிதென் றெண்ணிச்
சுகத்தினைப் பழித்து வாழ்ந்து
குணத்தையே விலைக்கு விற்றுக்
குரங்கினைக் கொண்டார் போல
இனத்தையே பிணிகள் வாட்ட
இருந்தனம் அறிவி ருந்தும் 5

உண்டியில் ஆசை வைத்தோம்
ஒழுக்கமே மறந்து போனோம்
பெண்டுகள் மக்கள் தம்மை
வளர்த்திடும் முறைமை பேணார்
மண்டையி லெழுத்தி தென்று
மயங்கினோம் கர்மந் தன்னை
மண்டின நோய்கள் க்ஷாமம்
மலிந்திட நலிந்தோ மையோ 6

பிணியிலே பிறந்து நித்தம்
பிணியையே அருந்திப் பொல்லாப்
பிணியிலே வளர்ந்தும் அந்தப்
பிணியினாற் சாகக் கண்டும்

அணியிலே ஆடை யாலே
அலங்கரித் தோமே யன்றி
அறிவிலே ஆசா ரத்தால்
அழகெதும் செய்தோ மில்லை

பணியிலும் பணத்தி லேயும்
சுகமெலாம் இருந்தாற் போலப்
பழகினோம் நாமே யன்றிப்
பழக்கினோம் மக்கள் தம்மை

துணிவிலோம் தூய்மை யில்லோம்
சுசிகர நடத்தை இல்லோம்
துவக்குவோம் இனிமே லேனும்
நோய்களைத் துடைக்கும் வாழ்க்கை 7

நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்ற நூலிலிருந்து இவை எடுக்கப் பெற்றுள்ளன.



10811A_rev2.indd 50 12/5/2018 3:48:34 PM

குறிப்பு

காவியக் கலையிலும் கவிதைக் கலையிலும் மட்டுமன்றி ஓவியக் கலையிலும் வல்லவர் இராமலிங்கம் பிள்ளை அவர்கள். ஒரு முறை மகாகவி பாரதியார், பிள்ளைவாள் நீர் நம்மை ஓவியத்தில் தீட்டும் நாம் உம்மைக் காவியத்தில் தீட்டுவோம் என்று பாராட்டியுள்ளார். காந்தீயக் கருத்துக்கள் கவிஞர் நெஞ்சில் பதிந்தன. உப்புச் சத்தியாக் கிரகத்தின் போது அவர் பாடிய கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர் என்ற பாடலைப் பாடிக்கொண்டு தொண்டர்கள் சென்றார்கள்.

பாரத தேச மக்கள் நோயற்ற வாழ்க்கை வாழ வேண்டும் என்று விரும்புகிறார். நோயினாற் சாவதைக் கண்டும் மக்கள் காணாததுபோல் இருப்பதைச் சாடுகிறார். நீண்ட நாள் வாழ்வதற்கு வழிமுறைகள் கூறுகிறார்.

## பாரதத்தின் பெருமையும் நோயின் வலிமையும்

பாரத தேசம் உலகினிற் சிறந்தது உருவத்தால் பெரியது தவயோகிகள் சித்தர்கள் வாழ்ந்தது. பல வளம் நிறைந்தது பகுத்தறிவில் உயர்ந்தது. அது எல்லாம் சரி அந்த தேசத்து மக்கள் நித்தம் நோயாலே பொலபொல என்று சாகிறார்களே அதைப் போக்க வழி தேடாமல் அது அவர்கள் விதி என்று வாதமிட்டு நாம் வீணராய் வாழ்தல் நல்லதா மக்களைப் பார்த்துக் கவிஞர் கேட்கிறார்.

உடம்பைப் பொன்னாக்கும் இரும்பாக்கும் காயகற்பம், எண்ணிய வெல்லாம் பெற உதவும் காயசித்தி இவற்றை எல்லாம் கண்ட மேலோர்கள் வாழ்ந்த நாடு நம்நாடு மக்கள் அற்பமாய் மடிதல் ஏன் என்று சொப்பனத்தில் கூட நாம் நினைத்துப் பார்க்க வில்லை. இது ஏன் என்று கவிஞர் வருந்துகிறார்.

உடல் வலிமை, ஊக்கம் உடைமை, உறுதியுடைமை கொண்டு உலக இன்பங்களை எல்லாம் உயர்ந்த வழிமுறைகளில் அனுபவித்த வீரர்கள் தீரர்கள் வாழ்ந்த நாடுதான் நம்நாடு. இன்று சிறிய நோயைக் கூடத் தாங்கச் சக்தி இல்லாது நடைப் பிணம்போல வாழ்கிறோம். இதை மாற்றும் வழியை நினைத்தோமில்லை. விதி என நினைத்தால் மதி பெற்றதால் என்ன பயன் கவிஞர் கேட்கிறார்.

## கவிஞர் காட்டும் நெறி

ஒழுக்கத்தாலும், உயர்ந்த வாழ்க்கை நெறிமுறைகளாலுமே சிறந்த வாழ்க்கையை வாழ முடியும். பழங்காலத்தில் பெற்றோர் இருக்கப் பிள்ளைகள்



10811A_rev2.indd 51 12/5/2018 3:48:34 PM

இறந்தார்களா (அது எவ்வளவு கொடுமை) இன்று பிறக்குமுன் இறப்போரோ கோடி கோடி.

மணத்தை விரும்பி மலரைக் கசக்குவார் போல

குறிப்பு

பணத்தை விரும்பி வாழ்வைக் குலைத்துக் கொள்கிறார்

களே ஆசிரியர் நல்ல உவமை ஒன்றைக் கூறுகிறார். ஆசிரியரின் அடுத்த கேள்வி. குணத்தை விற்றுக் குரங்கு கொள்வாரோ? மக்கள் இனத்தைப் பிணி வாட்டுகிறது. செய்வதறியாது இருக்கிறோம் என்கிறார்.

## நோய்க்கு அறிகுறிகள்

உணவிலே பெருவிருப்பம், ஒழுக்கம் மறத்தல், பெண்டுகள் மக்களை முறையாக வளர்க்காமை, தலை எழுத்து என வினை செய்யாமை முதலியன நோயைத் தருவனவாகும்.

நாம் பிணியிலே பிறந்து, பிணியிலே வளர்ந்து பிணியிலே சாகின்றவர்களாக இருக்கிறோம். இருப்பினும் நாம் ஆடை அணிகளையே பெரிதாக மதிக்கிறோம்.

அறிவு, ஆசாரத்தில் நம் மனம் பற்றுக் கொள்ளவில்லை. அதுலே எல்லாக் கேட்டுக்கும் காரணமாகிறது. பணி செய்தலிலும் பணம் சேர்த்தலிலுமே வாழ்க்கையின் சுகம் இருப்பதாகக் கொண்டோம். பிள்ளைகளையும் பழக்கினோம். அதுவல்ல சிறந்த வாழ்க்கை. துணிவும், தூய்மையும், நன்னடத்தையும் ஒருங்கே அமையப் பெறுவதே சிறந்த வாழ்க்கையாகும். இனிமேலாவது நோயற்ற வாழ்க்கையைக் கருதுவோமாக என்கிறார் நாமக்கல் கவிஞர்.

பெ. தூரன் என்னும் பெரியசாமித் தூரன் அவர்கள் பழனிவேலப்பக் கவுண்டர் – பாவாத்தாள் ஆகியோருக்கு மகனாக 1908 ஆம் ஆண்டு ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சிக்கு அருகிலுள்ள மஞ்சக்காட்டு வலசு என்னும் ஊரில் செப்டெம்பர் 26 ஆம் நாள் பிறந்தார். பள்ளி இறுதி வகுப்பு வரை ஈரோட்டில் படித்த இவர் கல்லூரிப் படிப்பை சென்னை மாநிலக் கல்லூரியில் படித்தார். ஆனால் பட்ட வகுப்புத் தேர்வு எழுதவில்லை. சிறு வயதில் இருந்தே கதர் ஆடை அணிவதில் விருப்பம் கொண்ட இவர் பாரதியின் பாடல்களைப் பரவலாக்குவதில் ஈடுபட்டார். தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட கலைக் களஞ்சியத்தின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். குழந்தைகள் கலைக்களஞ்சியம் பத்து தொகுதிகளை 1976 வரை வெளியிட்டார். 1987 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 ஆம் நாள் மறைந்தார்.



10811A_rev2.indd 52 12/5/2018 3:48:34 PM

குறிப்பு

தூரனின் பாட்டி அவரது மாணவப் பருவத்திலேயே இராட்டை ஒன்றை அளித்து அதில் நூல் நூற்கவும் கற்றுத் தந்தார். அந்த இராட்டையில் நூல் நூற்று, பெரியார் தம் வீட்டிலேயே நடத்திய கதர்க் கடையில் நூல் சிட்டங்களைக் கொடுத்து கதர் வாங்கி அணிவதை வழக்கமாக்கிக் கொண்டார். சென்னையில் கல்லூரிக் கல்வி கற்கும்போதே உடன் பயின்ற மாணவர்களுடன் இணைந்து "வனமலர்ச் சங்கம்" என்ற அமைப்பைத் தோற்றுவித்து பாரதி பாடல்களைப் பரவலாக்கி, தேசியப் போராட்டத்துக்கு வலு சேர்த்தார். "பித்தன்" என்ற மாத இதழை நடத்தவும் தூரன் காரணமாக இருந்தார்.

இளம்வயதில் சிற்றப்பா அருணாசலக்கவுண்டர் கூறிய கதைகளும், மற்றொரு உறவினர் அருணாசலக்கவுண்டர் கற்றுக் கொடுத்த இசைப்பாடல்களும் தூரனுக்குக் கதையிலும் இசையிலும் ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தது. பிறவியிலேயே கவி உள்ளம் படைத்த தூரன் தமிழில் பாடல்கள் (கீர்த்தனைகள்) புனையத் தொடங்கினார். பிற்காலத்தில் இவரது கீர்த்தனைகள், சுர, தாள இசைக் குறிப்புகளுடன் தொகுதிகளாக வந்துள்ளன. தமிழகத்தின் மிகப் பெரிய இசைவாணர்கள் பலரும் தூரனின் பாடல்களை மேடையில் பாடியுள்ளனர். இசைக் கல்லூரிகளில் இவரது பாடல்கள் சிலவற்றைப் பாடமாக வைத்துள்ளனர்.

## பெ. தூரன் - நிலா பிஞ்சு

பின்னற் கொடியதனில் மிகநயமாய்த் தறித்தெடுத்த
வன்னச் சிறுவளைவாய் மயங்கந்தி மேல்வானில்
விஞ்சைக் கனவைப் போல் வேளுக்குப்புது வில்போல்
பிஞ்சுப் பருவத்தின் பேசரிய அதிசயத்தால்
அன்னை முகநோக்கும் அருங்குழவி யென வுலகந்
தன்னை யெட்டியெட்டிப் பார்க்கும் தளிர்க்கீற்றே.
காதலனைச் சந்திக்கக் கதிர்மறைவில் வந்தகன்னி
பாதைமுனை அவன்வரவைப் பார்த்தங்கு புதர்ச்செறிவில்
விளையாட்டாய்ப் போயொளிக்கும் வேளையிலே
உளம்பொங்கி

முளைகாட்டும் புன்சிரிப்பை மோனவெளி நீலத்தில்
வீசிவிட்டுச் சென்றதுபோல் விளங்குகின்ற நிலாப்பிஞ்சே
ஆசையற்றுத் தோலுடுத்து அரவுபுனை சிவனார்க்கும்
இத்தனை பேரெழிலுடன் நீ இருப்பதனால் சிரமணிய
மெத்தவுமோர் பேராசைப் பித்தமெழல் வியப்பாமோ



10811A_rev2.indd 53 12/5/2018 3:48:34 PM

குறிப்பு

கலைமலரும் மெல்லரும்பே கவிஞனுளக் கற்பனையின்
உலையொளிர வருகின்றாய் உனைக் காணும் போதெல்லாம்
வளர்ச்சியிலும் பூரணமாம் மலர்ச்சியிலும் புதியதொரு
தளர்ச்சியிலா நம்பிக்கை தழைத்தோங்கம் என்னுளத்தே.

இசைக்கலை அறிஞர்கள் போற்றும் விதத்தில் இசைப் பாடல்கள் இயற்றியதோடு கவிதைகளும் ஆக்கித்தந்தவர் பெ. தூரன். எளிமையும் இனிமையம் உடைய நடை, இளந்தமிழர் என்னும் அவருடைய கவிதைத் தொகுப்பு சிறந்த படைப்பாகும். கவிதை நாடகங்களும் இயற்றியவர். இனிய இசை நயம் வாய்ந்த குழந்தைப் பாடல்களையும் பாடியுள்ளார்.

நிலவைப் பாடாத கவிஞன் இல்லை
முழுமை நிலா அழகு நிலா
முளைத்தது விண்மேலே – அது
பழமையிலே புதுநினைவு
பாய்ந்தெழுந்தாற் போலே என்பார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

பெ. தூரன் அவர்கள் பிஞ்சு நிலாவை நிலாப் பிஞ்சு எனப் பாடுகிறார். மின்னற்கொடியில் சிறுவளைவாகத் தறித்தெடுக்கப் பெற்றது. இந் நிலாப் பிஞ்சு. அதனால் மன்மதனுக்குப் புதுவில் போலத் திகழ்கிறது.

பெ. தூரன் புது உவமை ஒன்று படைக்கிறார். அன்னை முகம் நோக்கும் குழவி போலச் சந்திரன் உலகை எட்டி எட்டிப் பார்க்கிறதாம். அறிவியல் ரீதியாகச் சந்திரன் பூமித்தாயின் குழந்தை தான் பூமியைத் தான் சுற்றிச் சுற்றி வரும்.

## பிறைநிலவில் புன்னகை

மாலையிலே காதலன் வரவை எதிர்நோக்குகிறாள் கன்னி ஒருத்தி. பாதையிலே முனையிலே அவன் வரவைப் பார்த்ததும் உளம் பூரிக்கிறாள். புதர்ச் செறிவில் மகிழ்ச்சியோடு மறைகின்ற அவள் புன்னகை சிந்துகிறாள். அது போலப் பிறை நிலவே நீ விளங்குகிறாய் எனக் கவிஞர் பாராட்டுகிறார்.

ஆசையற்றவன் சிவன். தோலாடை உடுத்து அரவு புனைந்தவன். உன் அழகன்றோ அவனையும் மயக்கிச் சிரத்தில் அணிய வைத்தது. கலை கலையாக மலரும் அரும்பே கவிஞனுக்குக் கற்பனை தரும் நிலவே

உன்னைக் காணும்போதெல்லாம் உன் வளர்ச்சியும் மலர்ச்சியும் எனக்குப் புதிய நம்பிக்கையைத் தருகிறது.

தனக்கு நம்பிக்கை தரும் ஒளிக்கீற்றாகப் பிறைநிலவைக் கருதுகிறார் பெ. தூரன் அவர்கள்.

குறிப்பு

### வினா விடைகள்

1. ஏழை மற்றும் செல்வந்தரைப் பற்றி பாரதியார் எவ்வாறு விளக்குகிறார்?

   ஏழை மக்கள் இயல்பான ஏழைமக்களாக இருப்பதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் வஞ்சகராலும் செல்வர்களாலும் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படுவதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. இவ்வாறு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைக்கிறார். ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்க வேண்டும். செல்வம் எல்லோருக்கும் பொதுவாக அமைதல் வேண்டும், என கவிஞர் கூறுகிறார்.

2. கவிஞர் காட்டும் வழி யாது?

   ஓடப்பராய் இருக்கம் ஏழை மக்கள் உதயப்பர் ஆகிவிட்டால், நொடிப்பொழுதில் ஓடப்பர், உயரப்பர் எல்லாம் மாறி ஒப்பொப்பர் ஆகிவிடுவார். இதை உணரவேண்டும் என கவிஞர் கூறுகிறார். கவிஞர் காட்டும் வழி, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற உயர்ந்த குறிக்கோளை அடையும் வழியாகும் என கூறுகிறார்.

3. பாரதத்தின் பெருமையை கவிஞர் எவ்வாறு விளக்குகிறார்?

   பாரத தேசம் உலகினிற் சிறந்தது. உருவத்தில் பெரியது. தவயோகிகள் சித்தர்கள் வாழ்ந்தது. பல வளம் நிறைந்தது. பகுத்தறிவில் உயர்ந்தது என கவிஞர் பாரதத்தின் பெருமையை விளக்குகிறார். உடல் வலிமை, ஊக்கம் உடைமை, உறுதியுடைமை கொண்டு உலக இன்பங்களை எல்லாம் உயர்ந்த வழிமுறைகளில் அனுபவித்த வீரர்கள் தீரர்கள் வாழ்ந்த நாடு நம் நாடு என விளக்குகிறார்.

4. நோய்க்கு அறிகுறிகளாக கவிஞர் எவற்றைக் கூறுகிறார்?

   உணவிலே பெருவிருப்பம், ஒழுக்கம் மறத்தல், பெண்டுகள் மக்களை முறையாக வளர்க்காமை, தலை எழுத்து என வினை செய்யாமை முதலியன நோயைத் தருவனவாகும், என கவிஞர் கூறுகிறார்.



10811A_rev2.indd 55 12/5/2018 3:48:34 PM

குறிப்பு

5. பிறைநிலவைப் பற்றி பெ.தூரன் எவ்வாறு விளக்குகிறார்?

மாலையிலே காதலன் வரவை எதிர்நோக்குகிறாள் கன்னி ஒருத்தி. பாதையிலே முனையிலே அவன் வரவைப் பார்த்ததும் உளம் பூரிக்கிறாள். புதர்ச் செறிவில் மகிழ்ச்சியோடு மறைகின்ற அவள் புன்னகை சிந்துகிறாள். அது போலப் பிறை நிலவே நீ விளங்குகிறாய் எனக் கவிஞர் பாராட்டுகிறார். ஆசையற்றவன் சிவன்,தோலாடை உடுத்து அரவு புனைந்தவன். உன் அழகன்றோ அவனையும் மயக்கிச் சிரத்தில் அணிய வைத்தது. கலை கலையாக மலரும் அரும்பே கவிஞனுக்குக் கற்பனை தரும் நிலவே உன்னைக் கானும்போதெல்லாம் உன் வளர்ச்சியும் மலர்ச்சியும் புதிய நம்பிக்கையைத் தருவதாக கவிஞர் கூறுகிறார்.



10811A_rev2.indd 56 12/5/2018 3:48:34 PM

# கூறு 6

# வல்லிக் கண்ணன்
# வெறும் புகழ்

குறிப்பு

வல்லிக்கண்ணன் (ரா. சு. கிருஷ்ணசாமி, நவம்பர் 12, 1920 – நவம்பர் 9, 2006) என்பவர் ஒரு தமிழக எழுத்தாளர். இவரது தந்தை ரா. மு. சுப்பிரமணிய பிள்ளை, தாய் மகமாயி அம்மாள். எழுத்தாளராக வேண்டும் என்பதற்காகவே அரசுப் பணியிலிருந்து விலகியவர். அரசுப் பணியிலிருந்து விலகிய பின்னர் தொடக்கத்தில் இதழ்களில் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். பின்னர் சிறுகதை, நாவல், குறுநாவல், கட்டுரை என ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறார். இவருடைய சிறுகதைகளில் சில ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. இவருடைய பெரிய மனுஷி எனும் சிறுகதை அனைத்து இந்திய மொழிகளிலும் நேரு பால புத்தக வரிசையிலும் வெளிவந்துள்ளது. இவர் எழுதிய "வல்லிக்கண்ணனின் சிறப்புச் சிறுகதைகள்" எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2002 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் சிறுகதை எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

பார்க்கப் போனால்
வெறும் புகழில்
என்ன இருக்கிறது
புகழ் ஒரு வேசி

ஏஏய் வேசியாவது
காசு சம்பாதிப்பாள்
கிராக்கி வராதபோது
இன்பம் தருவாள்
வெறும் புகழ்
என்ன தர முடியும்

காப்பி தாகம்
மனசை வறட்டுது
புகழைச் குடிக்க முடியுமா

பசி வேட்டை நாயென
குடலைக் குதறுது
புகழ் தீனி ஆகுமா



10811A_rev2.indd 57 12/5/2018 3:48:35 PM

குறிப்பு

கண்டதும் கவரும்
பண்டமும் பகட்டும்
கண்ணில் பட்டால்
ஆசை தூண்டுது
வாங்கி மகிழ் என
மணிப் பர்ஸ் காலி
புகழைக் கொண்டு
பணப்பை ரொம்புமா
உள்ளத்தில் அரிப்பு
ஊர் சுற்ற வேணும்
சட்டையோ கிழிசல்
புகழைச் சட்டையாக
அணிய முடியுமா
தெருவில் போனால்
தார் ரோடு பொசுக்குது
புகழ் செருப்பு ஆகுமா
கடும் வெயில் தாக்கி
மூளை குழம்புது காத்திட
புகழ் என்ன குடையா
குளிர் இரவில்
பனிக் காற்று
உடலை வாட்டுது
புகழ் போர்வை இல்லையே
பார்க்கப் போனால்
வெறும் புகழில்
என்ன இருக்கிறது

## விளக்கவுரை

வல்லிக்கண்ணன் சிறுகதை ஆசிரியர். கேலியும் கிண்டலுமாக எழுதுபவர். ஆண் சிங்கம். தத்துவ தரிசனம் முதலிய சிறுகதைகள் அவருக்குப் புகழ் தந்தவை. ஆற்றலும் வேகமும் உடையவை அவருடைய படைப்புகள். பெரிய மனுஷி என்ற கதை பலராலும் பாராட்டப் பெற்ற கதை.

பழைய செய்யுள் மரபுகளை விட்டுவிட்டு புதுக் கவிதைகள் புனைவதில் ஈடுபட்டவர் சிலர். அக் கவிதைகளில் உரைநடை போன்ற எளிய



10811A_rev2.indd 58 12/5/2018 3:48:35 PM

சொல்லமைப்பு காணப்படும். சில புதுக் கற்பனைகள் இடம் பெறும். இத் துறையில் ஈடுபட்டவர்களில் வல்லிக் கண்ணனும் ஒருவர்.

**குறிப்பு**

இப்பாடலில் கவிஞர் அன்றாட வாழ்க்கையை எண்ணிப் பார்க்கிறார். தாகம் எடுக்கிறது. பசி எடுக்கிறது. ஊர் சுற்ற ஆசை பொங்குகிறது. கடும் வெயில் தலையில் சுடுகிறது காலைப் பொசுக்குகிறது பனிக்காற்று உடலை வாட்டுகிறது. இவற்றில் இருந்து எல்லாம் நம்மைக் காக்க வேண்டும். அது நம் கடமை. வேண்டும் போது காபி அருந்த வேண்டும். உணவு வேண்டும். நல்ல ஆடைகள் வேண்டும். குடையும், செருப்பும் வேண்டும். போர்வை வேண்டும். இதற்கெல்லாம் காசு வேண்டும். காசு இல்லாத போது வாழ்க்கையே நரகமாகி விடுகிறது. வெறும் புகழால் என்ன பயன் என்று கவிஞர் வருந்துகிறார். புகழும் தேவை. ஆனால் அதற்கு மேல் பணமும் தேவை. இந்த யதார்த்தத்தைக் கவிஞர் கவிதையில் உணர்த்துகிறார். பசியை வேட்டை நாயொடு உவமிப்பது சிறப்புடையது.

# கு. ப. இிராஜகோபாலன்

ப.ரா என்று பரவலாக அறியப்பட்ட கு.ப. ராஜகோபாலன் (ஜனவரி 1902 – ஏப்ரல் 27, 1944) ஒரு தமிழ் எழுத்தாளர். சிறுகதை, நாவல், கவிதை, வசன கவிதை, ஓரங்க நாடகம், திறனாய்வு, வாழ்க்கை வரலாறு,மொழிபெயர்ப்பு எனப் பலவகைப் படைப்புகளை அளித்தவரெனினம் அவரது சிறுகதைகளின் சிறப்பினால் “சிறுகதை ஆசான்” என்று அழைக்கப்படுகிறார்.

### வாழ்க்கை வரலாறு

கு.ப. ரா கும்பகோணத்தில் பிறந்தவர். அவருடைய பெற்றோர் பட்டாபிராமையர் – ஜானகி அம்மாள். திருச்சி கொண்டையம்பேட்டைப் பள்ளியில் ஆரம்பக் கல்வியும், தேசியக் கல்லூரியில் இடைநிலை (இண்டர்மீடியட்) கல்வியும் பெற்றார். கும்பகோணம் அரசினர் கல்லூரியில் வடமொழியை சிறப்புப் பாடமாகக் கொண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார். தனது 24ஆம் வயதில் அம்மணி அம்மாளை மணந்தார். மதுரை மாவட்டம் மேலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கணக்கராகப் பணியாற்றினார். கண்புரை நோயின் காரணமாக கண் பார்வை குன்றியதால் அப்பணியில் இருந்து விலகினார். கண் பார்வை குன்றிய நிலையிலும் மணிக்கொடி போன்ற இதழ்களில் அவரது இலக்கியப் படைப்புகளை எழுதி வெளியிட்டார்.

மருத்துவ சிகிச்சைக்குப்பின் கண் பார்வை மீண்டும் கிட்டியது. சென்னைக்கு இடம்பெயர்ந்து முழுநேர எழுத்தாளராக மாறினார். மணிக்கொடி, கலைமகள், சுதந்திர சங்கு, சூறாவளி, ஹனுமான், ஹிந்துஸ்தான் போன்ற



10811A_rev2.indd 59 12/5/2018 3:48:35 PM

குறிப்பு

இதழ்களில் அவரது படைப்புகள் வெளியாகின. வ. ராமசாமி ஆசிரியராக இருந்த "பாரத தேவி" என்ற இதழிலும், கா. சீ. வெங்கடரமணி நடத்திய "பாரத மணி" இதழிலும் சிலகாலம் பணியாற்றினார். இரண்டாம் உலகப் போரின் போது கும்பகோணத்துக்கு மீண்டும் திரும்பி "மறுமலர்ச்சி நிலையம்" என்ற பெயரில் புத்தக நிலையம ஒன்றை நடத்தினார். 1943ஆம் ஆண்டு கிராம ஊழியன் இதழின் சிறப்பாசிரியராகப் பொறுப்பேற்றார். அதற்கு அடுத்த ஆண்டு அவ்விதழின் ஆசிரியரானார். ஆனால் இழைய அழுகல் நோயால் தாக்கப்பட்டு 1944ஆம் ஆண்டு இறந்தார்.

## எதற்காக

பாம்பே, படமெடுத்து நீ ஏன் இப்படி
மகுடிமுன் மெய்மறந்து ஆடுகிறாய்
பாம்பாட்டிக்குப் பிழைப் பளிக்கவா
இல்லை, இல்லை
ஆடியாடியுன் ஆவலைத் தீர்த்துக் கொள்ள

ராதே, குழலோசை கேட்டேன் நீ
காதல் கொண்டு கானகமெல்லாம் ஓடுகிறாய்
கண்ணனுக்குன் கண்ணோக்கின்ப மளிக்கவா
இல்லை, இல்லை
ஓடி ஓடி உன் உள்ளப் பூரிப்பைக் கொட்ட
பெண்ணே, புருஷனுக்கேன் இப்படிப் பணிந்து
அடிமை போல் இட்டதெல்லாம் செய்கிறாய்
பண்ணு என்று சொல்லும்
புருஷனுக் கஞ்சியா
இல்லை, இல்லை
இட்டதைச் செய்து செய்து
உணர்ச்சியை அடக்க

சிறிது வெளிச்சம் என்ற கு. ப. ரா. வின் நூலிலிருந்து இப் பாடல் தரப்பட்டுள்ளது.

### விளக்கவுரை

சிறு கதை உலகில் நிலையான இடம் பெற்றவர்களில் ராஜகோபாலனும் ஒருவர். குடும்ப வாழ்க்கையின் இன்ப துன்பங்களை அவர் கதைகள் நன்றாகக் காட்டுவன. உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதில் திறமை



10811A_rev2.indd 60 12/5/2018 3:48:35 PM

வாய்ந்தவர். விடியுமா என்ற கதை பொழுது விடிவதையும் அவள் வாழ்க்கை விடியாததையும் சொல்லுகிறது. கிராமத்துச் சூழ்நிலை அவருக்குப் பிடித்தது. திரை என்ற கதையில் இளம் விதவை தன் உடன் பிறந்தாளுக்காக வாழ்வதை அருமையாகச் சித்தரிக்கிறார்.

குறிப்பு

எதற்காக என்ற இந்தக் கவிதையில் கவிஞர் கு. ப. ராஜகோபாலன் புதிய சிந்தனைகளைத் தருகிறார். மகுடிமுன் பாம்பு மெய்ம்மறந்து ஆடுகிறது. மகுடி இசை பாம்பை ஆட்டுவிக்கிறது. அந்த ஆட்டம் பாம்பாட்டிக்கு வாழ்வு அளிப்பதற்கும் தான். ஆனால் கவிஞர் அதை மறுத்து பாம்பின் ஆடும் ஆவலைத் தீர்த்துக் கொள்ள என்கிறார்.

குழலோசை கேட்ட ராதை கண்ணனைக் காணக் கானகமெல்லாம் ஓடுகிறாள். கண்ணனைக் காண்பதுவும் அவள் நோக்கம். உள்ளப் பூரிப்பை வெளிப்படுத்துவதும் அவள் நோக்கம். கண்ணனுக்குப் பார்வையால் இன்பம் தருவது என்பதைக் கவிஞர் மறுக்கிறார்.

பண்ணு என்னும் கணவனுக்கு அஞ்சியா மனைவி பணிவிடைகள் செய்கிறாள். இல்லை என்கிறார் கவிஞர். அவள் உணர்ச்சிகளை அடக்க அவ்வாறு செய்கிறாள் என்கிறார். எதற்காக என்பது கவிஞரின் புதிய சிந்தனை ஆகும்.

## மீரா

மீரா என்ற மீ. ராசேந்திரன் 1938 ஆம் ஆண்டு சிவகங்கையில் பிறந்தவர். சிவகங்கைக் கல்லூரியில் படித்து அங்கேயே பேராசிரியராகவும் பணியாற்றியவர்.

வந்திருக்கும் விருந்தினருக்கு
இலையினிலே உணவிருக்கும்
வரப்போகும் விருந்தினருக்கு
அடுப்பினிலே உலையிருக்கும்

ஜோடனைக்கோ புகழ்ச்சிக்கோ எழுதப்பட்ட வரிகள் அல்ல இவை. 2. சிவன்கோவில் தெற்குத் தெரு, சிவகங்கை என்ற விலாசத்தில் வாழ்ந்த கவிஞர் மீராவின் இல்லத்தின் யதார்த்தம். இதனை இன்றைய எழுத்துக் கலைஞர்கள் பலரும் அறிவார்கள்.

சிவகங்கை ஏன்ற சிறு நகரத்தில் அன்றைய காலகட்டத்தில் அவர் பதிப்புத் துறைக்கு செய்த பங்களிப்பு மிகவும் முக்கியமானது.

கி. ராஜநாராயணன், கந்தர்வன், பா. செயப்பிரகாசம், இன்குலாப், நாஞ்சில் நாடன், கோணங்கி, பாவண்ணன், எஸ். ராமகிருஷ்ணன் முதலான



10811A_rev2.indd 61 12/5/2018 3:48:35 PM

குறிப்பு

படைப்பாளிகள் பலரைத் தேடிக் கண்டறிந்து அவர்களின் படைப்புகளைத் தனது ‘அன்னம்’ பதிப்பகத்தின் மூலமாக எளிமையாகவும் நேர்த்தியாகவும் வெளிக்கொணர்ந்தவர் கவிஞர் மீரா. இளம் படைப்பாளிகள் பலரையும் அடையாளம் கண்டுகொண்டு அவர்களின் புத்தகங்களை வெளியிட்டது மீராவின் மிக முக்கியமான பங்களிப்பு.

இவை தவிர, அங்கதக் கவிதைகளின் முன்னோடி, சிவகங்கை மன்னர் கல்லூரியின் பிடித்தமான பேராசிரியர், பகை அறியாத மனிதர், மனிதர்களை குறைநிறைகளோடு வாங்கிக்கொள்ளும் பண்பு கொண்டவர் என்று அவரைப் பற்றிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

## அழகும் அச்சும்

அவருடைய அச்சுக்கூடம் கலையம்சம் மிக்கது. 5 × 3 என்ற அளவில் முகப்பில் பாரதியின் சித்திரம். உள்ளே நுழைந்ததும் தமிழாசிரியர். பெரியவர் வரதராசன் மெய்ப்புத் திருத்தம் செய்துகொண்டிருப்பார். இடைகழியில் அச்சுக்கோக்கும் பணியில் பெண்கள். அந்த இடத்துக்கே பொருந்திப்போகிற மாதிரி பணியாளர்கள். முகப்பறையில் அவர் பதிப்பித்த நூல்கள் வரிசை மாறாமல் நேர்த்தியாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். மீரா சன்னமான குரலில் வேலை வாங்கிக்கொண்டிருப்பார். வாசலில் முதிர்ந்த அரசமரம். இப்படி ஒரு சூழலுள்ள அச்சகத்தை இனி பார்க்க முடியாது. அச்சகம் மட்டுமல்ல, அன்னம் பதிப்பகத்தின் மூலமாக அவர் பதிப்பித்த படைப்பிலக்கிய நூல்களைப் பார்க்கும்போது மீரா என்ற தேர்ந்த ரசனையாளரையும் பார்க்க முடிகிறது. அழகியலையும் கலையையும் சார்ந்து இயங்கும் படைப்பாளிகளை இனங்கண்டுகொண்ட கண்கள் அவருடையவை.

### ‘கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்’

மீராவின் ‘கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்’ கவிதைத் தொகுப்பின் பாதிப்பில் துணுக்குத் தோரணங்களாக நூற்றுக்கணக்கான கவிதைத் தொகுப்புகள் வெளிவந்திருக்கின்றன. கவிஞராக அவர் செய்த பங்களிப்பைக் காட்டிலும் பதிப்பாளராகக் கவிதையுலகுக்குப் பெரும் பங்களிப்பைச் செய்திருக்கிறார்.

பாரதியார் நூற்றாண்டு விழாவையொட்டி அன்னம் வெளியிட்ட நவகவிதை வரிசை தமிழில் அப்போது எழுதத் தொடங்கியிருந்த முக்கியமான கவிஞர்களை அடையாளம் காட்டியது. கல்யாண்ஜி, நா. விச்வநாதன், ந. ஜயபாஸ்கரன் என்று அவ்வளவாக அறியப்படாதிருந்த புதுக்கவிஞர்களின்மீது பெரும் கவனம் குவிந்தது.



10811A_rev2.indd 62 12/5/2018 3:48:35 PM

**குறிப்பு**

இலக்கிய நூல்களுக்கு இன்றைக்கு உருவாகியிருக்கும் குறைந்தபட்ச விற்பனைச் சந்தையும்கூட அன்னம் தொடங்கப்பட்ட காலத்தில் இல்லை. பதிப்பகம் தொடங்கிய தமிழ்ப் பேராசிரியர்கள் ஒருசிலர் அதை வெற்றிகரமாக நடத்துவதற்காகப் பதிப்பிக்கும் புத்தகங்களைப் பாடநூல்களாக்கிவிடும் சாமர்த்தியத்தைக் கற்றுவைத்திருந்தார்கள். ஒருசிலர் முனைவர் பட்ட ஆய்வேடுகளையும்கூட ஈவிரக்கமின்றி அச்சிட்டு நூலக ஆணைகளைப் பெற்றார்கள்.

மீராவும் நூலக ஆணைகளை நம்பித்தான் புத்தகம் போட்டார் என்றாலும், அவர் அந்த எல்லைக்குள் செய்த முயற்சிகளுக்கு தமிழ் இலக்கிய உலகம் நன்றிக்கடன் பட்டிருக்கிறது. முதலாவதாக,அவர் இளங் கவிஞர்களையும் எழுத்தாளர்களையும் அறிமுகப்படுத்தினார்.

தமிழ் இலக்கியச் சூழலுக்கு நவீன இலக்கியக் கோட்பாட்டு நூல்களின் வாயிலாக வளம்சேர்த்தார். பாரதியைக் கொண்டாடினார். மீரா தொகுத்தளித்த 'பாரதியம்' அவரைப் பற்றிய புத்தகங்களில் முக்கியமானது.

மார்க்ஸிய இயக்கத் தொடர்புகளோடு எழுத ஆரம்பித்த இளம் எழுத்தாளர்களுக்கு பெரும் வாசக வரவேற்பைப் பெற்றுத்தந்தது அன்னம் பதிப்பகம்தான்.

பதிப்பித்த நூல்களுக்கான சன்மானத்தைக் கொடுப்பதை வழக்கமாக வைத்திருந்தவர் மீரா. இன்றும்கூட பெரும்பாலான பதிப்பாளர்களால் அதை நடைமுறைக்குக் கொண்டுவர முடியவில்லை.

மாமல்லபுரச் சாலையில் கவிஞர்களுக்காக பாரதி கவிதா மண்டலம் அமைக்க வேண்டும் என்று மீரா ஆசைப்பட்டார். சிறுபிள்ளையாக பர்மாவில் வாழ்ந்த காலத்தைப் புதினமாக்கவும் மீரா ஆசைப்பட்டார். இப்படிப் பல ஆசைகளையும் சுமந்த இதயம் அவருடையது. ஆனால், இவை யாவும் தன்னை முன்னிலைப்படுத்திக்கொள்ளாத ஆசைகள் என்பதுதான் முக்கியமான விஷயம்.

உன் நெற்றியைப் பார்த்து விட்டு
    எந்தக் கோயிலுக்குப்
போய் விட்டு வருகிறாய்
    என்கிறேன்
முருகன் கோவிலுக்கு …
பதில் பஞ்சாமிர்தமாய் வருகிறது
அவன்



10811A_rev2.indd 63 12/5/2018 3:48:35 PM

குறிப்பு

ஒரு மயில்மேல் மட்டுமல்ல
இரு மயில்களோடும் இருக்கிறான்
என்பதை மறந்து விட்டாயா
என்கிறேன்.
அந்தத் துணிச்சலில்
அரைவாசியாவது
உங்களுக்கு இருந்தால்
இந் நேரம்...
என்று தான் நினைத்துக் கொண்டு வருகிறேன்
உன் பதில் வேலாய் வந்து விழுகிறது.
நீ பொல்லாதவள்

### விளக்கவுரை

மீ. ரா. கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் என்ற நூலிலிருந்து இது எடுக்கப் பெற்றது.

புதுக் கவிதைகள் எழுதுவதில் ஈடுபட்டவர். இவரோடு பல புதுக் கவிஞர்கள் மானுடம் பாடும் வானம்பாடி ஆயினர். எதிர்காலச் சிந்தனை முதலியவற்றுக்கு இவர்கள் முக்கியத்துவம் கொடுத்தனர். புதுக்கவிதை உலகின் விடி வெள்ளிகள் இவர்கள்.

தலைவன் தலைவியின் உரையாடலாக இக் கவிதை மலர்கிறது. கோயிலுக்குப் போய் வருகிற தலைவியின் நெற்றியைப் பார்த்துவிட்டுத் தலைவன் கேட்கிறான். எந்தக் கோவிலுக்கு முருகன் கோவிலுக்கு பதில் அந்த பதில் தலைவனுக்கு பஞ்சாமிர்தமாய் இனிக்கிறது. அதற்குக் காரணம் அடுத்த பேச்சில் வெளிப்படுகிறது.

முருகன் ஒரு மயில் மேல் மட்டுமல்ல பக்கத்திலும் இரண்டு மயில்களை வைத்திருக்கிறான் பார்த்தாயா என கவிஞர் வள்ளி, தெய்வயானையைக் குறிப்பிடுகிறார். அதில் அவருக்கு இரண்டு மனைவியர் இல்லையே என்ற ஏக்கமும் கலந்திருக்கிறது.

தலைவி பதில் சொல்லுகிறாள். அந்தத் துணிச்சலில் உங்களுக்குப் பாதியாவது இருந்தால் இந்நேரம்... நிறுத்துகிறாள் தலைவி. வீட்டிற்கு ஒருத்தி வந்திருக்க மாட்டாளா என்ற கருத்து தொனிக்கிறது. மேலும் யாராவது வந்திருக்கக் கூடாது என்ற எதிா பார்ப்பும் தலைவியின் பேச்சில் இருக்கிறது.

தலைவன், அவள் பதில் வேலாய் வந்து விழுகிறது என்று கூறிப் பொல்லாதவள் என்றும் பாராட்டுகிறான்.



10811A_rev2.indd 64 12/5/2018 3:48:35 PM

முருகன் என்றதுமே கவிஞருக்குப் பஞ்சாமிர்தமும், வேலும் நினைவுக்கு வருகின்றன.

## வினா-விடைகள்

குறிப்பு

1. வல்லிக் கண்ணனைப் பற்றி சிறு குறிப்பு வரைக.

   வல்லிக் கண்ணன் சிறுகதை ஆசிரியர். கேலியும் கிண்டலுமாக எழுதுபவர். ஆண்சிங்கம், தத்துவ தரிசனம் முதலிய சிறுகதைகள் அவருக்குப் புகழ் தந்தவை. ஆற்றலும் வேகமும் உடையவை அவருடைய படைப்புகள். பெரிய மனுஷி என்ற கதை பலராலும் பாராட்டப் பெற்ற கதை. பழைய செய்யுள் மரபுகளை விட்டுவிட்டு புதுக் கவிதைகள் புனைவதில் ஈடுபட்டவர் சிலர். அக் கவிதைகளில் உரைநடை போன்ற எளிய சொல்லமைப்பு காணப்படும். சில புதுக் கற்பனைகள் இடம் பெறும். இத்துறையில் ஈடுபட்டவர்களில் வல்லிக் கண்ணனும் ஒருவர்.

2. “வெறும் புகழ்” கவிதையில் யதார்த்தத்தை எவ்வாறு விளக்குகிறார்?

   இப்பாடலில் கவிஞர் அன்றாட வாழ்க்கையை எண்ணிப் பார்க்கிறார். தாகம் எடுக்கிறது. பசி எடுக்கிறது. ஊர் சுற்ற ஆசை பொங்குகிறது. கடும் வெயில் தலையில் சுடுகிறது. காலைப் பொசுக்குகிறது. பனிக்காற்று உடலை வாட்டுகிறது. இவற்றில் இருந்து எல்லாம் நம்மைக் காக்க வேண்டும். அது நம் கடமை. வேண்டும் போது காபி அருந்த வேண்டும். நல்ல ஆடைகள் வேண்டும். குடையும், செருப்பும் வேண்டும். போர்வை வேண்டும். இதற்கெல்லாம் காசு வேண்டும். காசு இல்லாத போது வாழ்க்கையே நரகமாகி விடுகிறது. வெறும் புகழால் என்ன பயன் என்று கவிஞர் வருந்துகிறார். புகழும் தேவை. ஆனால் அதற்கும் மேல் பணமும் தேவை. இந்த யதார்த்தத்தைக் கவிஞர் கவிதையில் உணர்த்துகிறார்.

3. “எதற்காக” என்ற கவிதையில் ஆசிரியர் கூறுவது யாது?

   “எதற்காக” என் கவிதையில் கவிஞர் கு.ப. ராஜகோபாலன் புதிய சிந்தனைகளைத் தருகிறார். மகுடிமுன் பாம்பு மெய்மறந்து ஆடுகிறது. மகுடி இசை பாம்பை ஆட்டுவிக்கிறது. அந்த ஆட்டம் பாம்பாட்டிக்கு வாழ்வு அளிப்பதற்கும் தான். ஆனால் கவிஞர் அதை மறுத்து பாம்பின் ஆடும் ஆவலைத் தீர்த்துக் கொள்ள என்கிறார்.

குழலோசை கேட்ட ராதை கண்ணனைக் காண் கானகமெல்லாம் ஓடுகிறாள். கண்ணனைக் காண்பதுவும் அவள் நோக்கம். உள்ளப் பூரிப்பை வெளிப்படுத்துவதும் அவள் நோக்கம். கண்ணனுக்குப் பார்வையால் இன்பம் தருவது என்பதைக் கவிஞர் மறுக்கிறார்.

பண்ணு என்னும் கணவனுக்கு அஞ்சியா பணிவிடைகள் செய்கிறாள். இல்லை என்கிறார் கவிஞர். அவள் உணர்ச்சிகளை அடக்க அவ்வாறு செய்கிறாள் என்கிறார். “எதற்காக” என்பது கவிஞரின் புதிய சிந்தனை ஆகும்.

4. “மீரா”வின் கவிதை தரும் கருத்தை எழுதுக.

தலைவன் தலைவியின் உரையாடலாக இக்கவிதை மலர்கிறது. கோயிலுக்குப் போய் வருகிற தலைவியின் நெற்றியைப் பார்த்துவிட்டு எந்தக் கோவிலுக்கு போய் வருகிறாய் எனக் கேட்கிறான். அதற்கு தலைவி முருகன் கோவிலுக்கு என்கிறாள். அந்த பதில் தலைவனுக்கும் பஞ்சாமிர்தமாய இனிக்கிறது. அதற்கு காரணம் அடுத்த பேச்சில் வெளிப்படுகிறது. முருகன் ஒரு மயில் மேல் மட்டுமல்ல பக்கத்திலும் இரண்டு மயில்களை வைத்திருக்கிறான். பார்த்தாயா என கவிஞர் வள்ளி, தெய்வானையைக் குறிப்பிடுகிறார். அதில் அவருக்க இரண்டு மனைவியர் இல்லையே என்ற ஏக்கமும் கலந்திருக்கிறது. தலைவி பதில் சொல்கிறாள். அந்தத் துணிச்சலில் உங்களுக்குப் பாதியாவது இருந்தால் இந்நேரம் நிறுத்துகிறாள் தலைவி. வீட்டிற்கு ஒருத்தி வந்திருக்க மாட்டாளா என்ற கருத்து தொனிக்கிறது. மேலும் யாராவது வந்திருக்கக் கூடாது என்ற எதிர்பார்ப்பும் தலைவியின் பேச்சில் இருக்கிறது.

தலைவன், அவள் பதில் வேலாய் வந்து விழுகிறது என்று கூறிப் பொல்லாதவள் என்றும் பாராட்டுகிறான்.

# கூறு 7

# சிற்பி

குறிப்பு

தமிழ்நாட்டின் தென்மேற்கு எல்லையில் கேரளத்தை ஒட்டி இருக்கும் மாவட்டம் கோயம்புத்தூர். கோவை என்ற இந்த மாவட்டத்தில் உள்ள ஆத்துப் பொள்ளாச்சியில் 29-7-1936-இல் பிறந்தார். பொ. பாலசுப்பிரமணியன் என்ற தம் பெயரைக் கவிதைக்காகச் சிற்பி என்று புனைந்து கொண்டார்.

## கல்வியும் பணியும்

இளம் வயதிலேயே கவிதைகள் எழுதினார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார். மலையாள மொழியையும் நன்கு அறிந்தவர். மலையாள மகாகவி வள்ளத் தோளுடன் தமிழ் மகாகவி பாரதியை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்து முனைவர் (பிஎச்.டி) பட்டம் பெற்றார். பொள்ளாச்சி நாச்சிமுத்துக் கவுண்டர் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணி ஆற்றினார். பின்னர்க் கோவை பாரதியார் பல்கலைக் கழகத்தின் கமிழ்த்துறைத் தலைவராகப் பணி ஆற்றி ஓய்வு பெற்றார்.

மரபு இலக்கிய இலக்கணப் பயிற்சி பெற்றுப் பின்னர்ப் புதுமை நாட்டத்தால் புதுக்கவிதை எழுத வந்த கவிஞர்களுள் பலர் தமிழ்ப் பேராசிரியர்கள். சிற்பி, மீரா, அப்துல் ரகுமான், அபி, நா.காமராசன், தமிழன்பன், இன்குலாப், மு.மேத்தா என்று இப்பட்டியல் நீளும். இவர்களுள் தமக்கென்று ஒரு தனி வழி வகுத்துக் கொண்டு எழுதி வருபவர் சிற்பி.

பொதுவுடைமைக் கொள்கையில் ஈடுபாடு கொண்டவர். வானம்பாடி கவிதை இயக்கத்தின் உந்து விசையாய் இருந்து, புதுக்கவிதை வளர்ச்சியில் பங்கேற்றவர்.

## படைப்புகள்

நிலவுப்பூ (1963), சிரித்த முத்துக்கள்(1968), ஒளிப்பறவை (1971), சர்ப்ப யாகம் (1974), புன்னகை பூக்கும் பூனைகள் (1980), மௌன மயக்கங்கள் (1982), சூரிய நிழல் (1991), இறகு (1996) ஒரு கிராமத்து நதி முதலிய கவிதை நூல்களைப் படைத்திருக்கிறார். இன்னும் எழுதி வருகிறார். கவிதை நாடகம்: ஆதிரை, குழந்தை இலக்கியம்: வண்ணப்பூக்கள், சிற்பிதரும் ஆத்திசூடி. உரைநடையிலும் பத்துக்கு மேற்பட்ட நூல்களையும், ஆங்கிலத்தில் ஒரு நூலையும் படைத்துள்ளார்.



10811A_rev2.indd 67 12/5/2018 3:48:35 PM

குறிப்பு

## விருதுகள்

சாகித்ய அகாதமி விருது, தமிழ்நாடு அரசின் பரிசு, பாவேந்தர் விருது தமிழ்ப்பல்கலைக் கழகப் பரிசு எனப் பல பெருமைகளைப் பெற்றவர்.

தம் பெயரில் ஒரு 'கவிதை அறக்கட்டளை'யை நிறுவி இருக்கிறார். ஆண்டுதோறும் சிறந்த முதுபெரும் கவிஞர் ஒருவரையும் இளங்கவிஞர் ஒருவரையும் தேர்ந்தெடுத்துப் பரிசு வழங்கிப் பாராட்டி வருகிறார்.

இக்காலத் தமிழ்க் கவிஞர்களுள் ஒரு தனிச்சுடராய் ஒளிர்கிறார்.

## சிற்பியின் கவிதைகள்

கல், மரம் இவற்றை உளியால் செதுக்கி அழகிய சிலைகளை வடிப்பவனைச் சிற்பி என்கிறோம். மண், பாரீஸ் பிளாஸ்ட்டர் போன்ற குழைவுப் பொருள்களால் அழகான உருவங்களைச் செய்பவனையும் சிற்பி என்போம்.

சிற்பக் கலை என்பதே தேவையானதை வைத்துக் கொண்டு தேவையற்ற பகுதிகளைச் செதுக்கித் தள்ளுவது தானே? கவிஞன் என்னும் சொற்சிற்பி படைக்கும் உலகம் மிக அழகாக இருக்கிறது. மிகச் சரியானதாக இருக்கிறது. குறைகள் அற்றதாக இருக்கிறது. உண்மை உலகம் தன் குறைகளைப் பார்த்துப் பார்த்து நீக்கி கொள்ள வழிகாட்டும் ஒரு 'மாதிரி' உலகமாக ஆகிவிடுகிறது.

கவிஞர் சிற்பி, அழகு உணர்ச்சியும், உயர்ந்த ஒழுக்கமும், தூய்மையும், மனித நேயமும், சொல்லை ஆளும் வல்லமையும் படைத்த நல்ல மனிதர். இதனால் இவர் படைக்கும் உலகம் குறைகள் இல்லாத தூய உலகமாய் இருக்கிறது. அதனுள் நுழையும் நமது குறைகளையும் நீக்குகின்ற மாய உலகமாய் இருக்கிறது.

## கவிதை பற்றிய சிற்பியின் கொள்கை

நண்பர்களே, பாரதிக்குப் பின் மரபுக் கவிதை வடிவத்தில் பலர் கவிதை எழுதினர். புதுமையை விரும்பிய சிலர் யாப்பு இலக்கணத்தைப் பின்பற்றாமல் 'புதுக்கவிதை' எழுதினர். இந்த இரு பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கு இடையில் கருத்துப் போர் நிகழ்ந்து வந்தது, இந்தச் செய்திகளை அறிந்திருக்கிறீர்கள் அல்லவா?

## வானம்பாடி இயக்கமும் எழுத்து இயக்கமும்

கவிதை பழையதோ புதியதோ, அது வாழ்க்கையின் பிரச்சினைகளை, மக்களின் சிக்கல்களை முன் நிறுத்த வேண்டும் என்பதே முக்கியம் என்ற ஒரு



10811A_rev2.indd 68 12/5/2018 3:48:36 PM

குறிப்பு

புதிய எழுச்சி பிறந்தது. இவ்வாறு சமுதாய நலன்களுக்காக எழுத முனைந்த சிலர் ஒன்று சேர்ந்தனர். 'மானுடம் பாடும் வானம்பாடிகள்' என்று தங்களை அழைத்துக் கொண்டனர். வானம்பாடி என்ற புதுக்கவிதைச் சிற்றிதழைத் (சிறு பத்திரிகை) தொடங்கினர். வானம்பாடி இயக்கம் தோன்றவும் வளரவும் காரணமாக இருந்தவர்களுள் சிற்பி முன் இடம் பெறுகிறார். ஏற்கனவே மரபு வழியில் எழுதி வந்தவர்களும் புதிதாக எழுதத் தொடங்கியவர்களும் இயக்கத்தில் இணைந்தனர். இந்த இதழில் புதுக்கவிதை வடிவத்தில் (அதாவது, மரபான யாப்ப இலக்கணத்தைத் துறந்து) எழுதினர்.

ந.பிச்சமூர்த்தி வழியில் புதுக்கவிதை படைத்தவர்களின் இதழ் எழுத்து என்பது. இந்த எழுத்து இதழ்சார்ந்த புதுக்கவிதை இயக்கத்தினர் 'வானம்பாடி' இயக்கக் கவிதைகளைப் புதுக்கவிதை என்றே ஏற்றுக் கொள்ளவில்லை. அதேபோல மார்க்சியச் சார்புள்ள வானம்பாடிப் படைப்பாளிகள் 'எழுத்து' வழியிலான கவிதைகளை ஏற்பதும் இல்லை.

### *சிற்பி - மரபும் புதுமையும்*

தம் இறகு என்னும் நூலில் 'என்னுரை' என்ற முன்னுரையில் சிற்பி கீழ்க் குறிப்பிடுமாறு எழுதுகிறார்:

"எழுத்து இதழும் வானம்பாடி இயக்கமும் வெவ்வேறு திசைகளில் கவிதையை இழுக்க முனைந்தாலும், அந்தத் தர்க்கத்துக்குள் நானும் என் கவிதையும் தத்தளித்து ஒருவாறு கரை ஏறுகிறோம்.

பரிசோதனைகளைப் பாராட்டுகிற அதே வேளையில் மூச்சுப் பிடித்துக் கவிதைகளைப் படிக்க வேண்டிய கொடுமையை நான் நிராகரிக்கிறேன். (அதாவது, புரிந்துகொள்ளச் சிரமப்படுத்தும் கவிதைகளை ஒதுக்குவதாகக் கூறுகிறார்)

'செத்த உடல்புதைத்துச் சித்திரங்கள் மேலெழுதும்' ஊறுகாய்க் கவிதைப் பாணியும் (இக்காலத்துக்குப் பொருந்தாத பழமைகளை அலங்காரம் செய்து பாராட்டித் திரியும் போக்கு) எனக்கு உவப்பூட்டுவதாய் இல்லை. சொந்தக் கவிதைகளை எழுதாமல் அன்னிய வாசனைகளுக்கு மயங்கும் நவீனத்துவங்களும் எனக்குச் சம்மதமில்லை.

நான் மரபின் பிள்ளை, புதுமையின் தோழன். என்களம் -என்மண். என் பாத்திரங்கள் - என் மனிதர்கள் என் பின்புலம் - தமிழ்இலக்கியம். மற்றவையும் மற்றவர்களும் எனக்கு விருந்தினர் மட்டுமே!"



10811A_rev2.indd 69 12/5/2018 3:48:36 PM

இவ்வாறு, சிற்பிக்குத் தம் எழுத்துக்கான பாதை எது என்ற தெளிவான கோட்பாடு இருக்கிறது. இதைத்தான் இந்த 'என்னுரை' குழப்பம் இன்றி உணர்த்துகிறது.

குறிப்பு

இவரது கவிதைகளின் வாடாத புதுமைக்கும், தெளிந்த ஓட்டத்துக்கும் இந்தத் தெளிவே காரணமாக நிற்கிறது.

### கவிதை என்ன செய்ய வேண்டும்?

'புன்னகை பூக்கம் பூனைகள்' - நூலின் முன்னுரையாக, சிற்பி கவிதை பற்றிக் கவிதை எழுதுகிறார்.

எழுத்து
ஆன்மாவின் ரத்தம்

கவிதைகள்
காலத்தின் உதடுகள்

தகிடுதத்தங்களுக்கு
நகக்கண் ஊசி

வடக்கும் தெற்கும்
மேற்கும் கிழக்கும்
பேதமாய்ப் பாரோம்!

யாம் திசைகளை விழுங்கும்
திகம்பர கவிகள்

(ஆன்மா = உயிர்; தகிடுதத்தம் = பொய்புரட்டுகள்; திகம்பர கவிகள் = திசைகளையே ஆடையாக உடுத்த கவிகள் - இந்தப் பெயருடன் தெலுங்கில் தோன்றிய புரட்சிக் கவிதை இயக்கம்)

கவிதை கவிஞனுடைய ஆன்மாவின் உயிர்ப்பாக (ரத்தமாக) இயங்க வேண்டும். காலத்தின் மாற்றங்களைப் பிரதிபலிக்க வேண்டும்; காலத்தின் தேவைகளுக்காகக் குரல்கொடுக்க வேண்டும்; பொய் புரட்டுகளின் நகக்கண்களில் ஊசியாய ஏறித தண்டிக்க வேண்டும். இனம், மொழி, தேச எல்லைகள் தாண்டிப் பொது மானிடத்தை மேம்படுத்த வேண்டும். இவையே கவிதையின் பணி என்கிறார் சிற்பி.

மேலே குறிப்பிட்ட வழியில் சிற்பியின் இலக்கியப் படைப்புக் கொள்கை அமைந்துள்ளது. இதனால் இவரது கவிதைகள் தம் மண்ணின் மணத்தைக்



10811A_rev2.indd 70 12/5/2018 3:48:36 PM

குறிப்பு

கொண்டு உள்ளன. தம் மக்களின் பண்பாட்டையும், மரபு சார்ந்த கலைச் செழிப்பையும் முழுமையாக ஏந்திப் பிறக்கின்றன. அதே வேளையில் உலகின் எல்லாத் திசைகளில் இருந்தும் புறப்பட்டு வரும் புதுமைகளை ஏற்கின்றன. உலகப் புதுமையோடு, தமிழ்ப் புலமை கைகோத்து நடக்கிறது. இதுவே சிற்பியின் படைப்புவழி.

வயிற்றுப் பிழைப்புக்காகத் தெருவில் நடக்கும் 'சின்ன சர்க்கஸில்' - தன் மீது ஏறி நிற்கும் தன் தந்தையின் சுமையைத் தாங்கிக் கிடக்கிறான் ஒர சின்னஞ் சிறுவன். இவனும் சிற்பியின் கவிதையில் நாயகன் - பாடுபொருள் - ஆகிறான். கணினி யுகத்தின் கண்டு பிடிப்பான, கண்ணீர் வடிக்கத் தெரியாத, இயந்திர மனிதனும் (ரோபோ) கவிதைப் பொருள் ஆகிறான்.

சிற்பி மண்ணில் நின்று நிலவைப் பாடும் பழங்கவிஞராகவும் இருக்கிறார்; அப்பாட்டிலும் புதுமை சிரிக்கிறது. நிலவில் ஏறி நின்று மண்ணைப் பார்க்கும் புதுக்கவிஞராகவும் இருக்கிறார்; அந்தப் பார்வையில் என்றும் மாறாத மனிதப் பண்பின் மரபுப் பழமை வேரோடி இருக்கிறது. அதில் தமிழனின் வழிவழி வந்த பண்பாட்டு மரபு தனித்தன்மையோடு மலர்ந்து மணக்கிறது.

## *சர்ப்ப யாகம்*

பரம பதத்துச்
சோபான படம்
எங்கள் தேசம்
அதில்
கட்டங்கள் தோறும்
நச்சுப் பாம்புகள்
காத்துக் கிடக்கின்றன

ஆதி சேஷன்
கார்க் கோடகன்
கண்ணாடி விரியன்
கொம்பேறி மூர்க்கன்
படங்கள் விரித்து
உடல்கள் நெளித்து
காத்துக் கிடக்கின்றன

தாயங்கள் போட்டு
நாங்கள் தொடங்கும்

குறிப்பு

ஒவ்வொரு பயணத்தையும்
தடுத்துக் கடிக்க
அடுத்துக் கெடுக்க
இத்தனை நாகங்களா

புறப்பட்ட திசைக்கே
விரட்டியடிக்கும்
இருட்டுத் தாரைகளே
பரம பதத்தின்
தடத்தை மறைக்கும்
திருட்டுச் சாரைகளே

வழிவிடச் சொல்லி
விரல்கள் நடுங்கத்
தாயம் உருட்டுகிறோம்...
உங்கள்
வாயில் விழுந்து
வாலில் வழிந்து
நேற்றைப் புரட்டுகிறோம்
எங்கோ சில சில
ஏணிகள் - அவற்றில்
ஏறி நிமிர்ந்தவுடன்
சீறிய உங்கள்
விஷ நாக்குகளின்
ஈரத்தில் வழுக்குகிறோம்
தலைமேல் பூமியை
வைத்தால் சுமக்கும்
ஆதி(க்க) சேடர்களே
சுற்றி வளைத்தால்
சமுதாயப் பாற்
கடலின் அலைநடுவே
இலாபம் கருதிச்
சுழலும் மந்தர
மலையின் தோள்களிலே
கடை கயிறாகிக்

குறிப்பு

கதையை நடத்தும்
வாசுகிப் பாம்புகளே
நடுங்கி நடுங்கித்
தாயக் கட்டைகள்
உருட்டிக் காத்திருந்தால்
பரமபதத்தை
ஒரு நாளும் நீர்
அடைந்திட விடமாட்டீர்

அதனால்
நாகங்கள் அழிக்கும்
யாகங்கள் தொடங்கினோம்
கொடிய சர்ப்ப யாகம்

எமது சர்ப்ப யாகத்தில்
சிறியது – குறியது
பெரியது – நெடியது
பூநாகம் முதல் பொறிநாகம் வரை
எரியும் - எரியும்
கரியும் - கரியும்

அந்த
எரிதழற் சாம்பலில்
ஒரு
பரம பதத்தை
எங்கள் சிரம பதத்தால்
சிருஷ்டித்துக் கொடுப்போம்.

ஏனெனில் இது
ஜனமே ஜய
யுகம்

சிற்பியின் கவிதை வானம் என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து இப் பாடல் பாடமாக வந்துள்ளது.

புதுக் கவிதை எழுதும் கவிஞர்களின் வானம்பாடி இயக்கத்தில் பங்கு பெற்றவர்களில் இவரும் ஒருவர்.

கவிஞர் சிற்பி பால சுப்பிரமணியம் 1936 இல் பிறந்தவர். 1963 இல் இவரது முதல் கவிதைத் தொகுதியாகிய நிலவுப்பூ வெளிவந்தது. அடுத்து



10811A_rev2.indd 73 12/5/2018 3:48:36 PM

அடுத்து ஏழு கவிதைத் தொகுதிகள் வெளிவந்தன. ஆதிரை இவரது கவிதை நாடகம் இலக்கியச் சிந்தனை, அலையும் சுவடும், மலையாளக் கவிதை ஆகியன இவரது உரைநடை நூல்கள்.

குறிப்பு

### விளக்கம்

சர்ப்ப யாகம் ஒரு குறியீட்டுக் கவிதையாகும். கவிஞர் சிற்பி வாழ்வில் வெற்றி பெற விரும்பம் மக்களைச் சித்தரிக்கிறார். அவர்களின் முயற்சிகளைத் தடுக்கும் பின்னடையச் செய்யும் தடைகளைப் பாம்புகளைத் (தீயவர்களைப்) படைக்கிறார். இவற்றின் பிடியிலிருந்து நழுவி மேலே செல்ல முயலும் மக்களின் முயற்சியினைக் காட்டுகிறார். ஆனாலும் அவர்களால் முடிவதில்லை. திரும்பத் திரும்ப பழைய இடத்திற்கே வருகிறார்கள். அவர்களுக்கு உதவச் சில ஏணிகளாக (சில நல்ல மனிதர்கள்) இருக்கிறார்கள். ஆனாலும் தீமை நிறைய இருப்பதால் மக்களால் மீள முடியவில்லை.

### விடிவெள்ளி

கவிஞர் சிந்தனையில் ஒரு புதிய விடிவெள்ளி தோன்றுகிறது. இந்த நாகங்களையே கொளுத்தினால் என்ன இது தான் சர்ப்ப யாகம். அதாவது யாகம் நடத்தி எல்லா சர்ப்பங்களையும் அதில் போடுவது.

எல்லா வகை நாகங்களும் (= தீமைகளும்) அங்கே எரிகின்றன – கரிகின்றன. அந்தச் சாம்பலில் ஒரு பரமபதத்தை (ஒரு புதிய பாரதத்தை) – நன்மை தரும் நிலையைச் சமைப்போம். இது கவிஞரின் தீர்ப்பு ஆகும்.

இன்றைய சமுதாயத்தை – மக்களை – உயர் நிலைக்குக் கொண்டுவரக் கவிஞர் எண்ணுகிறார். சமுதாயத்தில் இருக்கும் தீமைகளைக் களைந்தால் தானே நன்மைக்கு வழி கிடைக்கும். வாழ வழி கிடைக்கும். அந்த நன்மையை அடைய தீமையைப் பொசுக்குவோம் என்கிறார். இது புறத்தீமைகளை மட்டும் குறிப்பதன்று அகத்தீமைகளையும் களைய சொல்லுவதாகும். அக மாசுகளையும் புற மாசுகளையும் நீக்கினால் மக்கள் உன்னதமான வாழ்வை – சுக அனுபவத்தைப் பெறலாம். இது தான் ஆசிரியர் இக்கவிதையில் குறிப்பிட்டுச் சொல்லுவதாகும்.

---

## ஞானக்கூத்தன்
## தோழர் மோசி கீரனார்

---

மோசி கீரா
மகிழ்ச்சியினால்



10811A_rev2.indd 74 12/5/2018 3:48:36 PM

குறிப்பு

மரியாதையை நான்
குறைத்ததற்கு
மன்னித்தருள வேண்டும் நீ.

சொந்தமாக உனக்கிருக்கும்
சங்கக் கவிதை யாதொன்றும்
படித்ததில்லை நான் இன்னும்

ஆனால் உன்மேல் அளவிறந்த
அன்பு தோன்றிற்று
இன்றெனக்கு

அரசாங்கத்துக் கட்டிடத்தில்
தூக்கம் போட்ட முதல் மனிதன்
நீதான் என்னும் காரணத்தால்
ஞானக்கூத்தன் அன்று வேறு கிழமை என்ற நூலிலிருந்து.

1970 ஆம் ஆண்டுகளில் எழுத்து என்னும் பத்திரிக்கை, அதைத் தொடர்ந்து நடை, குருச் சேத்திரம், கணையாழி, கசடத பற போன்ற இதழ்கள் வாயிலாகப் புதுக் கவிதைகள் வளர்ந்தன. அப்போது புதுக்கவிதைகள் இயற்றியவர்களிற் குறிப்பிடத்தக்கவர்கள் நீல பத்ம நாபன், பால குமாரன், ஞானக் கூத்தன் போன்றோராவர்.

சங்க காலப் புலவர்களில் ஒருவர் மோசிகீரனார். அவர் ஒருமுறை சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் முரசு கட்டிலில் துயின்றார். அதைப் பார்த்த சேரன் அவர் துயில் எழும் வரை அவருக்குக் கவரி வீசினான். சேரனின் இப்பெருமையைப் புலவர் புறநானூற்று 50 ஆவது பாடலில் பாடுகிறார். அது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

… எண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய என்னைத் தெறுவர
இருபாற் படுக்கும்நின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும் நல்தமிழ் முழுது அறிதல்
அதனோடும் அமையாது அணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோள் ஒச்சி தண்ணென
வீசியோயே… என்று பாராட்டுகிறார். நான்



10811A_rev2.indd 75 12/5/2018 3:48:36 PM

தமிழ்ப் புலவன் என்பதாலும் நீ தமிழ் அறிந்தவன் என்பதாலும் என்னைத் தண்டிக்காது நீ பணிவிடை செய்தாய். இதை என்னென்பேன் என்று பலபடப் பாராட்டுகிறார்.

**குறிப்பு**

இதைப் புதுக்கவிஞர் ஞானக் கூத்தன் இருபதாம் நூற்றாண்டுப் பார்வையில் பார்க்கிறார். அரசு அலுவலங்களில் இன்று தூங்குகிற மனிதர்களுக்கு அன்றே வழிகாட்டியவர் மோசிகீரனார் என்று பாடுகிறார். அதனால் அன்பு தோன்றிற்று என்றும் எடுத்துரைக்கிறார்.

பொருள் ஒன்று ஆனாலும் அதைப் பார்க்கின்ற விதங்கள் பல என்பதற்கு ஞானக் கூத்தன் பாடல் ஒரு சான்றாகும்.

## வினா-விடைகள்

1. கவிஞர் சிற்பியைப் பற்றி சிறு குறிப்பு வரைக.

   கவிஞர் சிற்பி பால சுப்பிரமணியம் 1936-இல் பிறந்தவர். 1936-இல் இவரது முதல் கவிதைத் தொகுப்பாகிய நிலவுப்பூ வெளிவந்தது. அடுத்து, அடுத்து ஏழு கவிதைத் தொகுதிகள் வெளி வந்தன. ஆதிரை இவரது கவிதை நாடகம் இலக்கியச் சிந்தனை, அலையும் சுவடும், மலையாளக் கவிதை ஆகியன இவரது உரைநடை நூல்கள் ஆகும்.

2. “சர்ப்பயாகம்” கவிதையின் விளக்கம் யாது?

   சர்ப்ப யாகம் ஒரு குறியீட்டுக் கவிதையாகும். கவிஞர் சிற்பி வாழ்வில் வெற்றி பெற விரும்பும் மக்களைச் சித்தரிக்கிறார். அவர்களின் முயற்சிகளைத் தடுக்கும் பின்னடையச் செய்யும் தடைகளைப் பாம்புகளைத் (தீயவர்களைப்) படைக்கிறார். இவற்றின் பிடியிலிருந்து நழுவி மேலே செல்ல முயலும் மக்களின் முயற்சியினைக் காட்டுகிறார். ஆனாலும் அவர்களால் முடிவதில்லை. திரும்பத் திரும்ப பழைய இடத்திற்கே வருகிறார்கள். அவர்களுக்க உதவச் சில ஏணிகளாக (சில நல்ல மனிதர்கள்) இருக்கிறார்கள். ஆனாலும் தீமை இருப்பதால் மக்களால் மீள முடியவில்லை.

3. ஞானக்கூத்தன் மோசிக்கீரனாரை எவ்வாறு சிறப்பிக்கிறார்?

   சங்ககாலப் புலவர்களில் ஒருவர் மோசிகீரனார். அவர் ஒருமுறை சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையின் முரசு கட்டிலில் துயின்றார். அதைப் பார்த்த சேரன் அவர் துயில் எழும் வரை அவருக்குக் கவரி வீசினான். சேரனின் இப்பெருமையைப் புலவர் இவ்வாறு கூறுகிறார். தமிழ் புலவன் என்பதாலும் நீ தமிழ் அறிந்தவன் என்பதாலும் என்னைத்



10811A_rev2.indd 76 12/5/2018 3:48:36 PM

குறிப்பு

தண்டிக்காது நீ பணிவிடை செய்தாய். இதை என்னென்பேன் என்று பலபடப் பாராட்டுகிறார். இதை புதுக்கவிஞர் ஞானக்கூத்தன் இருபதாம் நூற்றாண்டுப் பார்வையில் பார்க்கிறார். அரசு அலவலகங்களில் இன்று தூங்குகிற மனிதர்களுக்கு அன்றே வழிகாட்டியவர் மோசிகீரனார் என்று பாடுகிறார். அதனால் அன்பு தோன்றிற்று என்றும் எடுத்துரைக்கிறார்.

4. 1970களில் எந்த இதழ்கள் வாயிலாகப் புதுக் கவிதைகள் வளர்ந்தன?

   1970ஆம் ஆண்டுகளில் எழுத்து என்னும் பத்திரிக்கை, அதைத் தொடர்ந்து நடை, குருச்சேத்திரம், கணையாழி, கசடதபற போன்ற இதழ்கள் வாயிலாகப் புதுக் கவிதைகள் வளர்ந்தன.

# கூறு 8

## அப்துல் ரகுமான்

குறிப்பு

இக்காலத் தமிழ்க் கவிஞர்களுள் சிறந்த புதுக்கவிஞர் அப்துல் ரகுமான். புதுமையும், இனிமையும், செழுமையும் இயல்பாய் அமைந்தவை இவரது கவிதைகள். இதனால் படிப்பவர் நெஞ்சங்களை எளிதில் கவர்கின்றன. கவிதை படிக்கும் ஆர்வத்தையும் படைக்கும் ஆற்றலையும் தூண்டுகின்றன. புகழ்பெற்ற வார, திங்கள் இதழ்களிலும், தொலைக்காட்சியிலும் இவரது கவிதைகள் வெளி வருகின்றன.

தமிழ்நாட்டில், மதுரையில் 9-11-1937-இல் பிறந்தார் அக்காலத்தில் தமிழ், உருது ஆகிய இருமொழிகளிலும் சிறந்த எழுத்தாளராக விளங்கிய ‘ மஹறுதி’ சையத் அஹ்மத் என்பார் இவருடைய தந்தையார் ஆவார். இதனால் இளவயதில் இருந்தே மொழிப் புலமையும் கவிதை எழுதும் ஆற்றலும் அப்துல் ரகுமானிடம் வளரத் தொடங்கின.

### கல்வியும் பணியும்

தமிழ்க் கல்விக்குச் சிறந்த கல்லூரி என்று புகழ் பெற்றிருந்த மதுரை தியாகராசர் கல்லூரியில் இளங்கலை, முதுகலைப் பட்டங்களைப் பெற்றார். சென்னை உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் புதுக்கவிதையில் குறியீடு என்னும் பொருள்பற்றி ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார். வாணியம்பாடியில் இசுலாமியாக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராக முப்பது ஆண்டுகள் பணியாற்றினார். கடந்த பதின்மூன்று ஆண்டுகளாகச் சென்னையில் இருந்து தம் படைப்புப் பணியைத் தீவிரத்துடன் செய்து வருகிறார்.

### கவிதை ஆர்வம்

அப்துல் ரகுமான் பள்ளிப் பருவத்திலேயே கவிதை புனைந்தவர். கல்லூரி நாட்களிலேயே புதுமையாக எழுதிப் புகழ் பெற்றவர். கல்லூரி இலக்கிய மன்றங்களும் வானொலி நிலையங்களும், அண்ணாவின் அரசியல் இயக்கமும் நிகழ்த்திய பல கவியரங்கங்களில் பங்கேற்றார். புதுமையாய்ப் பாடும் திறத்தால் தமிழகம் முழுதும் புகழ் பரவப் பெற்றார்.

### கவிராத்திரி

பேராசிரியராகப் பணியாற்றிய காலத்தில் புதுக்கவிதையை ஆயிரக் கணக்கானோர் கூடிக் சுவைக்க வழி செய்தார். கவிராத்திரி என்ற பெயரில்


10811A_rev2.indd 78 12/5/2018 3:48:36 PM

கவியரங்கத்தைப் புதுமைப் படுத்தினார். தம் மாணவர்களைப் புதுக்கவிதை எழுதவைத்து அவர்களின் கவிதைகளைத் தொகுத்து நூல்களாக வெளியிட்டார்.

குறிப்பு

### அன்னம் பதிப்பகம்

தம் வகுப்புத் தோழரும் கவிஞருமான மீராவுடனும் மற்ற நண்பர்களுடனும் சேர்ந்து, புதிய படைப்பாளிகளின் இலக்கிய நூல்களை வெளியிடுவதற்காகவே அன்னம் என்னும் பதிப்பகத்தை உருவாக்கினார்.

### தமிழ் உணர்வு

தமிழ்மொழியின் மீது பற்றும், சமுதாய நலனில் அக்கறையும், நல்லொழுக்கமும் நிறைந்தவர் அப்துல் ரகுமான்.

தம் அறுபதாவது வயது நிறைவைக் கொண்டாட மாணவர்களும் நண்பர்களும் திரட்டித் தந்த நிதியைக் கொண்டு தம் பெயரில் ஒரு கவிதை அறக்கட்டளை நிறுவினார். ஆண்டு தோறும் தமிழில் சிறந்த கவிதை நூல் படைக்கும் கவிஞருக்கு ரூபாய் முப்பதாயிரம் பரிசளித்துப் பாராட்டி வருகிறார்.

### சிறப்பும்விருதும்

கவிக்கோ என்னும் அடைமொழியால் தமிழகத்திலும், தமிழறிந்த அயலகங்களிலும் அறியப்படும் அப்துல் ரகுமான், 1999-ஆம் ஆண்டுக்கான தமிழ்க் கவிதைக்குரிய சாகித்திய அக்காதெமி வருது பெற்றவர். 1989-இல் தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்கிய தமிழன்னை விருது, தமிழக அரசு வழங்கிய பாவேந்தர் பாரதிதாசன் விருது, கலைமாமணி விருது ஆகியவற்றைப் பெற்றார். 1997-ஆம் ஆண்டு கலைஞர் விருது பெற்றார். இவையல்லாத பல்வேறு விருதுகளும் சிறப்புகளும் பெற்றிருக்கிறார்.

## கண்ணும் எழுதேம்

கண்ணில் ஏன்
மை தீட்ட வில்லை
என்கிறாயா தோழி
சொல்கிறேன்

கண்ணுக்குள் என்
காதலர்
அவர் முகத்தில்
கரி பூசலாமா



10811A_rev2.indd 79 12/5/2018 3:48:37 PM

குறிப்பு

என் சூரியன் மீது
இருட்டைத் தடவுவதோ

வீட்டிற்குள்ளே அவர்
வாசலில் எதற்கு
வரவேற்புக் கோலம்

அவனையே தீட்டி
அழகு பெற்ற கண்ணுக்கு
மையலங்காரம்
வேண்டுமா

கண்ணைவிட மென்மையானவர்
காதலர்
கோல் பட்டால் வலிக்காதா
அவரை வைத்த இடத்தில்
வேறொன்றை வைப்பது
கற்புக்கு இழுக்கல்லவா

## விளக்கவுரை

அப்துல் ரகுமானின் நேயர் விருப்பம் என்ற கவிதை நூலிலிருந்து புதுக் கவிதைகள் இயற்றும் கவிஞர் கூட்டத்தில் நிலையான ஓர் இடத்தைப் பெற்றவர் அப்துல் ரகுமான் ஆவார். அவருடைய கவிதை இது.

திருவள்ளுவர் குறளில் கூறிய ஒரு தொடரைத் தலைப்பாகக் கொண்டது இக் கவிதை.

கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும் எழுதேம் கரப்பாக் கறிந்து
– குறள் 1127.

தலைவி கண்ணில் மை தீட்டாமைக்குக் காரணம் கூறுகிறாள். மை தீட்டும் போது கண்ணை இமை மூடிக் கொள்கிறது. அந்தச் சிறு பொழுதில் கண்ணில் உள்ள காதலர் மறைகிறாரே அதை எப்படிப் பொறுத்துக் கொள்ள முடியும் அதனால் கண்ணும் எழுதேம் என்கிறாள்.

இந்தக் குறளை அடியொற்றிக் கவிஞர் அப்துல் ரகுமான் தன்னுடைய கற்பனைச் சிறகுகளை விரிக்கிறார். அவர் காணும் முறையைப் பாருங்கள்.

தலைவி-தோழியின் உரையாடலாகக் கவிதை தோன்றுகிறது. தோழி தலைவியே கண்ணில் ஏன் மை தீட்டவில்லை தலைவியின் பதில்கள் பலவகைப்படுகின்றன.



10811A_rev2.indd 80 12/5/2018 3:48:37 PM

குறிப்பு

1. என் காதலர் கண்ணுக்குள் இருக்கிறார். அவர் முகத்தில் கரி (மை) பூசலாமா
2. என் காதலர் சூரியன் போன்று ஒளி படைத்தவர். அவர் மீது இருளை தடவுவதா
3. என் வீட்டிற்குள் (கண்ணுக்குள்) அவர் இருக்கிறார். வாசலில் (இமையில்) எதற்கு வரவேற்புக் கோலம்
4. என் காதலரையே தாங்கித் தாங்கி அதனால் அழகு பெற்ற கண்ணுக்குப் பின்னும் ஓர் அலங்காரம் தேவையா
5. கண்ணினும் மெல்லியர் என் காதலர். அவர் மீது மை எழுதும் கோல் பட்டால் அவருக்கு வலிக்காதா
6. இது கவிஞனின் உச்ச கட்டமான பதில் அவர் இருக்கிற இடத்தில் வேறொன்றை வைப்பது கற்புக்கு இழுக்கு ஆகாதா

பழைய கவிஞனின் கருத்துக்குப் புதுக் கவிஞர் அப்துல் ரகுமான் மெருகு ஊட்டுகிறார். தலைவியின் மென்மையான உணர்வுகளைக் கவிஞர்கள் எவ்வாறு எல்லாம் வெளிப்படுத்துகின்றனர் என்பதை எண்ணிப்பாருங்கள். அதனாலன்றோ வள்ளுவப் பெருந்தகை மலரினும் மெல்லிது காமம் என்றார்.

## ஷண்முக சுப்பையா
## வயிறு

தலையைச் சொறி
நாக்கைக் கடி
பல்லை இளி
முதுகை வளை
கையைக் கட்டு
காலைச் சேர்
என்ன இது
வயிற்றைக் கேள்
சொல்லு மது

### விளக்கவுரை

ஷண்முக சுப்பையா கவிதைகள் என்ற நூலில் இருந்து பாடமாக வந்துள்ளது.

சங்கப் புலவர்கள் வறுமையை – வறியவர்களைப் பலவாறு சித்தரித்துள்ளார்கள். எல்லா நாட்டிலும் வறுமை இருக்கிறது. எல்லாக்



10811A_rev2.indd 81 12/5/2018 3:48:37 PM

காலங்களிலும் வறுமை இருக்கிறது. இந்த ஏழ்மையை-பிணியை-மூப்பைச் சித்தார்த்தன் பார்த்தான். காரணம் அறிந்து புத்தன் ஆனான்.

**குறிப்பு**

அந்த வறுமையை வயிறு என்ற தலைப்பில் புதுக் கவிஞர் ஷண்முக சுப்பையா சிந்தித்துப் பார்க்கிறார். மனிதன் தலையைச் சொறிகிறான், நாக்கைக் கடிக்கிறான், பல்லை இளிக்கிறான், முதுகை வளைக்கிறான் கையைக் கட்டுகிறான், காலைச் சேர்த்து வைத்துக் கொள்கிறான் எல்லாம் எதற்காக ஏன் இப்படி மனிதன் அல்லல் உறுகிறான். கவிஞர் வயிற்றைக் கேட்கச் சொல்லுகிறார். பதிலை வயிறு சொல்லும் என்கிறார். அது என்ன பதில் பசி தான். வயிற்றுப் பசிதான் மனிதனை இந்தக் கோலத்திற்கு ஆள் ஆளாக்குகிறது. பசிக்கப் புசிக்க இருக்குமானால் அவன் உலகத்தையே வெல்லுவான். இதைத்தான் மகாகவி பாரதியார் தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் இந்த ஜகத்தினையே அழிப்போம் என்கிறார்.

அத்தனை உறுப்புகளுக்கும் வயிறு ஜீவனாக விளங்குவதைக் கவிஞர் ஷண்முக சுப்பையா நமக்கு உணர்த்துகிறார்.

**வினா-விடைகள்:**

1. தலைவி கண்ணில் மை தீட்டாமைக்க என்ன காரணம் கூறுகிறாள்?

   மை தீட்டும் போது கண்ணை இமை மூடிக்கொள்கிறது. அந்தச் சிறு பொழுதில் கண்ணில் உள்ள காதலர் மறைகிறாரே, அதை எப்படிப் பொறுத்துக் கொள்ளமுடியும். அதனால் மை தீட்டவில்லை என்கிறாள்.

2. வயிறு ஜீவனாக விளங்குவதைக் கவிஞர் ஷண்முக சுப்பையா எவ்வாறு விளக்குகிறார்?

   மனிதன் பசியினால் தலையைச் சொறிகிறான், நாக்கைக் கடிக்கிறான், பல்லை இளிக்கிறான், முதுகை வளைக்கிறான், கையைக் கட்டுகிறான், காலைச் சேர்த்து வைத்துக் கொள்கிறான். வயிற்றுப் பசிதான் மனிதனை இந்தக் கோலத்திற்கு ஆளாக்குகிறது. பசிக்கப் புசிக்க இருக்குமானால் அவன் உலகத்தையே வெல்லுவான். அத்தனை உறுப்புகளுக்கும் வயிறு ஜீவனாக விளங்குவதைக் கவிஞர் ஷண்முக சுப்பையா நமக்கு உணர்த்துகிறான்.



10811A_rev2.indd 82 12/5/2018 3:48:37 PM

# கூறு 9

# சிலப்பதிகாரம்
# வழக்குரை காதை

குறிப்பு

ஆங்குக்
குடையொடு கோல்வீழ நின்று நடுங்கும்
கடைமணி இன்குரல் காண்பென்காண் எல்லா
திசையிரு நான்கும் அதிர்ந்திடும் அன்றிக்
கதிரை இருள்விழுங்கக் காண்பென்காண் எல்ல
விடுங்கொடி வில்லிர வெம்பகல் வீழும்
கடுங்கதிர் மீனிவை காண்பென்காண் எல்லா
கருப்பம்

செங்கோலும் வெண்குடையும்
செறிநிலத்து மறிந்து வீழ்தரும்
நங்கோன்றன் கொற்றவாயில்
மணிநடுங்க நடுங்கு முள்ளம்
இரவு வில்லிடும் பகல்மீன் விழும்
இருநான்கு திசையும் அதிர்ந்திடும்
வருவதோர் துன்பமுண்டு
மன்னவர்க்கியாம் உரைத்துமென
ஆடியேந்தினர் கலனேந்தினர்
அவிர்ந்து விளங்கும் அணியிழையினர்
கோடி யேந்தினர் பட்டேந்தினர்
கொழுந்திரை யலின்செப் பேந்தினர்
வண்ண மேந்தினர் கண்ணமேந்தினர்
மான்மதத்தின் சாந்தேந்தினர்
கண்ணியெந்தினர் பிணையலேந்தினர்
கவரியேந்தினர் தூபமேந்தினர்
கூனுங் குறளும் ஊமுங் கூடிய
குறுந் தொழிலிளைஞர் செறிந்து சூழ்தர
நரை விரைஇய நறுங்கூந்தலர்
உரைவிரைஇய பலர் வாழ்த்திட
ஈண்டுநீர் வையங் காக்கும்
பாண்டியன் பெருந் தேவி வாழ்கென



10811A_rev2.indd 83 12/5/2018 3:48:37 PM

**குறிப்பு**

ஆயமுங் காவலும் சென் நடியீடு பரசி யேத்தக்
கோப்பெருந் தேவிசென்றுதன் தீக்கனாத் திறமுரைப்ப
அரிமா னேந்திய அமளிமிசை இருந்தனன்
திருவீழ் மார்பின் தென்னவர்கோவே இப்பால்
வாயி லோயே வாயி லோயே
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளென்று
அறிவிப் பாயே அறிவிப் பாயேஇ என
வாயிலோன், வாழியெங் கொற்கை வேந்தே வாழி
தென்னம் பொருப்பின் தலைவ வாழி
செளிய வாழி தென்னவ வாழி
பழியொடு படராப் பஞ்சவ வாழி
அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள்
அறுவர்க் கிளைய நங்கை இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு சூருடைக்
கானகம் உகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணு மல்லள்
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளே
கணவனை இழந்தாள் கடையகத் தாளே, என
வருக மற்றவள் தருக ஈங்கென
வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி
நீர் வார் கண்ணை எம்முன் வந்தோய்
யாரை யோநீ மடக்கொடி யோய்எனத்
தேரா மன்னா செப்புவ துடையேன்
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்



10811A_rev2.indd 84 12/5/2018 3:48:37 PM

குறிப்பு

அரும் பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்கு
என்காற் சிலம்பு-பகர்தல் வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரேயெனப் பெண்ணணங்கே
கள்வனைக் கோறல் கடுங்கோ லன்று
வெள்வேற் கொற்றங் காண்என ஒள்ளிழை
நற்றிறம் படராக் கொற்கை வேந்தே
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே, எனத்
தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே
தருகெனத் தந்து தான்முன் வைப்பக்
கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே, மணிகண்டு
தாழ்ந்த குடையன் தளர்ந்த-செங் கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென
மன்னவன் மயங்கி வீழ்ந் தனனே தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்லென்று
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

### வெண்பா

1. அல்லவை செய்தார்க் கறங்கூற்ற மாமென்னும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே-பொல்லா
வடுவினையே செய்த வயவேந்தன் தேவி
கடுவினையேன் செய்வதூஉங் காண்



10811A_rev2.indd 85 12/5/2018 3:48:37 PM

**குறிப்பு**

2. காவி யுகுநீருங் கையில் தனிச்சிலம்பும்
ஆவி குடிபோன அவ்வடிவும்-பாவியேன்
காடெல்லாம் சூழ்ந்த கருங்குழலும் கண்டஞ்சிக்
கூடலான் கூடாயி னான்.

3. மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்-வையைக்கோன்
கண்டளவே தோற்றான்அக் காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.

# சிலப்பதிகாரம்
# வழக்குரை காதை
# விளக்கம்

பழந்தமிழில் நூல்கள் செய்யுள் வடிவில் எழுதப்பட்டன. தொடர்நிலைச் செய்யுள் வடிவில் செய்யப்பட்டது காப்பியம் எனப்பட்டது. தமிழ் மொழியில் ஐந்து பெருங்காப்பியங்களும் ஐந்து சிறு காப்பியங்களும் உள்ளன. இவை தவிர வேறு சில காப்பியங்களும் உள்ளன.

ஐம்பெருங் காப்பியங்களுள் முதல் பெருங்காப்பியமாகப் போற்றப்படுவது சிலப்பதிகாரம் ஆகும். அதில் ஒரு சிறுபகுதி வழக்குரை காதை என்பது. இந்தப் பகுதி மூலம் காப்பியத் தலைவி கண்ணகி, தன் கணவன் கோவலன் கள்வன் அல்லன் என நிறுவியதையும் அதன்வழி முப்பெரும் உண்மைகளுள் இரண்டு உணர்த்தப்படுவதையும் காணலாம்.

### *சிலப்பதிகாரம்*

தமிழ் மொழியில் தோன்றிய முதல் பெருங்காப்பியம் சிலப்பதிகாரம். இந்நூலின் ஆசிரியர் இளங்கோ அடிகள் ஆவார். இது சமண சமயக் காப்பியம். இந்தக் காப்பியம் சங்க காலத்திற்கும் தேவாரக் காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்தது.

காவிரிப் பூம்பட்டினத்தில் வணிகர் குலத்தில் பிறந்து, குலவொழுக்கப்படி திருமணம் செய்து, இல்லறம் நடத்திய கோவலன் கண்ணகி வாழ்க்கை வரலாற்றை விளக்குவது இந்நூல். இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையை மூன்று காண்டங்களில் முப்பது காதைகளில் விரிவாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.



10811A_rev2.indd 86 12/5/2018 3:48:37 PM

குறிப்பு

## காப்பிய அமைப்பு

சிலப்பதிகாரக் காப்பிய நிகழ்ச்சிகள் முறையே சோழ, பாண்டிய, சேர நாடு என்னும் மூன்று நாடுகளில் மூவேந்தரின் தலைநகரங்களிலும் நடந்த நிகழ்ச்சிகளாம். எனவே இக்காப்பியம் புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம் என்று மூன்று காண்டங்களாக வகுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்த மூன்று காண்டங்களில் முப்பது காதைகள் அமைந்துள்ளன. (காண்டம் = பெரும் பிரிவு; காதை = சிறு பிரிவு)

## பெயர்க்காரணம்

இந்தக் காப்பியத்தின் கதை சிலம்பினைக் காரணமாகக் கொண்டு அமைந்ததால் சிலப்பதிகாரம் எனப் பெயரிடப்பட்டது.

## காப்பிய நோக்கம்

காப்பியத்தில் அறம், பொருள், இன்பம் மூன்றும் இடம் பெறுகின்றன. கோவலனும் கண்ணகியும் வானவர் உலகு (வீடு) செல்வதும் காட்டப்படுகிறது. எனினும் காப்பியத்தில் இளங்கோவடிகளின் நோக்கம் அறமே எனலாம். தம்மை அறவுணர்வு உந்த, தாமும் மக்களிடம் அறவுணர்வை விழிப்புறச் செய்ய இளங்கோவடிகள் பாடியது சிலப்பதிகாரம்.

## காப்பியச் சிறப்பு

சிலப்பதிகாரம் தோன்றுவதற்கு முன்னிருந்த தமிழிலக்கியம் அகத்திணை, புறத்திணைப் பாடல்களே. அவை தனிமனித உணர்ச்சிகளைப் பொதுமையில் நின்று உணர்த்தின. ஆனால் ஒருவரது வாழ்க்கையை முழுமையாகப் பார்த்து, உயர்ந்த உண்மைகளைக் காட்டி, மனித சமதாயத்தை வழி நடத்திச் செல்லும் முதல் இலக்கிய முயற்சியாக, பெருங்காப்பியமாக, அமைந்தது சிலப்பதிகாரம் ஆகும்.

## காப்பியத் தலைவி

காப்பிய இலக்கணப்படி பெருங்காப்பியம் தன்னேரில்லாத தலைவனைக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் சிலம்பில் கண்ணகி தன் நிகரில்லாத தலைவியாகப் போற்றப்படுகின்றாள்.

## முத்தமிழ்க் காப்பியம்

இளங்கோ அடிகள் இக்காப்பியத்தில் இயல், இசை, நாடகம் என்ற மூன்று தமிழையும் பயன்படுத்தியுள்ளார். அதனால் சிலப்பதிகாரம் முத்தமிழ்க் காப்பியம் எனப் போற்றப்படுகிறது.



10811A_rev2.indd 87 12/5/2018 3:48:37 PM

குறிப்பு

## மூன்று நீதிகள் அல்லது உண்மைகள்

சிலப்பதிகாரம் இவ்வுலக மக்கள் அறிந்து பயன்பெறும் வகையில் மூன்று உண்மைகளைக் கருப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது. அந்த மூன்று உண்மைகள் எவை என அறிந்து கொள்வோமா? அவையாவன:

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவது;
உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவது;
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பது

(பிழைத்தல் = தவறு செய்தல்; கூற்று = எமன்; உரைசால் = புகழ்மிகுந்த; உருத்து = சினந்து)

இவை சிலப்பதிகார நூல் முழுமையும் விரவி வந்துள்ளதைக் காணலாம்.

## காப்பியப் பெருமை

சிலப்பதிகாரக் காலத்தில் வழக்கிலிருந்த தமிழர்தம் பண்பாடு, சமய நெறிகள், பழக்க வழக்கங்கள், கலைகள் அகியவற்றை அறிந்து கொள்ள இக்காப்பியம் பெரிதும் துணைநிற்கும். சிலப்பதிகாரக் காப்பியத்தின் பெருமையைக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் “நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம்” எனப் பாராட்டியுள்ளார்.

## வழக்குரை காதை

சிலப்பதிகாரத்தின் இரண்டாம் காண்டமான மதுரைக் காண்டத்தில் பத்தாவது காதையாக வழக்குரை காதை இடம் பெற்றுள்ளது. ஆசிரியப் பாவினால் அமைந்த இக்காதையில் சில வெண்பாக்களும் இடம் பெற்றிருக்கின்றன.

## கதைச் சுருக்கம்

கோவலன் தன் மனைவி கண்ணகியுடன் பொருள் தேட மதுரை செல்கிறான். மதுரையில் மாதரி என்ற ஆயர்குலப் பெண்ணிடம் கண்ணகியை அடைக்கலமாக இருக்கச் செய்து, கண்ணகி தந்த காற்சிலம்பை விற்று வரக் கருதி மதுரை நகரக் கடைத்தெருவிற்குச் செல்கிறான். அங்கு அரண்மனைச் சிலம்பைத் திருடிய பொற்கொல்லன் ஒருவனது சூழ்ச்சிக்கு ஆளாகிறான். அதன் விளைவு கோவலன் திருடன் எனக் கருதப்பட்டு அரசன் ஆணையால் கொலை செய்யப்படுகிறான். கோவலன் கொலையுண்ட செய்தி கேட்ட கண்ணகி சினந்து எழுந்து பாண்டியன் அரசவைக்குச் சென்று வழக்குரைத்துக் கோவலன் கள்வன் அல்லன் என்பதைத் தெளிவுபடுத்துகின்றாள். உண்மை உணர்ந்த பாண்டியன் அக்கணமே தன்னுயிர் நீத்து நீதியை நிலை நிறுத்துகிறான்.



10811A_rev2.indd 88 12/5/2018 3:48:37 PM

### கதை அமைப்பு

அரசநீதி பற்றி எழுந்த இந்த வழக்குரை காதை நாடகப் பாங்கில் அமைந்துள்ளது.

குறிப்பு

### கதை மாந்தர்

வழக்குரை காதைக் கதை நிகழ்ச்சியில் கோப்பெருந்தேவி, பாண்டிய மன்னன், வாயில் காவலன், கண்ணகி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

### வழக்குரை காதைநிகழ்ச்சிகள்

கண்ணகி உணர்ச்சி பொங்க வழக்குரைத்து வெல்வதும், தோற்ற பாண்டிய மன்னன் உயிர் நீப்பதும் இக்காதை நிகழ்ச்சிகள் ஆகும்.

### கோப்பெருந்தேவியின் கனவு

அரண்மனையில் பாண்டிய அரசி கோப்பெருந்தேவி தான் கண்ட தீய கனவினால் உள்ளங் கலங்கித் தன் தோழியிடம் கூறியது:

"தோழீ! கேள். நம் மன்னரது வெண்கொற்றக் குடை செங்கோலுடன் கீழே விழுந்தது. அரண்மனை வாயிலில் கட்டப்பட்ட ஆராய்ச்சி மணியின் ஓசை இடைவிடாது ஒலித்தது. எல்லாத் திசைகளும் அப்போது அதிர்ந்தன. அப்பொழுது சூரியனை இருள் சூழக் கண்டேன். இரவ நேரத்தில் வானவில் தோன்றக் கண்டேன். பகல் பொழுதில் விண்மீன்கள் மிக்க ஒளியோடு பூமியில் விழக் கண்டேன். இதெல்லாம் என்ன? அதனால் நமக்க வரக்கூடிய துன்பம் ஒன்றுண்டு. அதனை நம்மன்னவர்க்குச் சென்று கூறுவேன்."

இவ்வாறு கூறிய தேவி மன்னன் இருக்கும் அரசவை நோக்கிச் சென்றாள்.

(பின்னால் நிகழப் போகும் நிகழ்ச்சியைக் குறிப்பாக முன்னரே உணர்த்துவது நாடக உத்தியாகும். இங்குத் தேவி கண்ட கனவின் மூலம் பாண்டிய மன்னன் வீழ்ச்சி அடையப் போவது குறிப்பாக உணர்த்தப்பட்டது)

இப்பகுதியை ஆசிரியர் கீழ்வருமாறு பாடுகிறார்:

ஆங்குக்
குடையொடு கோல்வீழ நின்று நடுங்கும்
கடைமணி இன்குரல் காண்பென்காண் எல்லா
திசையிரு நான்கும் அதிர்ந்திடும் அன்றிக்
கதிரை இருள்விழுங்கக் காண்பென்காண் எல்ல
விடுங்கொடி வில்லிர வெம்பகல் வீழும்

கடுங்கதிர் மீனிவை காண்பென்காண் எல்லா
கருப்பம்

(வழக்குரை காதை: 1-8)

**குறிப்பு**

(எல்லா = தோழி; கடைமணி = முறைவேண்டி வருவோர் ஒலிக்கும் பொருட்டு அரண்மனை வாயிலில் கட்டப்படுவதோர் பெரியமணி; கதிர் = சூரியன்; கருப்பம் = அறிகுறி)

## கோப்பெருந்தேவியின் வருகை

அரசி மன்னனை நாடிச் சென்ற போது தோழியரும் உடன் வந்தனர். கண்ணாடி ஏந்தி வந்தனர் சிலர்; ஆடை, அணிகலன், ஏந்தினர் சிலர்; மணப்பொருள் ஏந்தி வந்தனர் சிலர்; மாலை, கவரி அகிற்புகை முதலியன ஏந்தி வந்தனர் சிலர்; கூனராயும்,குறளராயும், ஊமையராயும் உள்ள பணி செய்யும் இளைஞரோடு, குற்றேவல் செய்யும் மகளிர் அரசியைச் சூழ்ந்து வந்தனர்; முதுமகளிர் பலரும் ‘பாண்டியன் பெருந்தேவி வாழ்க!’ என உள்ளன்போடு வாழ்த்தினர்.

(கூனர், குள்ளர், ஊமையர் முதலிய குறைபாடு உடையோர் அரண்மனையில் பணிபுரிவது அக்காலத்து வழக்கமாகும்.)

இவ்வாறு தன் பரிவாரத்துடன் தேவியானவள் சென்று, தன் தீய கனவில் கண்டவற்றை எல்லாம பாண்டிய மன்னனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். சிங்கம் சுமந்த அரசு கட்டிலின் மேல் வீற்றிருந்து, தென்னவர் கோமானாகிய பாண்டியன் தேவி கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

## கண்ணகிவருகை

அவ்வேளையிலே கண்ணகி அரண்மனை வாயிலை அடைந்தாள்; அங்கிருந்த காவலனை நோக்கி,“வாயில் காவலனே! வாயில் காவலனே! நல்ல அறிவு அற்றுப் போன, தீய நெஞ்சத்தால் செங்கோல் முறையினின்றும் தவறிய கொடுங்கோல் மன்னனுடைய வாயில் காவலனே! பரல்களையுடைய இணைச் சிலம்புகளுள் ஒரு சிலம்பினை ஏந்திய கையை உடையவளாய், தன் கணவனை இழந்தாள் ஒருத்தி அரண்மனை வாயிலில் உள்ளாள் என்பதை உன் மன்னனிடம் சென்று அறிவிப்பாய்” என்று கூறினாள்.

வாயிலோயே வாயிலோயே
அறிவு அறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயிலோயே
இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத்தாள் என்று

அறிவிப்பாயே அறிவிப்பாயே

(வழக்குரை காதை: 24-29)

(அறிவு அறை போதல் = அறிவு சமயத்தில் உதவாமல் போதல்; இறைமுறை = செங்கோன்மை)

குறிப்பு

### வாயில் காவலன் மன்னனுக்கு அறிவித்தல்

வாயில் காவலன் கண்ணகியின் சினங்கொண்ட தோற்றம் கண்டு அஞ்சியவனாய் விரைந்து சென்று மன்னனை வணங்கி வாழ்த்தி நின்றான்.

"எம் கொற்கைப் பதியின் வேந்தனே வாழ்க! தென் திசையிலுள்ள பொதிகை மலைக்கு உரிமை உடையவனே வாழ்க! செழிய வாழ்க! தென்னவனே வாழ்க! பழி வருவதற்குக் காரணமான நெறியில் செல்லாத பஞ்சவனே வாழ்வாயாக!

குருதி பீறிடும் மகிடாசுரனுடைய பிடர்த்தலைப் பீடத்தின் மேல் நின்ற கொற்றவையோ என்றால் அவளும் அல்லள்; சப்த மாதர் ஏழு பேருள் இளையவளான பிடாரியோ என்றால் அவளும் அல்லள்; இறைவனை நடனமாடக் கண்டருளிய பத்திர காளியோ எனில் அவளும் அல்லள்; பாலை நிலக் கடவுளான காளியோ எனில் அவளும் அல்லள்; தாருகன் என்ற அசுரனின் அகன்ற மார்பைப் பிளந்த துர்க்கையும் அல்லள்; உள்ளத்திலே மிகவும் சினங்கொண்டவள் போல் தோன்றுகின்றாள்; அழகிய வேலைப்பாடமைந்த பொன் சிலம்பு ஒன்றினைக் கையிலே பிடித்துள்ளாள்; கணவனை இழந்தவளாம்; நம் அரண்மனை வாயிலில் உள்ளாள்," என்றான்.

வாழிஎம் கொற்கை வேந்தே வாழி
தென்னம் பொருப்பின் தலைவ வாழி
செழிய வாழி தென்னவ வாழி
பழியொடு படராப் பஞ்சவ வாழி
அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்
அறுவர்க் கிளைய நங்கை இறைவனை
ஆடல்கண்டு அருளிய அணங்கு சூருடைக்
கானகம் உகந்த காளி தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணும் அல்லள்
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழிற் சிலம்பொன்று ஏந்திய கையள்



10811A_rev2.indd 91 12/5/2018 3:48:38 PM

கணவனை இழந்தாள் கடையகத் தாளே

(வழக்குரை காதை: 30-44)

குறிப்பு

(கொற்கை = சிறந்த முத்துகள் கிடைக்கும் கடற்கரைப் பட்டினம். செழியன், தென்னவன், பஞ்சவன் என்பன பாண்டிய அரசர்க்குரிய பெயர்கள்.

பழியொடு படராப் பஞ்சவ என்றது அன்று வரையிலும் அரசியல் நீதி தவறாது அரசாண்டவன் என்பதை உணர்த்தும்.

பசுந்துணி = வெட்டப்பட்ட துண்டம்; பிடர்த்தலை = பிடரியோடு கூடிய மகிடாசுரன் தலை; இறைவன் = சிவபெருமான்; அணங்கு = பத்திரகாளி; கானகம் உகந்தகாளி = பாலைநிலத் தெய்வம்; செற்றனள் = உட்பகை கொண்டவள்; செயிர்த்தல் = சினத்தல்)

இப்பகுதி கண்ணகி சினத்தாலும் உருவத்தாலும் மக்கள் தன்மையில் இருந்து வேறுபட்டு, கொற்றவை முதலிய தெய்வ மகளிரே போல் காணப்பட்டாள் என்பதை உணர்த்துகிறது.

### அரசன் வினாவும்கண்ணகி விடையும்

தனது ஆணைப்படி, தன்முன் வந்து நின்ற கண்ணகியை நோக்கி அரசன் "நீர் ஒழுகும் கண்களுடன் எம்முன் வந்திருப்பவளே! இளையவளே! நீ யார்?" எனக் கேட்டான்.

"உண்மை தெளியா மன்னனே! சொல்லுகிறேன் கேள். தேவர்களும் வியக்கும்படி ஒரு புறாவினது துன்பத்தை நீக்கிய சிபி என்னும் செங்கோல் மன்னனும்; தனது அரண்மனை வாயிலில் கட்டப்பட்ட ஆராய்ச்சி மணியை இடைவிடாது அசைத்து ஒலித்த ஒரு பசுவின் துயரைப் போக்க எண்ணி, அப்பசுவின் துன்பத்திற்குக் காரணமாக தனது அரும்பெறல் மகனைத் தானே தனது தேர்ச் சக்கரத்திலிட்டுக் கொன்றவனான செங்கொல் வேந்தன் மநுநீதிச் சோழனும் அருளாட்சி செய்த பெரும் புகழை உடைய புகார் நகரம் என்னுடைய ஊராகும்.

புகார் நகரில் மிக்க புகழுடன் விளங்கும் பெருங்குடி வணிகனான மாசாத்துவான் என்னும் வணிகனது மகனாய்ப் பிறந்து, வாணிகம் செய்து வாழ்தலை விரும்பி, ஊழ்வினை காரணமாக உனது பெரிய நகரமாகிய மதுரையிலே புகுந்து, இங்கு அத்தொழிலுக்கு முதலாக என்னுடைய காற்சிலம்புகளுள் ஒன்றினை விற்பதற்கு வந்து, உன்னால் கொலைக்களப்பட்ட கோவலன் என்பான் மனைவி ஆவேன். என்னுடைய பெயர் கண்ணகி" என்றாள்.

தேரா மன்னா செப்புவது உடையேன்

எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும் பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்கு
என்கால் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி

(வழக்குரை காதை: 50-63)

**குறிப்பு**

(தேரா மன்னா = ஆராய்ச்சி இல்லாத அரசனே; புள் = பறவை. இங்குப் புறாவைக் குறிக்கும்; புன்கண் = துன்பம்; ஏசாச் சிறப்பு = பழி கூறப்படாத பழஞ்சிறப்பு)

இப்பகுதியில் அரசன் மீண்டும் தன்னை வினவுவதற்கு இடமின்றிக் கூறவேண்டிய அனைத்தையும் குறைபடாது கூறிக் கண்ணகி வழக்குரைக்கின்ற திறம் போற்றுதற்குரியது.

### மன்னன் கூற்று

“பெண் அணங்கே! கள்வனைக் கொல்வது செங்கோல் முறைமைக்கு ஏற்றது ஆகும். முறை தவறாத அரச நீதியே ஆகும்.” என்று மன்னன் விளக்கினான்.

### கண்ணகி காட்டும் சான்று

அது கேட்ட கண்ணகி,“நல்ல முறையில் ஆராய்ந்து பார்த்துச் செயல்படாத கொற்கை வேந்தனே! என்காற் பொற்சிலம்பு மாணிக்கக் கற்களை உள்ளிடு பரல்களாக உடையது” என்றாள்.

(சிலம்பு ஒலிக்க வேண்டும் என்பதற்காக அதன் உள்ளே சிறு கற்களை இடுவார்கள். அக்கற்களைப் ‘பரல்’ என்றும் ‘அரி’ என்றும் குறிப்பிடுவார்கள். சிலம்பினுள் மாணிக்கப் பரலிடுதல் அரியதொரு நிகழ்ச்சி ஆதலாலும், பாண்டியன் அரண்மனைச் சிலம்பில் முத்துகளே பரல்களாக இருக்கவேண்டும் என்னும் துணிவு பற்றியும் கண்ணகி ’என்காற் பொற்சிலம்ப மணியுடை அரியே’ என்றாள்.)



10811A_rev2.indd 93 12/5/2018 3:48:38 PM

குறிப்பு

## சான்றினை பாராட்டுதல்

அது கேட்ட மன்னன் உண்மையை அறிவதற்குத் தகுந்த சான்று கூறிய கண்ணகியைத் தன்னுள் பெரிதும் பாராட்டி,"நல்லது. நீ கூறியவை நல்ல சொற்கள். எமது சிலம்பு முத்துகளை உள்ளிடு பரல்களாக உடையது." என்றான்.

அக்காலத்தில் மன்னர்கள் நடுநிலை தவறாது முறையாக அரசாண்டனர். குடிமக்கள் தம்மை வந்து காண்பதற்கு எளியவராகவும், இனிமையாகப் பேசும் பண்பு உடையவராகவும் இருந்தனர். சான்றோர் கூறும் அறிவுரைகள் தம் காதுகளுக்குக் கசப்பாய் இருப்பினும் அவற்றைப் பொறுத்துக் கொள்ளும் பண்பு உடையவராகவும் இருந்தனர். இவ்வாறு முறை செய்து காப்பாற்றும் மன்னர்களை மக்கள் கடவுளாகப் போற்றினர்.

இப்பாடப் பகுதியில் பாண்டிய மன்னன் கண்ணகி கூறிய சான்றினைக் கொண்டு உண்மையை உணர்வதற்கு ஆர்வம் காட்டுதல் மன்னனது நடுநிலைமையை நமக்கு விளக்குகிறது. மேலும், பாண்டியன் கண்ணகி கூறிய கடுஞ்சொற்களால் சிறிதேனும் சினவாது அமைதியுடன் இருந்து, உண்மை அறிய விரும்பி விரைந்து செயல்பட்ட பண்பு அவன் சிறந்த பண்புடைய மன்னன் என்பதைக் காட்டுகிறது.

## கண்ணகி சிலம்பை உடைத்தல்

மன்னது ஆணைப்படி கோவலனிடமிருந்து பெற்ற காற்சிலம்பினை ஏவலர் கொண்டு வந்து தர, அச்சிலம்பினை வாங்கித் தானே அதனைக் கண்ணகியின் முன் பாண்டியன் வைத்தான். உடனே கண்ணகி விரைந்து அச்சிலம்பினைக் கையில் எடுத்து மன்னன் முன்னிலையில் உடைத்தாள். அச்சிலம்பு உடைந்து அதனுள் இருந்த மாணிக்கக் கற்கள் சிதறுண்டு அரசனுடைய முகத்திலும் பட்டுக் கீழே விழுந்தன.

கண்ணகி அணிமணிக் காற்சிலம்பு உடைப்ப
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே

(வழக்குரை காதை: 71-72)

## பாண்டியன் நிலைமை

பாண்டிய மன்னன் அவ்வாறு சிதறிய மாணிக்கப் பரல்களைக் கண்டவுடன் தனது வெண்கொற்றக் குடை ஒருபக்கம் விழவும், பிடிதளர்ந்து தனது செங்கோல் ஒருபக்கம் சாய்ந்து நிற்கவும்,"பொற்கொல்லனின் சொல்லைக் கேட்டு அதனை உண்மையென்று துணிந்த அறிவிலியாகிய யானும் ஓர் அரசன்

குறிப்பு

ஆவேனோ? இப்பொழுது யானே கோவலனின் சிலம்பைக் கவர்ந்த கள்வன் ஆகின்றேன். குடிமக்களைப் பேணிக் காத்து வருகின்ற இத்தென்னாட்டின் பாண்டியர் ஆட்சிச் சிறப்பு என்னால் பிழைபட்டு விட்டதே; ஆதலால் என் ஆயள் அழிவதாக" என்று கூறி மயங்கி அரசு கட்டிலினின்றும் வீழ்ந்தான்.

பொன்செய் கொல்லன் தன்சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகவென் ஆயள்என

(வழக்குரை காதை: 71-72)

இவ்வாறு அரசன் தன் தவற்றை உணர்ந்ததும், தன்னுயிர் நீத்து நீதியை நிலை நிறுத்தினான்.

### கோப்பெருந்தேவியின் நிலை

அரச மாதேவியின் உள்ளமும் உடலும் நடுங்கின. கணவனை இழந்த கற்புடைய மகளிர்க்கு அந்த இழப்பிற்கு ஈடாகக் காட்டுவதற்கு உலகில் யாதொன்றும் இல்லை. ஆதலால் தன் கணவனுடைய திருவடிகளைத் தொழுது வீழ்ந்தனள்; உயிர் துறந்தனள்.

### வெண்பா

இக் காதையின் இறுதியில் மூன்று வெண்பாக்கள் உள்ளன. முதல் வெண்பா கண்ணகி கூற்றாகவும், ஏனைய இரண்டும் நிகழ்ச்சியைக் கண்ட ஒருவர் கூற்றாகவும் அமைந்துள்ளன.

### கண்ணகி கூற்று

'தீவினைகளைச் செய்தவர்களை அறக்கடவுளே கூற்றாக நின்று தண்டிக்கும் என்று சான்றோர் கூறிய வாக்கு வாய்மையே ஆகும். பொல்லாத பழிச் செயலைச் செய்த வெற்றி வேந்தனின் தேவியே! தீவினைக்கு ஆளான நான் இனிச் செய்கின்ற செயலையும் காண்பாயாக' என்று, கண்ணகி தான் அடுத்துச் செய்யவிருந்த செயலைப் பற்றிக் குறிப்பிட்டாள்.

அல்லவை செய்தார்க்குஅறம்கூற்ற மாம்என்னும்
பல்லவையோர் சொல்லும் பழுதன்றே-பொல்லா
வடுவினையே செய்த வயவேந்தன் தேவி
கடுவினையேன் செய்வதூஉம் காண்

(வழக்குரை காதை: வெண்பா எண்: 1)

(அல்லவை = தீயவை; அவையோர் = சான்றோர்;
பழுது = பொய்ம்மை; வடு = பழி)

குறிப்பு

### கண்டோர்கூற்று

கண்ணகியின் மலர் போன்ற விழிகளில் இருந்து சொரிகின்ற துன்பக் கண்ணீரையும், அவள் கையிலே ஏந்தி வந்த ஒற்றைச் சிலம்பினையும், உயிர் நீத்த உடம்ப போன்ற அவள் உருவத்தையும், காடு போன்று அடர்ந்து, அவிழ்ந்து சரிந்த அவளது கரிய கூந்தலையும் கண்டு அச்சமுற்று, மதுரை மன்னன் தானே அந்நிலைக்குக் காரணமானதால் உயிர் துறந்து வெற்றுடம்பாய்க் கிடந்தான். தீவினையுடையேன் இந்நிகழ்ச்சியைக் கண்கூடாய்க் கண்டேன்.

கண்ணகியினுடைய உடம்பில் படிந்த புழுதியையும், அவளது விரிந்து கிடந்த கரிய கூந்தலையும், அவளது கையிலேந்திய ஒற்றைச் சிலம்பையும் பார்த்த பொழுதே பாண்டிய நாட்டு மன்னன் வழக்கில் தோற்றான். அக்கண்ணகி வழக்குரைத்த சொற்களைக் கேட்ட அளவிலேயே மன்னன் உயிரையும் துறந்தான்.

தமிழ் இலக்கியத்தில் தொடர்நிலைச் செய்யுளாலான முதல் பெருங்காப்பியமாக விளங்குவது சிலப்பதிகாரம் ஆகும். இக்காப்பியத்தின் ஒரு காதையான வழக்குரை காதை என்ற இந்தப் பாடப் பகுதியில் கோவலன் கண்ணகி வாழ்க்கை வரலாறு மூலம் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதும்; பாண்டிய மன்னன் ஆராயாது செய்த தவறே அவனது உயிருக்கக் கூற்றாய் முடிந்தது என்பதன் மூலம் அரைசியல் பிழைத்தோர்க்க அறம் கூற்றாகம் என்பதும் உணர்த்தப்பட்டுள்ளன.

## கம்பராமாயணம்
## அயோத்தியா காண்டம்
## மந்திரப் படலம்

### கடவுள் வாழ்த்து

வான்நின்று இழிந்து, வரம்பு இகந்த மா பூதத்தின் வைப்பு எங்கும், ஊனும் உயிரும் உணர்வும்போல் உள்ளும் புறத்தும் உளன் என்ப கூனும் சிறிய கோத்தாயும் கொடுமை இழைப்ப, கோல் துறந்து, கானும் கடலும் கடந்து, இமையோர் இடுக்கண் காத்த கழல் வேந்தே.



10811A_rev2.indd 96 12/5/2018 3:48:38 PM

## 1. மந்திரப் படலம்

குறிப்பு

தயரதன் ஆலோசனை மண்டபம் அடைதல்

மண்ணுறு முரசுஇனம் மழையின் ஆர்ப்புற,
பண்ணுறு படர் சினப் பரும யானையான்,
கண்ணுறு கவரியின் கற்றை சுற்றுற,
எண்ணுறு சூழ்ச்சியின் இருக்கை எய்தினான். 1

சபையிலிருந்தாரைப் போக்கி, மந்திரக் கிழவரை மன்னன் வருவித்தல்

புக்கபின், நிருபரும், பொருஇல் சுற்றமும்,
பக்கமும், பெயர்க என, பரிவின் நீக்கினான்
ஒக்க நின்று உலகு அளித்து, யோகின் எய்திய
சக்கரத்தவன் எனத் தமியன் ஆயினான். 2

சந்திரற்கு உவமை செய் தரள வெண்குடை
அந்தரத்தளவும் நின்று அளிக்கும் ஆணையான்,
இந்திரற்கு இமையவர் குருவை ஏய்ந்த, தன்
மந்திரக் கிழவரை, வருக என்று ஏவினான் 3

வசிட்ட முனிவனின் வருகை

பூ வரு பொலன் கழல் பொரு இல் மன்னவன்
காவலின் ஆணைசெய் கடவுள் ஆம் என,
தேவரும் முனிவரும், உணரும், தேவர்கள்
மூவரின் நால்வர் ஆம், முனி வந்து எய்தினான். 4

மாண்பு பல பெற்ற மந்திரக் கிழவர் வந்து அவையில் அமர்தல்

குலம் முதல் தொன்மையும், கலையின் குப்பையும்,
பல முதல் கேள்வியும், பயனும், எய்தினார்
நலம் முதல் நலியினும் நடுவு நோக்குவார்
சலம் முதல் அறுத்து, அருந் தருமம் தாங்கினார் 5

உற்றது கொண்டு, மேல்வந்து உறு பொருள் உணரும் கோளார்
மற்றது அது வினையின் வந்ததுஆயினும், மாற்றல் ஆற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவர் அரிய நூலும்
கற்றவர் மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார் 6

காலமும் இடனும் ஏற்ற கருவியும் தெரியக் கற்ற
நூல் உற நோக்கி, தெய்வம் நுனித்து, அறம் குணித்த மேலோர்



10811A_rev2.indd 97 12/5/2018 3:48:38 PM

குறிப்பு

சீலமும், புகழ்க்கு வேண்டும் செய்கையும், தெரிந்து கொண்டு,
பால் வரும் உறுதி யாவும் தலைவற்குப் பயக்கும் நீரார்? 7

தம் உயிர்க்கு இறுதி எண்ணார் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி, நீதி விடாதுநின்று, உரைக்கும் வீரர்
செம்மையின் திறம்பல் செல்லாத் தேற்றத்தார் தெரியும் காலம்
மும்மையும் உணர வல்லார் ஒருமையே மொழியும் நீரார் 8

நல்லவும் தீயவும் நாடி, நாயகற்கு,
எல்லைஇல் மருத்துவன் இயல்பின் எண்ணுவார்
ஒல்லை வந்து உறுவன உற்ற பெற்றியின்,
தொல்லை நல்வினை என உதவும் சூழ்ச்சியார் 9

அறுபதினாயிரர்எனினும், ஆண்தகைக்கு
உறுதியில் ஒன்று இவற்கு உணர்வு என்று உன்னலாம்
பெறல் அருஞ் சூழ்ச்சியர் திருவின் பெட்பினர்
மறி திரைக் கடல் என வந்து சுற்றினார் 10

முறைமையின் எய்தினர் முந்தி, அந்தம இல்
அறிவனை வணங்கி, தம் அரசைக் கைதொழுது,
இறையிடை வரன்முறை ஏறி, ஏற்ற சொல்
துறை அறி பெருமையான் அருளும் சூடினார் 11

தயரதன் தன் உளக் கருத்தை வெளியிடுதல்
அன்னவர், அருள் அமைந்து இருந்த ஆண்டையில்,
மன்னனம், அவர் முகம் மரபின் நோக்கினான்
உன்னிய அரும் பெறல் உறுதி ஒன்று உளது
என் உணர்வு அனைய நீர் இனிது கேட்டிரால் 12

வெய்யவன் குல முதல் வேந்தர், மேலவர்,
செய்கையின் ஒரு முறை திறம்பல் இன்றியெ
வையம் என் புயத்திடை, நுங்கள் மாட்சியால்,
ஐ-இரண்டு ஆயிரத்து ஆறு தாங்கினேன் 13

கன்னியர்க்கு அமைவரும் கற்பின், மா நிலம்…
தன்னை இத் தகையதாய்த் தருமம் கைதர
மன்னுயிர்க்கு உறுவதே செய்து வைகினேன்
என் உயிர்க்கு உறுவதும் செய்ய எண்ணினேன் 14

**குறிப்பு**

விரும்பிய மூப்பு எனும் வீடு கண்ட யான்,
இரும் பியல் அனந்தனும், இசைந்த யானையும்,
பெரும் பெயர்க் கிரிகளும் பெயர, தாங்கிய
அரும் பொறை இனிச் சிறிது ஆற்ற ஆற்றலேன் 15

நம் குலக் குரவர்கள், நவையின் நீங்கினார்
தம் குலப் புதல்வரே தரணி தாங்கப் போய்,
வெங் குலப்புலன் கெட, வீடு நண்ணினார்
எங்க உலப்புறுவர், என்று எண்ணி, நோக்குகேன் 16

வெள்ள நீர் உலகினில், விண்ணில், நாகரில்,
தள்ள அரும் பகை எலாம் தவிர்த்து நின்ற யான்,
கள்ளரின் கரந்து உறை காமம் ஆதி ஆம்
உள் உறை பகைஞருக்க ஒதுங்கி வாழ்வெனோ? 17

பஞ்சி மென் தளிர் அடிப் பாவைகோல் கொள,
வெஞ் சினத்து அவுணர் தேர் பத்தும் வென்றுளேற்கு,
எஞ்சல் இல் மனம் எனும் இழுதை ஏறிய
அஞ்சு தேர் வெல்லும் ஈது அருமை ஆவதோ 18

ஒட்டிய பகைஞர் வந்து உருத்த போரிடைப்
பட்டவர் அல்லரேல், பரம ஞானம் போய்த்
தெட்டவர் அல்லரேல், செல்வம் ஈண்டு என
விட்டவர் அல்லரேல் யாவர் வீடு உளார்? 19

இறப்பு எனும் மெய்ம்மையை, இம்மை யாவர்க்கும்,
மறப்பு எனும் அதனின்மேல் கேடு மற்ற உண்டோ?
துறப்பு எனும் தெப்பமே துணை செய்யாவிடின்,
பிறப்பு எனும் பெருங் கடல் பிழைக்கல் ஆகுமோ? 20

அருஞ் சிறப்பு அமைவரும் துறவும், அவ் வழித்
தெரிஞ்ச உறவு என மிகும் தெளிவும் ஆய், வரும்
பெருஞ் சிறை உள எனின், பிறவி என்னும் இவ்
இருஞ் சிறை கடத்தலின் இனியத யாவதோ? 21

இனியது போலும் இல் அரசை எண்ணுமோ-
துனி வரு புலன் எனத் தொடர்ந்து தோற்கலா
நனி வரும் பெரும் பகை நவையின் நீங்கி, அத்
தனி அரசாட்சியில் தாழும் உள்ளமே? 22



10811A_rev2.indd 99 12/5/2018 3:48:39 PM

குறிப்பு

உம்மை யான் உடைமையின், உலகம் யாவையும்
செம்மையின் ஓம்பி, நல் அறமும் செய்தனென்
இம்மையின் உதவி, இசை நடாய நீர்,
அம்மையும் உதவுற்கு அமையவேண்டுமால். 23

இழைத்த தொல் வினையையும் கடக்க எண்ணுதல்,
தழைத்த பேர் அருளுடைத் தவத்தின் ஆகுமேல்,
குழைத்தது ஓர் அமுதினைக் கோடல் நீக்கி, வேறு
அழைத்த தீ விடத்தினை அருந்தல் ஆகுமோ 24

கச்சைஅம் கடக் கரிக் கழுத்தின்கண் உறப்
பிச்சமும் கவிகையும் பெய்யும் இன்நிழல்
நிச்சயம் அன்றுஎனின் நெடிது நாள் உண்ட
எச்சிலை நுகருவது இன்பம் ஆகுமோ? 25

மைந்தரை இன்மையின் வரம்பு இல் காலமும்
நொந்தனென் இராமன் என் நோவை நீக்குவான்
வந்தனன் இனி அவன் வருத்த யான் பிழைத்து,
உய்ந்தனென் போவது ஓர் உறுதி எண்ணினேன். 26

“இறந்திலன் செருக் களத்து இராமன் தாதை தான்,
அறம்தலை நிரம்ப, மூப்பு அடைந்த பின்னரும்,
துறந்திலன்” என்பது ஓர் சொல் உண்டானபின்,
பிறந்திலென் என்பதின் பிறிது உண்டாகமோ? 27

பெருமகன் என்வயின் பிறக்க, சீதை ஆம்
திருமகள் மணவினை தெரியக் கண்ட யான்,
அரு மகன் நிறை குணத்து அவனி மாது எனும்
ஒருமகள் மணமும் கண்டு உவப்ப உன்னினேன். 28

நிவப்புறு நிலன் எனும் நிரம்பு நங்கையும்,
சிவப்புறு மலர்மிசைச் சிறந்த செல்வியும்,
உவப்புறு கணவனை உயிரின் எய்திய
தவப் பயன் தாழ்ப்பது தருமம் அன்று அரோ. 29

ஆதலால், இராமனுக்கு அரசை நல்கி, இப்
பேதைமைத்தாய் வரும் பிறப்பை நீக்குறும்
மா தவம் தொடங்குவான் வனத்தை நண்ணுவேன்
யாது நும் கருத்து? என, இனைய கூறினான். 30

குறிப்பு

தயரதன் சொல் கேட்ட மந்திரக் கிழவரின் மன நிலை

திரண்ட தோளினன் இப்படிச் செப்பலும், சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய உவகையர், ஆங்கே
வேருண்டு, மன்னவன் பிரிவு எனும் விதிர்ப்புறு நிலையால்,
இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆ என இருந்தார் 31

அன்னர் ஆயினும், அரசனுக்கு, அது அலது உறுதி
பின்னர் இல் எனக் கருதியும், பெரு நில வரைப்பில்
மன்னும் மன்னுயிர்க்க இராமனின் மன்னவர் இல்லை
என்ன உன்னியும், விதியது வலியினம், இசைந்தார். 32

வசிட்டன் தயரதன் கருத்திற்கு உடன்பட்டுப் பேசுதல்

இருந்த மந்திரக் கிழவர்தம் எண்ணமும், மகன்பால்
பரிந்த சிந்தை அம் மன்னவன் கருதிய பயனும்
பொருந்து மன்னுயிர்க்கு உறுதியும், பொதுவுற நோக்கி,
தெரிந்து, நான்மறைத் திசைமுகன் மகன் இவை செப்பும் 33

நிருப நின் குல மன்னவர் நேமி பண்டு உருட்டிப்
பெருமை எய்தினர் யாவரே இராமனைப் பெற்றார்?
கருமமும் இது கற்று உணர்ந்தோய்க்கு இனிக் கடவ
தருமமும் இது தக்கதே உரைத்தனை – தகவோய் 34

புண்ணியம் தொடர் வேள்விகள் யாவையும் புரிந்த
அண்ணலே இனி, அருந் தவம் இயற்றவும் அடுக்கும்
வண்ண மேகலை நிலமகள், மற்று, உனைப் பிரிந்து
கண் இழந்திலள் எனச் செயும், நீ தந்த கழலோன். 35

புறத்து, நாம் ஒரு பொருள் இனிப் புகல்கின்றது எவனோ,
அறத்தின் மூர்த்தி வந்து அவதரித்தான் என்பது அல்லால்?
பிறத்து, யாவையும் காத்து, அவை பின் உறத் துடைக்கும்,
திறத்து மூவரும் திருந்திடத் திருத்தும், அத் திறலோன். 36

பொன் உயிர்த்த பூ மடந்தையும், புவி எனும் திருவும்,
இன் உயிர்த் துனை இவன் என நினைக்கின்ற இராமன்.
தன் உயிர்க்கு என்கை புல்லிது தற் பயந்து எடுத்த
உன் உயிர்க்கு என நல்லன், மன் உயிர்க்கு எலாம் - உரவோய் 37

வாரம் என் இனிப் பகர்வது? வைகலும், அனையான்
பேரினால், வரும் இடர் எலாம் பெயர்கின்ற பயத்தால்,



10811A_rev2.indd 101 12/5/2018 3:48:39 PM

குறிப்பு

வீர நின் குல மைந்தனை, வேதியர் முதலோர்
யாரும், யாம் செய்த நல் அறப் பயன் என இருப்பார் 38

மண்ணினும் நல்லள் மலர்மகள், மலைமகள், கலை ஊர்
பெண்ணினும் நல்லள் பெரும் புகழ்ச் சனகி ஆம் நல்லள் -
கண்ணினும் நல்லன் கற்றவர், கற்றிலாதவரும்,
உண்ணும் நீரினும், உயிரினும், அவனையே உவப்பார். 39

மனிதர், வானவர், மற்றுளோர் அற்றம் காத்து அளிப்பார்
இனிய மன்னுயிர்க்கு இராமனின் சிறந்தவர் இல்லை
அனையன் ஆதலின் அரச நிற்கு உறு பொருள் அறியின்,
புனித மா தவம் அல்லது ஒன்று இல் எனப் புகன்றான். 40

மன்னன் மகிழ்ந்து உரைசெய்தல்

மற்று, அவன் சொன்ன வாசகம் கேட்டலும், மகனைப்
பெற்ற அன்றினும், பிஞ்ஞகன் பிடித்த அப் பெரு வில்
இற்ற அன்றினும், எறி மழுவாளவன் இழுக்கம்
உற்ற அன்றினும், பெரியது ஓர் உவகையன் ஆனான். 41

அனையது ஆகிய உவகையன், கண்கள் நீர் அரும்ப,
முனிவன் மா மலர்ப் பாதங்கள் முறைமையின் இறைஞ்சி,
இனிய சொல்லினை எம்பெருமான் அருள் வழியின்,
தனியன் நானிலம் தாங்கியது அவற்கு இது தகாதோ? 42

எந்தை நீ உவந்து இதம் சொல, எம் குலத்து அரசர்,
அந்தம் இல் அரும் பெரும் புகழ் அவனியில் நிறுவி,
முந்து வேள்வியும் முடித்து, தம் இரு வினை முடித்தார்
வந்தது அவ் அருள் எனக்கும் என்று உரை செய்து மகிழ்ந்தான். 43

மந்திரக் கிழவரின் கருத்தைச் சுமந்திரன் எடுத்துரைத்தல்

பழுதுஇல் மா தவன், பின் ஒன்றும் பணித்திலன், இருந்தான்
முழுதும் எண்ணுறும் மந்திரக் கிழவர் தம் முகத்தால்
எழுதி நீட்டிய இங்கிதம், இறை மகற்கு ஏற்க,
தொழுத கையினன், சுமந்திரன் முன் நின்று, சொல்லும் 44

உறத் தகும் அரசு இராமற்கு என்று உவக்கின்ற மனத்தை,
துறத்தி நீ எனும் சொல் சுடும் நின் குலத் தொல்லோர்
மறத்தல் செய்கிலாத் தருமத்தை மறப்பதும் வழக்கு அன்று
அறத்தின் ஊங்கு இனிக் கொடிது எனல் ஆவது ஒன்று யாதோ? 45



10811A_rev2.indd 102 12/5/2018 3:48:39 PM

புரசை மாக் கரி நிருபர்க்கும், புரத்து உறைவோர்க்கும்,
உரைசெய் மந்திரக் கிழவர்க்கும், முனிவர்க்கும், உள்ளம்
முரசம் ஆர்ப்ப, நின் முதல் மணிப் புதல்வனை, முறையால்
அரசன் ஆக்கி, பின் அப் புறத்து அடுத்தது புரிவாய் 46

**குறிப்பு**

இராமனை அழைத்துவருமாறு மன்னன் சுமந்திரனுக்குக் கூறுதல்
என்ற வாசகம், சுமந்திரன் இயம்பலும், இறைவன்,
‘நன்று சொல்லினை நம்பியை நளி முடி சூட்டி –
நின்று, நின்றது செய்வது விரைவினில், நீயே
சென்று, கொண்டு அணை, திருமகள் கொழுநனை’ என்றான். 47

தேருடன் சுமந்திரன் இராகவன் திருமனை புகுதல்
அலங்கல் மன்னனை அடிதொழுது, அவன் மனம் அனையான்,
விலங்கல் மாளிகை வீதியில் விரைவொடு சென்றான்,
தலங்கள் யாவையும் பெற்றனன் தான் எனத் தளிர்ப்பான்,
பொலன் கொள் தேரொடும் இராகவன் திருமனை புக்கான். 48

சுமந்திரன் செய்தி தெரிவிக்க, இராமன் உடனே தேரில் புறப்படுதல்
பெண்ணின் இன் அமுது அன்னவள்தன் னொடும், பிரியா
வண்ண வெஞ் சிலைக் குரிசிலும், மருங்கு இனிது இருப்ப,
அண்ணல் ஆண்டு இருந்தான் அழகு அரு நறவு என, தன்
கண்ணும் உள்ளமும் வண்டு என, களிப்புறக் கண்டான. 49

கண்டு, கைதொழுது,‘ஐய, இக் கடலிடைக் கிழவோன்,
“உண்டு ஓர் காரியம் வருக என, உரைத்தனன் எனலும்,
புண்டரீகக் கண் புரவலன் பொருக்கென எழுந்து, ஓர்
கொண்டல்போல் சென்று, கொடி நெடுந் தேர்மிசைக் கொண்டான். 50

வீதிகளில் இராமன் செல்லும்போது நிகழ்ந்த நிகழ்ச்சிகள்
முறையின் மொய்ம் முகில் என முரசு ஆர்த்திட, மடவார்
இறை கழன்ற சங்கு ஆர்த்திட, இமையவர்,‘எங்கள்
குறை முடிந்தது என்று ஆர்த்திட, குஞ்சியைச் சூழ்ந்த
நறை அலங்கல் வண்டு ஆர்த்திட, தேர்மிசை நடந்தான். 51

பணை நிரைந்தன பாட்டு ஒலி நிரைந்தன அனங்கன்
கணை நிரைந்தன நாண் ஒலி கறங்கின நிறைப் பேர்
அணை நிரைந்தன அறிவு எனும் பெருமபுனல் அனையார்
பிணை நிரைந்தெனப் பரந்தனர் நாணமும் பிரிந்தார். 52

குறிப்பு

நீள எழுத் தொடர் வாயிலில், குழையொடு நெகிழ்ந்த
ஆளகத்தினோடு அரமியத் தலத்தினும் அலர்ந்த
வாள் அரத்த வேல் வண்டொடு கெண்டைகள் மயங்க,
சாளரத்தினும் பூத்தன, தாமரை மலர்கள். 53

மண்டலம் தரு மதி கெழு, மழை முகில் அனைய,
அண்டர் நாயகன் வரை புரை அகலத்துள் அலங்கல்,
தொண்டை வாய்ச்சியர் நிறையொடும், நாணொடும், தொடர்ந்த
கெண்டையும் உள கிளை பயில் வண்டொடும் கிடந்த. 54

சரிந்த பூ உள, மழையொடு கலை உறத் தாழ்வ
பரிந்த பூ உள, பனிக் கடை முத்துஇனம் படைப்ப
எரிந்த பூ உள, இள முலை இழை இடை நுழைய
விரிந்த பூ உள, மீனுடை வானின்றும் வீழ்வ. 55

வள் உறை கழித்து ஒளிர்வன வாள் நிமிர் மதியம்
தள்ளுறச் சுமந்து, எழுதரும் தமனியக் கொம்பில், -
புள்ளி நுண் பனி பொடிப்பன, பொன்னிடைப் பொதிந்த,
எள்ளுடைப் பொரி விரவின, - உள சில இளநீர். 56

தம்பி இலக்குவனுடன் இராமன் தயரதன் இருந்த இடம் சேர்தல்

ஆயது, அவ்வழி நிகழ்தர, ஆடவர் எல்லாம்
தாயை முன்னிய கன்று என நின்று உயிர் தளிர்ப்ப,
தூய தம்பியும், தானும், அச் சுமந்திரன் தேர்மேல்
போய், அகம் குளிர் புரவலன் இருந்துழிப் புக்கான். 57

வசிட்டனையும் தயரதனையும் இராமன் வணங்க, தயரதன் அவனை மார்புறத் தழுவுதல்

மாதவன்தனை வரன்முறை வணங்கி, வாள் உழவன்
பாத பங்கயம் பணிந்தனன் பணிதலும், அனையான்,
காதல் பொங்கிட, கண் பனி உகுத்திட, கனி வாய்ச்
சீதை கொண்கனைத் திரு உறை மார்பகம் சேர்த்தான். 58

'நலம் கொள் மைந்தனைத் தழுவினன்' என்பது என்? நளி நீர்
நிலங்கள் தாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்,
விலங்கல் அன்ன திண் தோளையும், மெய்த் திரு இருக்கும்
அலங்கல் மார்பையும், தனது தோள், மார்பு, கொண்டு அளந்தான் 59

தயரதன் தன் கருத்தை இராமனுக்கு விளங்க உரைத்தல்

ஆண்டு, தன் மருங்கு இரீஇ, உவந்து, அன்புற நோக்கி,

**குறிப்பு**

'பூண்ட போர் மழு உடையவன் பெரும் புகழ் குறுக
நீண்ட தோளினாய் நிற் பயந்தெடுத்த யான் நின்னை
வேண்டி, எய்திட விழைவது ஒன்று உளது' என, விளம்பும் 60
ஐய சாலவும் அலசினென் அரும் பெரு மூப்பும்
மெய்யது ஆயது வியல் இடப் பெரும் பரம் விசித்த
தொய்யல் மா நிலச் சுமை உறு சிறை துறந்து, இனி யான்
உய்யல் ஆவது ஓர் நெறி புக, உதவிட வேண்டும். 61

"உரிமை மைந்தரைப் பெறுகின்றது, உறு துயர் நீங்கி,
இருமையும் பெறற்கு" என்பது பெரியவர் இயற்கை
தருமம் அன்ன நின்-தந்த யான், தளர்வது தகவோ?
கருமம் என்வயின் செய்யின், என் கட்டுரை கோடி. 62

'மைந்த நம் குல மரபினில் வந்தருள் வேந்தர்,
தம்தம் மக்களே கடன்முறை நெடு நிலம் தாங்க,
ஐந்தொடு ஆகிய முப் பகை மருங்கு அற அகற்றி,
உய்ந்து போயினர் ஊழி நின்று எண்ணினும் உலவார். 63

'முன்னை ஊழ்வினைப் பயத்தினும், முற்றிய வேள்விப்
பின்னை எய்திய நலத்தினும், அரிதினின் பெற்றேன்
இன்னம், யான் இந்த அரசியல் இடும்பையில் நின்றால்,
நின்னை ஈன்றுள பயத்தினின் நிரம்புவது யாதோ? 64

'ஒருத்தல் எட்டொடு, திருத் தலை பன்மை சால் உரக
எருத்தம் மேல் படி புயம் அறச் சுமந்து, இடர் உழக்கம்
வருத்தம் நீங்கி, அவ் வரம்பு அறு திருவினை மருவும்
அருத்தி உண்டு, எனக்கு ஐய ஈது அருளிட வேண்டும். 65

ஆளும் நல் நெறிக்கு அமைவரும் அமைவினன் ஆகி,
நாளும் நம் குல நாயகன் நறை விரி கமலத்
தாளின் நல்கிய கங்கையைத் தந்து, தந்தையரை
மீள்வு இலா உலகு ஏற்றினான் ஒருமகன், மேல்நாள். 66

மன்னவர் வானவர் அல்லர் மேல் வானவர்க்கு அரசு ஆம்
பொன்னின் வார் கழல் புரந்தரன் போலியர் அல்லர்
பின்னும், மா தவம் தொடங்கி, நோன்பு இழைத்தவர் அல்லர்
சொல் மறா மகப் பெற்றவரே துயர் துறந்தார். 67



10811A_rev2.indd 105 12/5/2018 3:48:39 PM

குறிப்பு

அனையது ஆதலின்,"அருந் துயர்ப் பெரும் பரம், அரசன்
வினையின் என்வயின் வைத்தனன்" எனக் கொள வேண்டா
புனையும் மா முடி புனைந்து, இந்த நல் அறம் புரக்க
நினையல் வேண்டும் யான் நின்வயின் பெறுவது ஈது என்றான். 68

தந்தை ஏவியது செயல் கடன் என, இராமன் தயரதன் கட்டளைக்கு இசைதல்

தாதை, அப் பரிசு உரைசெய, தாமரைக் கண்ணன்
காதல் உற்றிலன் இகழ்ந்திலன் கடன் இது என்று உணர்ந்தும்,
யாது கொற்றவன் ஏவியது அது செயல் அன்றோ,
நீதி எற்கு?' என நினைந்தும், அப் பணி தலை நின்றான். 69

தயரதன் மகிழ்ந்து, தன் அரண்மனைக்குப் போதல்

குருசில் சிந்தையை மனக்கொண்ட கொற்ற வெண்குடையான்,
'தருதி இவ் வரம்' எனச் சொலி, உயிர் உறத் தழுவி,
சுருதி அன்ன தன் மந்திரச் சுற்றமும் சுற்ற,
பொரு இல் மேருவும் பொரு அருங் கோயில் போய்ப் புக்கான். 70

சுமந்திரனது தேரில் ஏறி, இராமனும் தன் அரண்மனை சேர்தல்

நிவந்த அந்தணர், நெடுந் தகை மன்னவர், நகரத்து
உவந்த மைந்தர்கள், மடந்தையர், உழைஉழைத் தொடர,
சுமந்திரன் தடந் தேர்மிசை, சுந்தரத் திரள் தோள்
அமைந்த மைந்தனும், தன் நெடுங் கோயில் சென்று அடைந்தான். 71

தயரதன் அரசர்களுக்கு ஓலை போக்கி, முடிசூட்டுவதற்கு வேண்டுவன செய்ய வசிட்டனிடம் கூறுதல்

வென்றி வேந்தரை,'வருக' என்று, உவணம் வீற்றிருந்த
பொன் திணிந்த தோட்டு அரும் பெறல் இலச்சினை போக்கி,
'நன்று சித்திர நளிர் முடி கவித்தற்கு, நல்லோய்
சென்று, வேண்டுவ வரன்முறை அமைக்க' எனச் செப்ப, 72

வந்த மன்னர்களிடம் முடிசூட்டும் செய்தியைத் தயரதன் தெரிவித்தல்

உாயி மா தவன் ஒள்ளிது என்று உவந்தனன், விரைந்து, ஓர்
பொரு இல் தேர்மிசை, அந்தணர் குழாத்தொடும் போக-
'நிருபர் கேண்மின்கள், இராமற்கு நெறி முறைமையினால்
திருவும் பூமியும் சீதையின் சிறந்தன' என்றான். 73

**குறிப்பு**

யாவரும் மகிழ்ந்து, அரசன் கருத்தை விரும்பி வரவேற்றல்
இறைவன் சொல் எனும் இன் நறவு அருந்தினர் யாரும்,
முறையில் நின்றலர் முந்துறு களியிடை மூழ்கி,
நிறையும் நெஞ்சிடை உவகை போய் மயிர் வழி நிமிர,
உறையும் விண்ணகம் உடலோடும் எய்தினர் ஒத்தார். 74

ஒத்த சிந்தையர் உவகையின் ஒருவரின் ஒருவர்
தத்தமக்கு உற்ற அரசு எனத் தழைக்கின்ற மனத்தர்
முத்த வெண்குடை மன்னனை முறைமுறை தொழுதார்
'அத்த நன்று' என, அன்பினோடு அறிவிப்பது ஆனார். 75

'மூ-எழு முறைமை எம் குலங்கள் முற்றுறப்
பூ எழு மழுவினால் பொருது போக்கிய
சேவகன் சேவகம் செகுத்த சேவகற்கு,
ஆவ இவ் உலகம் ஈது அறன்' என்றார் அரோ. 76

என் கருத்திற்கு இசைந்தது எதனால்? என, மன்னரைத் தயரதன் வினாவுதல்
வேறு இலா மன்னரும் விரும்பி, இன்னது
கூறினார் அது மனம் கொண்ட கொற்றவன்,
ஊறிய உவகையை ஒளிக்கும் சிந்தையான்,
மாறும் ஓர் அளவை சால் வாய்மை கூறினான். 77

மகன்வயின் அன்பினால் மயங்கி, யான் இது
புகல, நீர் புகன்ற இப் பொம்மல் வாசகம்,
உகவையின் மொழிந்ததோ? உள்ளம் நோக்கியோ?
தகவு என நினைந்ததோ? தன்மை யாது?' என்றான். 78

வேத்தவையோரின் விடை
இவ்வகை உரைசெய இருந்த வேந்துஅவை,
'செவ்வியோய் நின் திருமகற்குத் தேயத்தோர்
அவ்வவர்க்கு, அவ்வவர்க்கு அமைந்தவாறு உறும்
எவ்வம் இல் அன்பினை, இனிது கேள்' எனா, 79

தானமும், தருமமும், தகவும், தன்மை சேர்
ஞானமும், நலலவர்ப் பேணும் நன்மையும்,
மானவ எவையும் நின் மகற்கு வைகுமால்-
ஈனம் இல் செல்வம் வந்து இயைக என்னவே. 80



10811A_rev2.indd 107 12/5/2018 3:48:39 PM

குறிப்பு

ஊருணி நிறையவும், உதவும் மாடு உயர்
பார் கெழு பயன்மரம் பழுத்தற்று ஆகவும்,
கார் மழை பொழியவும், கழனி பாய் நதி
வார் புனல் பெருகவும், மறுக்கின்றார்கள் யார்? 81

பனை அவாம் நெடுங் கரப் பரும யானையாய்
நினை அவாம் தகையனாய், நிமிர்ந்த மன்னுயிர்க்கு,
எனையவாறு அன்பினன் இராமன்,ஈண்டு, அவற்கு
அனையவாறு அன்பின அவையும்' என்றனர். 82

தயரதன் உவகை மிகுதியால், அவையோரை நோக்கிப் பேசுதல்

மொழிந்தது கேட்டலும், மொய்த்து நெஞ்சினைப்
பொழிந்த பேர் உவகையன், பொங்கு காதலன்,
'கழிந்தது என் இடர்' எனக் களிக்கும் சிந்கையன்,
வழிந்த கண்ணீரினன், மன்னன் கூறுவான் 83

செம்மையின், தருமத்தின், செயலின், தீங்கின்பால்
வெம்மையின் ஒழுக்கத்தின், மெய்ம்மை மேவினீர்,
என் மகன் என்பது என்? நெறியின்,ஈங்கு, இவன்
நும் மகன் கையடை நோக்கும் ஈங்கு' என்றான். 84

அரசவை விடுத்து, நாள் குறித்தற்காகத தயரதன் மற்றொரு மண்டபம் போதல்

அரசவை விடுத்தபின், ஆணை மன்னவன்,
புரை தபு நாளொடு பொழுது நோக்குவான்
உரை தெரி கணிதரை ஒருங்கு கொண்டு, ஒரு
வரை பொரு மண்டபம் மருங்கு போயினான். 85

# கம்பராமாயணம்
# அயோத்தியா காண்டம்
# மந்திரப் படலம்

கவிச் சக்கரவர்த்தி கம்பர், கவிதையைக் கோதாவரி ஆற்றின் நீரோட்டத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார்.

“புவியினுக் கணியாய் ஆன்றபொருள் தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைக்ள தாங்கி ஐந்திணை நெறிய ளாவிச்

சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச்
சான்றோர்
கவியெனக் கிடந்த கோதா விரியினை வீரர் கண்டார்.''

குறிப்பு

கல்வியில் பெரியர் கம்பர் என்றும் கவிச் சக்கரவர்த்தி என்றும் ஆன்றோரால் பாராட்டப் பெற்ற கம்பர் ஆதிகவி வான்மீகி முனிவர் தந்த இராமாயணத்தைத் தமிழில் தருகிறார். 'விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்' என்று புலவர் பெருமக்கள் கம்பனைக் சிறப்பிக்கின்றனர்.

இராமகதை ஏழு காண்டங்களாக விரிகிறது. இரண்டாவது காண்டம் அயோத்தியா காண்டம். இதில் மந்திரப் படலம் என்பது இராமனுக்கு முடிசூட்டுவது பற்றித் தசரதன் தன் மந்திரக் கிழவரோடு ஆலோசித்ததைக் கூறும் பகுதியாகும். இதன்கண் மந்திரக் கிழவரின் மாண்புகள், தசரதன் தன் கருத்தைக் கூறுவது அமைச்சர்கள் மனநிலை, வசிட்டன் உடன்படல், மன்னன் மறுமொழி, சுமந்திரன் இராமனை அழைத்து வரும் போது நகரில் நடந்தவை, தசரதன் இராமனிடம் கூறுவது, இராமன் ஏற்பு.

பிற மன்னர்களின் வருகையும் அவர்கள் கருத்தும், தசரதன் மகிழ்ச்சி முதலானவை இடம்பெறுகின்றன. கம்பன் பாடல்கள் உவமை நயங்களோடு மிளிர்கின்றன.

இராமாயணத்தில் இந்த அயோத்தியா காண்டம் உயிர் நிலை யாகிறது. காரணம் கூனியின் சூழ்ச்சியினால் கைகேயி தன்மனம் மாறுபட்டு இராமனைக் காட்டிற்குச் செலுத்த அதுவே இராவண வதத்துக்கு அடிப்படை ஆகிறது. இதனைக் கம்பர்,

''அரக்கர் பாவமும் அல்லவ ரியற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழிமடமான்
இரக்க மின்மை யன்றோ இன்றிவ்வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழமுதினைப் பருகுகின் றதுவே''

என்று குறிக்கிறார்.

**மந்திரப் படலம்**

தசரதன் தன்னைச் சுற்றி இருந்த நிருபரையும் சுற்றத்தாரையும் 'பெயர்க' என அன்போடு நீக்கினான்.

பின்னர் ''ஒக்க நின்று உலகளித்து யோகின் எய்திய
சக்கரத்தவன் எனத் தமிய னாயினான்'' அதன்

பின்னர் வியாழ பகவானை ஒத்த 'மந்திரக் கிழவரை' வருக என அழைக்கிறான்.



10811A_rev2.indd 109 12/5/2018 3:48:40 PM

வசிட்ட முனிவர் கடவுள் போன்று வந்து அமர்கிறார். அடுத்து மந்திரக் கிழவர்கள் அறுபதினாயிரம் பேர் வருகின்றனர். அவர்களது மாண்புகளைக் கம்பன் ஏழு பாடல்களால் குறிக்கிறான்.

குறிப்பு

**மந்திரக் கிழவர்மாண்புகள்(5-11)**

உயர்ந்த குடியில் பிறந்தவர்களாகவும், கலை ஞானம் பல கற்றவர்களாகவும் கேள்விச் செல்வம் உடையவர்களாகவும், தீமை வரினம் நடுநிலைமை தவறாதவர்களாகவும், குற்றம் கடிந்து தருமம் தாங்குபவர்களாகவும் இருந்தனர்.

நடந்ததை வைத்து இனி வருவதை உணரும் அறிவும், ஊழ்வினையால் வந்ததையும் அறிவினால் மாற்றும் வன்மையும், பிறப்பினால் மேன்மையும், அரிய நூற்கல்வியும் கவரிமான் போன்ற மான உணர்வும் உடையவர்கள் அவர்கள்.

காலம், இடம், கருவி அனைத்தும் அறிந்து தெய்வம் தெளிந்து அறம் செய்யும் மேலோராவர். பண்புகளும் புகழுக்கு வேண்டும் செய்கையும் அறிந்து அரசனுக்கு வேண்டிய உறுதிகளைக் கூறும் தன்மை உடையவர்கள் ஆவர்.

தம் உயிரைப் பெரிதாக மதிக்காமல் அரசன் சினந்த போதும் விடாது நீதியை உரைக்கும் வன்மை உடையவர்களாவர். சிறந்த நெறிகளினின்றும் நீங்காதவர்களாகவும், முக்காலம் உணர்ந்தவர்களாகவும், மாறிமாறிப் பேசாமல் நன்று ஒன்றையே கூறுபவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள்.

நன்மை, தீமை நாடி மருத்துவன் போல அரசனுக்கு நன்மையையே நினைப்பவர்கள் அரசனுக்குத் துன்பம் வந்த போது, அவன் செய்த நல்வினை அவனுக்கு உதவுமாறு போல உதவுகின்ற ஆற்றல் உடையவர்கள் இம் மந்திரக் கிழவர்கள் எண்ணிக்கையில் அறுபதினாயிரவர் என்றாலும், அரசனுக்கு எது உறுதியோ அதைச் செய்வதில் இவர்கள் எல்லோரும் ஒத்த உணர்வு உடையவர்கள். செல்வமும் அறிவும் நிரம்பப் பெற்ற அவர்கள் கடல் எனத் தசரதனை வந்தடைந்தனர்.

**தயரதனின் உள்ளக் கருத்து**

அவர்களிடம் தசரதன் தன் உள்ளக் கருத்தைத் தெரிவிக்கிறான். அவர்கள் உதவியோடு அறுபதினாயிரம் ஆண்டுகள் ஆண்டதாகக் கூறுகிறான். என் உணாவனைய நீங்கள் என் கருத்தைக் கேட்க வேண்டும் என்கிறான்.

கன்னியர்க்கு இன்றியமையாக் கற்பு போல மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனியன செய்தேன். இனி என் உயிர்க்கு நன்மை செய்ய எண்ணுகிறேன்.

குறிப்பு

முன்பு ஆண்ட மன்னர் எல்லாம் மூப்புக் காரணமாகத் தம் குலப் புதல்வரே தரணி ஆளத் தாம் போய் வீடு பெற்றார்.

சம்பராசுரன் முதலிய பத்து அரக்கர் தேரையும் வென்ற எனக்கு உள்ளத்தின் உள்ளே உறைகின்ற ஐம்புலப் பகைவர்களை வெல்லல் அரிதாவதோ?

போரிடை வீர மரணம் அடைந்தவர், ஞானத் தெளிவு பெற்றவர், செல்வத்தை பூமியில் விட்டவர் தவிர வேறு யார் வீடு பெற முடியும்?

இறப்பை மறப்பதை விட மனிதப் பிறவிக்கு வேறு கேடு உண்டா? உலகப் பற்றைத் துறப்பதையே தெப்பமாகக் கொண்டு பிறப்பு எனும் பெருங்கடல் தாண்ட வேண்டுமல்லவா பிறப்பு அறுத்தலை விட உயிர்க்கு இனியது எது?

இப்பிறப்பில் எனக்கு உதவிய நீங்கள் மறுமைக்கு வேண்டியனவற்றையும் செய்தல் வேண்டும்.

தவத்தால் வினைகளைக் கடக்கலாம் என்றால் அந்த அமுதாகிய தவத்தை விட்டு தீவிடத்தினை அருந்தலாமா

மைந்தர் இல்லாமல் வருந்திய எனக்கு இராமன் மகனாக வந்தான். இனி அவன் வருந்த யான் பிழைத்துப் போக உறுதி எண்ணினேன். (இராமன் அரச பாரத்தைத் தாங்க யான் சுமை நீங்கப் பெற்றவனாக அமைய விரும்புகிறேன் என்று தசரதன் இயல்பாகச் சொல்லுகிறான். இவ்வாறு வரும் இடங்கள் நாடகக் கீழறை எனப்படும். எதிர்காலத்தை உணர்த்தும் தொனிப் பொருளாக இவை அமையும். இனி,'அவன் வருந்த' என்பது எதிர்காலத்தில் இராமன் வருந்தப் போகிறான் என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறது. ''யான் பிழைத்துப்போக'' என்பது அரசப் பொறுப்பில் இருந்து விடுபடப் போவதையும், பின்னர் உயிர் விடப் போவதையும் குறிப்பால் உணர்த்துகிறது).

மூப்பிலும் தசரதன் அரசாட்சியைக் கைவிடவில்லை என்று உலகோர் சொல்லுவார்களானால் அதைவிட வேறு பழிச்சொல் உண்டோ? அதற்கு நான் பிறக்காமலேயே இருந்திருக்கலாம்.

சீதையை இராமன் மணக்கக் கண்ட நான், பூமகளையும் (அரசாட்சி பெறல்) மணத்தல் காண வேண்டும்.

நிலமகளும் திருமகளும் செய்த தவப்பயனை அவர்கள் பெறுவதற்குத் தடையாக நான் இருப்பது தகாது.

இராமனுக்கு அரசு நல்கிக் கானகம் சென்று தவம் செய்ய விரும்புகிறேன்.

இவ்வாறு எல்லாம் தசரதன் மந்திரக் கிழவர்களிடம் சொல்லி அவர்கள் கருத்தைக் கேட்கிறான்.

குறிப்பு

## அமைச்சர்கள் மனநிலை

இராமன் அரசன் ஆகிறான் என்பதனால் மகிழ்ச்சி பொங்க அமைச்சர்கள் இருந்தனர். அதே நேரத்தில் தசரதன் ஆட்சிப் பொறுப்பிலிருந்து பிரிகிறான் என்ற துக்கமும் அவர்களிடம் இருந்தது. ''இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆ'' வென இருந்தனர். அரசனுக்கு இதைவிட வேறு உறுதி இல்லை என்றும், இராமனை விட மன்னராவதற்குச் சிறந்தவர் வேறு ஒருவர் இல்லை என்றும் நினைந்து விதியது வலிமையையும் உணர்ந்து இராமன் மன்னராவதற்கு இசைந்தனர்.

## வசிட்டன் உடன்படல்

பிரமன் மகன் வசிட்ட முனிவர் கூறுகிறார் நும் குலத்து முன்னோரில் யாவர் இராமனைப் பெற்றார்? செய்யத்தக்க கருமம் இது தருமமும் இது. தக்கதையே கூறினாய் என்று தசரதனிடம் கூறினார். இராமன் நிலமகளைக் காப்பான் என்றார்.

## அறத்தின் மூர்த்தி இராமன்

இராமன் உனக்கு மட்டும் இல்லை. உலகுக்கே நல்லவன். வேதியர் முதலாயினோர் ''யாம் செய்த நல்லறப் பயன்'' என உவந்து இருப்பர்.

## நல்லவள் சீதை

மண்மகளை விட, இலக்குமி, சரஸ்வதி, பார்வதி முதலானவர்களை விடப் ''பெரும் புகழ்ச்'' சனகி (சீதை) நல்லவள். நல்லவள் கண்ணைவிட நல்லவன் இராமன் கற்றவர் கல்லாதவர் என்று எல்லாத் தரப்பினரும் தாம் உண்ணும் நீரைவிட, தங்கள் உயிரினும் மேலாக இராமனை நினைப்பர்-மகிழ்வர். (அரசியும் நல்லவளாக இருக்க வேண்டும் என்ற குறிப்பு இங்கு உணர்த்தப் பெறுகிறது) அரசே உனக்குத் தவம் தான் உறுதி என்று வசிட்டன் உரைத்தான்.

## தசரதன் மறுமொழி

வசிட்டன் கூறியதைக் கேட்ட தசரதன், இராமனைப் பெற்ற நாளை விட, சீதையை மணப்பதற்காக சிவதனுசை உடைத்த நாளை விட, பரசுராமனது குந்தாலிப் படையை வென்ற நாளை விடப் பெரியதொரு மகிழ்ச்சியை அடைந்தான்.

> ''ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக் கேட்ட தாய்'' என்னும் குறள்

இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

எம் குல மூதாதையர் இருவினை முடித்தார் எமக்கம் அந்த அருள் வந்தது என்று தசரதன் மகிழ்ந்தான்.

குறிப்பு

## சுமந்திரன் கூறியது

இராமனுக்கு அரசு என்றதும் மகிழ்கிற எங்கள் மனத்தை நீ துறந்து போகிறாய் என்ற சொல் சுடும். உங்கள் குலத்தார் செய்த தருமத்தை மறப்பதும் அழகல்ல. ஆகவே நீ முதற் புதல்வனை அரசன் ஆக்கிப் பின்னர் துறவு மேற்கொள் என்றான்.

நன்று என்ற தசரதன் இராமனை அழைத்துவா என்றான். அரசாட்சியைத் தானே பெற்றது போலச் சுமந்திரன் மகிழ்ந்தான் எனக் கம்பர் கூறுகிறார். இராமன் தேன் போல இருந்தான். சுமந்திரன் கண்ணும் உள்ளமும் வண்டுபோல இருந்து அவனைக் கண்டு களித்தான் எனக் கம்பன் வருணிக்கிறான்.

## இராமன் தேரில் வரும்போது நகரில் நடந்தவை

இராமன் திருமனை புகுந்த சுமந்திரன், இராமனை வணங்கி,“ஐய,” தசரதன் “உண்டு ஓர் காரியம், வருக” என உரைத்தனன் என்று சொன்ன அளவிலே பொருக்கென எழுந்து, மேகம் போல் சென்று தேர் மிசை ஏறினான்.

மேகம் என முரசங்கள் ஆர்த்தன. மடவார் கைகளில் அணிந்திருந்த சங்கு வளையல்கள் ஆர்த்தன. இமையவர் “எங்கள் குறை முடிந்தது” என்று ஆர்த்தனர்.

எங்கும் பாட்டொலி நிறைந்தது. மன்மதன் அம்புகள் நிறைந்தன. வில்லொலிகள் கேட்டன. ஆடவரும் பெண்டிரும் குழுமினர். வாசல்கள், முற்றங்கள், மடங்கள் சாளரங்கள் எங்கும் பெண்கள் நிறைந்தனர். எங்கும் பூக்கள் நிறைந்து இருந்தன. ஆடவர் எல்லாம் தாயை நினைந்த கன்று போல இராமனைக் கண்டு மகிழ்ந்தனர்.

தூய தம்பி இலக்குவனுடன், அகம் மகிழ்ந்து இருந்த தசரதனை இராமன் கண்டு சேர்ந்தான்.

## தசரதன் இராமனுக்குத் தன் கருத்தை உரைத்தல்

வசிட்டனையும் தசரதனையும் இராமன் வணங்கினான். தசரதன் அன்று பொங்க இராமனைத் தழுவிக் கொண்டார். அதைக் கம்பர் கூறுகிறார். தசரதன் இராமனைத் தழுவவா செய்தான் இல்லை, இல்லை. இந்த பூமியை ஆள்வதற்குரிய ஆற்றல் இராமன் மார்புக்கும் தோள்களுக்கும் உண்டா என்று தன் மார்பையும் தோள்களையம் கொண்டு அளந்தான் என்கிறார்.

குறிப்பு

பின்னர், இராமனைப் பார்த்து,'ராமா பரசுராமனை வென்ற உன்னிடம் நான் விரும்புவது ஒன்று உண்டு என்று பேசத் தொடங்குகிறான். எனக்க மூப்பு வந்துவிட்டது. இந்த நிலச் சுமை (ஆட்சி) எனும் சிறை துறந்து யான் மேம்படுவதற்கு நீ உதவ வேண்டும். பிள்ளைகளைப் பெறுவது, பெற்றோர்களுக்கு இம்மை மறுமைப் பயன்களை அளிப்பதற்கென்று பெரியவர்கள் கூறுவார்கள். தருமம் என்று சொல்லத்தக்க உன்னைப் பெற்ற யான் தளரலாமா? எனக்கு நீ ஒரு காரியம் செய்ய வேண்டும். நம் மரபில் வந்தவர்கள் தம் மக்கட்கு அரசுடைமை நல்கித் தாங்கள் தவம் செய்து உய்ந்தனர்.

ஊழ்வினைப் பயனாலும், வேள்வியின் நலத்தினாலும் உன்னை மகனாக பெற்றேன். இன்னும் நான் அரசனாக நீடித்தால் உன்னைப் பெற்றதன் பலன் தான் என்ன? பூபாரம் நீங்கி வரம்பு இல் இன்பம் தரும் தவம் மேற்கொள்ள விரும்புகிறேன். மன்னர், வானவர், இந்திரன், மாதவர்கள் போன்றோர் யாரும் துன்பத்திலிருந்து விடுபட்டவர்கள் இல்லை. ஆனால் சொன்ன சொல்லை மறுக்காத பிள்ளைகளைப் பெற்றோரே துன்பம் துடைத்தவர்கள். அரசன் பெரும பாரத்தை நம் மீது வைத்து விட்டான் என்று நினைக்காதே, முடி புனைந்து அறம் புரிதலை நினை. இதுவே நான் உன்னிடம் விரும்புவது என்றான் தசரதன்.

## இராமன் இசைவு

தந்தை சொல்லக் கேட்ட இராமன், அரசபதவியை விரும்பவுமில்லை. வெறுக்கவுமில்லை. இது மகனுக்குக் கடமை என உணர்ந்தான். மேலும் அரசன் ஏவியதைச் செய்வது தானே தனக்கு நீதி என்றும் உணர்ந்தான்.

தசரதன் தன் அரண்மனைக்குப் போனான்.

அந்தணர், மன்னவர், ஆடவர், மகளிர் தொடர இராமனும் தன் மனைக்குப் போனான்.

### மன்னர்களுக்குச் செய்தி சொல்லல்

தசரதன் எல்லா மன்னர்க்கும் கருட இலச்சினை பொறிந்த மடல் அனுப்பி வரவழைத்தான். வசிட்டனிடம் மூடி புனைவதற்கு வேண்டியன செய்யுமாறு பணித்தான். அவன் அந்தணர்களோடு தேர்மீது போனான். வந்த மன்னர்களிடம் இராமனுக்கு முடிசூட்டும் செய்தியினை சொன்னான். செய்தி கேள்விப்பட்டதும் மன்னர்கள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மண்ணக மன்னர்களாகிய அவர்கள் உடலோடும் விண்ணகம் சென்றவர்கள் போலக் களிப்பு எய்தினர்.

மேலும் அவரவரும் அரசுரிமை பெற்றாற்போல மகிழ்ந்தனர். நல்லது என அறிவித்தார்கள்.

குறிப்பு

பரசுராமனை வென்ற இராமனுக்கு இது நன்று என்றார்கள் (பரசுராமனால் அரசர்குலம் படாத பாடு பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இனி அரசர் குலத்துக்கு அச்சமில்லை என்பது அவர்கள் மகிழ்ச்சியைப் பெருக்கியது).

## தசரதன் மீண்டும் கேட்டல்

மன்னர்களைப் பார்த்துக் தசரதன் திரும்பவும் கேட்கிறான். என் மகனிடம் அன்பு கொண்டு நான் இது கூற நீங்கள் எல்லோரும் ஏற்றுக் கொண்டதற்கு என்ன காரணம்? நீங்கள் 'நன்று' என்று கூறியது ஆசை காரணத்தாலா? அல்லது உள்ளக் கருத்தா? இல்லை. இராமனது தகுதியினாலா? உங்கள் ஏற்பின் தன்மை யாது? என வினவினான்.

## மன்னன் மறுமொழி

தானம், தருமம், தகுதி, ஞானம், நல்லவரைப் பேணும் நன்மை எல்லாமே இராமனிடம் உள்ள பண்புகள். ஆகவே அவனுக்கு உயர்ந்த செல்வம் வந்து பொருந்தும்.

ஊருணி நிறைதலையும், பயன்தரும் மரம் பழுப்பதையும், மழை பொழிவதையும், வயலெல்லாம் நீர் பெருகுதலையும் யாராவது மறுப்பார்களா? மன்னுயிர்க்கு எல்லாம் எவ்வாறு இராமன் அன்புடையவனோ, அவ்வாறே அவையும் அவனிடத்து அன்புடையவை, என்று மன்னரெல்லாம் தசரதனிடம் கூறினார்கள்.

இதைக் கேட்டதும, பேருவகை தசரதனுக்கு ஏற்பட்டது. 'என் துன்பம் கழிந்தது' என்று கூறி மகிழ்ந்தான்.

## அரசர்களைத் தசரதன் பாராட்டல்

செம்மையாகவும், தருமம் செய்பவர்களாகவும் செயல் வீரராகவும், தீமையின் பாற் படாதவர்களாகவும் ஒழுக்கம் உடையவர்களாகவும் உண்மையின் காவலர்களாகவும் விளங்கும் அரசர் பெருமக்களே 'இவன் என் மகன் என்பது என்ன? இனி உங்கள் மகன். உங்கள் கைகளில் ஒப்புவிக்கிறேன். பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்றான்.

அரசவையை விட்டு வெளியே வந்த தசரதன் முடிசூட்டக் குற்றமற்ற நாளும் பொழுதும் பார்க்கக் கணிதப் பெருமக்களை அழைத்துக் கொண்டு வேறொரு மண்டபத்துக்கச் சென்றான்.

இவ்வாறு மந்திரப்படலம் நிறைவு பெறுகிறது.



10811A_rev2.indd 115 12/5/2018 3:48:40 PM

## வினா விடைகள்

குறிப்பு

1. பாண்டிமாதேவி கண்ட கனவினை எழுதுக.

"தோழி! நம் மன்னனது வெண்கொற்றக்குடையோடு செங்கோலும் கீழே விழுந்ததடீ! இடைவிடாது அசையும் கடைவாயில் மணியின் ஓசையினையும் கனவிலே நான் கேட்டேனடீ!

எட்டு திசைகளும் அப்போது அதிர்ந்தன அதுவுமல்லாமலும், ஞாயிற்றினை இருள் விழுங்கவும் அப்போது கண்டேனடீ!

இரவு நேரத்து வானத்திலே வானவில் தோன்றக் கண்டேன். நண்பகற் பொழுதிலே வானத்துத் தாரகைகள் எரி கொள்ளிகளாகப் பூமியை நோக்கி விழவும் கண்டேன். இஃதெல்லாம் ஏனோ?"

"செங்கோலும் வெண்குடையும், செறிந்த நிலத்தின் கண் மடங்கிக் கீழே சரிந்தன. நம் கோமானது கொற்றவாயிலின் கண்ணே மணியானது நடுங்க, எம் உள்ளமும் அதனால் நடுங்கியது. இரவிலே வானம் வில்லிடும், பகற்காலத்து விண்மீன்கள் எரிந்து கீழே விழும் எட்டுத் திசைகளும் அதிர்ந்திடும். ஆதலான், நமக்கு வரக்கூடிய துன்பமும் ஒன்று உண்டு. அதனை நம் மன்னவனுக்க யாம் சென்று உரைப்போம்" என்று கோப்பெருந்தேவியானவள் எழுந்தாள்.

2. கோப்பெருந்தேவி மன்னன் இருக்குமிடம் வந்த நிலையினை எழுதுக.

கோப்பெருந்தேவி கனவு கண்ட பின்னர், மன்னன் இருக்குமிடம் நோக்கி வருகை புரிந்தாள்.

கண்ணாடி ஏந்தி வந்தனர் சிலர். அணிகலன்களை ஏந்தியவாறு வந்தனர் சிலர். ஒளிவிட்டு விளங்கும் அழகிய கலன்களைத் தாமும் பூண்டவராக வந்தனர் சிலர். புதிய பருத்தி நூலாடையும் பட்டு நூலாடையும் ஏந்தி வந்தனர் சிலர். தொழுவிய வெள்ளிலைச் செப்பினை ஏந்தி வந்தனர் சிலர். வண்ணமும் சுண்ணமும் கத்தூரிக் குழம்பும் ஏந்தி வந்தனர் சிலர். கண்ணி, பிணையல், மாலை, கவரி, அகிற்புகை முதலியன ஏந்தி வந்தனர் சிலர். கூனராயும், குறளராயும், ஊமராயும் கூடிய குற்றவேல் மகளிர் பலரும் அங்ஙனமாக நெருங்கிச் சூழ்ந்து அரசியுடன் வந்தனர். நரைமுடி கலந்த நல்ல கூந்தலையுடைய முதுமகளிர் பலரும் "கடல் சூழ்ந்த இவ்வையகத்தைக் காக்கும் நம் பாண்டியனின் பெருந்தேவி வாழ்க!" என உள்ளன்புடன் வாழ்த்தினர். சேவிக்கும் தோழியரும், அந்தப்புரக் காவல் மகளிரும், அரசமாதேவி அடியெடுத்து



10811A_rev2.indd 116 12/5/2018 3:48:40 PM

வைக்குந்தோறும், அவளைப் புகழ்ந்து போற்றியவாறே உடன் வந்தனர். இவ்வாறு தன் பரிவாரத்துடன் கோப்பெருந்தேவியானவள் சென்று, தன் தீய கனவிலே நிகழ்ந்த நிலையினை யெல்லாம், தன் நாயகனான பாண்டியனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.

குறிப்பு

3. கண்ணகி தன்வரவினை வாயில் காவலர்க்குக் கூறும் தன்மையை எழுதுக.

கோப்பெருந்தேவி பாண்டிய மன்னனிடம் தான் கண்ட கனவைக் கூறிக் கொண்டிருக்கையில் இங்குக் கண்ணகி அரண்மனை வாயிலை அடைந்து, அங்கு நின்ற வாயிற்காவலனை நோக்கி, வாயிற்காவலனே! வாயிற்காவலனே! தனது நல்லறிவு வேர் அற்றுப்போன அறவுணர்வு இல்லாத தீய நெஞ்சத்தால் செங்கோல் முறைமையினின்று தவறிய கொடுங்கோல் மன்னனுடைய வாயிலைக் காக்கும் காவலனே! ஒன்று கேட்பாயாக! பரல் கற்களை உடைய இணையாகிய சிலம்புகளுள் ஒரு சிலம்பினை ஏந்திய கையை உடையவாய்த் தன் கணவரை இழந்த ஒருத்தி, அரண்மனை வாயிலில் முறைவேண்டி வந்து நிற்கின்றாள் என்று கொடுங்கோல் மன்னனுக்குச் சென்று சொல்வாயாக! என்று கூறினாள்.

4. பிடத்தலைப்பீடம் ஏறிய மடக்கொடி - விளக்கம் தருக.

மயிடாசூரன் என்ற அரக்கன் எருமைக்கடாவின் தலையையுடையவன். தன்னுடைய தவ வலிமையினால் பல வரங்களைப் பெற்றவன். பெண்ணால் தனக்கு இறப்பு நேரிடும் என்ற சாபத்தைப் பெற்றவன் இவன் தன் தவ வலிமையினால் தேவர்களைத் துன்புறுத்தினான். தேவர்கள் இவன் துன்பத்தைப் பொறுக்க முடியாமல் உமாதேவியிடம் அடைக்கலம் புகுந்தார்கள். உமாதேவி தன் உருவாகிய துர்க்காதேவியை ஏவி மயிடாசூரனைக் கொல்லுமாறு பணித்தாள். துர்க்கா தேவியும் அவனோடு போரிட்டு அவன் தலையைத் துணித்தாள். அத்தலையைத் தன்காலின் கீழ் இட்டு அதன்மேல் ஏறி நின்று தேவர்களைக் காப்பாற்றினாள். ஆகவே 'பிடர்ந்தலைப்பீடம் ஏறிய மடக்கொடி' எனப்பட்டாள்.

5. 'இறைவன் ஆடல் கண்டருளிய அணங்கு'விளக்கம் தருக.

காளிதேவி நடனமாடுவதி வல்லவள். தனக்கு நிகர் யாருமில்லை என்று அணவம் கொண்டிருந்தாள். இவளது ஆணவத்தைப் போக்கச் சிவபெருமான் காளியின் முன்னால் தோற்றமளித்தார். இவரை நடனத்தில் வெல்ல வேண்டும் என்று நினைத்து தன்னோடு நடனமாட வேண்டினாள். சிவபெருமானும் அவள் விரும்பியவாறு தேவர்களும் காணும்படி

குறிப்பு

நடனமாடினார். முதலில் காளிதேவிக்குச் சமமாக சிவபெருமானால் ஆடமுடியவில்லை. இறுதியில் சிவபெருமான் தனது ஒரு காலை ஊன்றி காலை உயரத்தூக்கி நடனமாடினார். காளியினால் அவ்வாறு நடனமாட முடியாமல் தோல்வி கண்டாள்.

6. அமைச்சர்களின் மனநிலை என்னவாக இருந்தது?

இராமன் அரசன் ஆகிறான் என்பதனால் மகிழ்ச்சி பொங்க அமைச்சர்கள் இருந்தனர். அதே நேரத்தில் தசரதன் ஆட்சிப் பொறுப்பிலிருந்து பிரிகிறான் என்ற துக்கமும் அவர்களிடம் இருந்தது. "இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆ" என இருந்தனர். அரசனுக்கு இதைவிட வேறு உறுதி இல்லை என்றும்,இராமனை விட மன்னராவதற்குச் சிறந்தவர் வேறு ஒருவர் இல்லை என்றும் நினைந்து விதியது வலிமையம் உணர்ந்து இராமன் மன்னராவதற்கு இசைந்தனர்.

7. தசரதன் மன்னர்களுக்கு எவ்வாறு செய்தி சொன்னான்?

தசரதன் எல்லா மன்னர்களுக்கும் கருட இலச்சினை பொறித்த மடல் அனுப்பி வரவழைத்தான். வசிட்டனிடம் முடிபுனைவதற்கு வேண்டிய செய்யுமாறு பணித்தான். அவன் அந்தணர்களோடு தேர்மீது போனான். வந்த மன்னர்களிடம் இராமனுக்கு முடிசூட்டும் செய்தியினை சொன்னான். செய்தி கேள்விப்பட்டதும் மன்னர்கள் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவரவரும் அரசுரிமை பெற்றார்போல் மகிழ்ந்தனர். நல்லது என அறிவித்தார்கள்.

8. இராமனின் சிறப்புகளாக மன்னர்கள், முனிவர்கள் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

தானம், தருமம், தகுதி, ஞானம், நல்லவரைப் பேணும் நன்மை எல்லாமே இராமனிடம் உள்ள பண்புகள். ஆகவே அவனுக்கு உயர்ந்த செல்வம் வந்து பொருந்தும். ஊருணி நிறைதலையும், பயன்தரும் மரம் பழுப்பதையும், மழை பொழிவதையும், வயலெல்லாம் நீர் பெருகுதலையும் யாராவது மறுப்பார்களா? மன்னுயிர்க்க எல்லாம் எவ்வாறு இராமன் அன்புடையவனோ, அவ்வாறே அவையும் அவனிடத்து அன்புடையவை என்று மன்னரெல்லாம் தசரதனிடம் கூறினார்கள்.



10811A_rev2.indd 118 12/5/2018 3:48:40 PM

# கூறு 10

## சீறாப்புராணம்
## ஈத்தங்குலை வரவழைத்த படலம்

குறிப்பு

சுருதியின் முறைவழித் துணைவர் சூழ்தரக்
கருமுகி னிழலொடுங் கருணை பொங்கிட
மருவுமெண் டிசைக்குமான் மதங்க மழ்ந்திட
விருநிலம் புகழ்நபி யிருக்கும் போதினில். 1

காலினிற் கபுசுமோர் கையிற் குந்தமு
மேலிடுஞ் சட்டையும் விசித்த கச்சையுந்
தோலொரு தோளினுந் தூக்கி வந்தவ
னாலநந் நபிதமை யடுத்து நோக்கினான். 2

தரியலர்க் கன்புறுஞ் சார்பி னான்மறைக்
குருநெறி முகம்மதைக் குறித்தெ திர்ந்துநீ
ரிருநிலத் தெவரென வியம்பி னான்பர
ருரநெரிந் திடச்செவி யுழுக்குஞ் சொல்லினால். 3

அச்சமொன் றின்றிநின் றறபி கூறலும்
வச்சிரப் புயமுகம் மதுதம் வாய்திறந்
திச்சகம் புகழ்தனி யிறைவன் றூதியா
னிச்சய மிதுவென நிகழ்த்தி னாரரோ. 4

ஆதிதன் றூதென வறிவ தற்கரும்
பூதலத் தென்மனம் பொருந்தி யன்பொடுஞ்
சாதமுற் றிடப்பெருஞ் சாட்சி யாமெனுங்
கோதறு குறிப்பெவை கூறுவீ ரென்றான். 5

காரணக் கரியுனக் கியையக் காண்கிலென்
னாரணத் துறுங்கலி மாவை யன்பொடும்
பூரண மனத் தொடும் புகல்வை யோவெனச்
சீர்தரு மமுதவாய் திறந்து செப்பினார். 6

அவனியி லெவர்க்குநன் கறிய வென்மனக்
கவரறக் காரணக் கரியுண் டாமெனி
னபியுமை யலதிலை யென்ன நண்பொடும்

குறிப்பு

பவமற நும்வழிப் படுவ னியானென்றான். 7

நிலத்தினில் விண்ணினீ டிசைக்கு ணின்மன
நலத்தது கரியெவை நாட்டு வாயெனக்
குலத்துறு முகம்மது கூறக் கேட்டுநற்
சிலைத்தழும் பிருந்ததோ ளறபி செப்புவான். 8

இருவருக் கெதிர்தர நின்ற வீந்ததின்
விரிதலைக் குலைமலர் வீழ்ந்தி டாதிவண்
வரவழைத் திடுவிரேன் மனமும் வாக்குமொத்
தருமறை மொழிவழி யாவ னியானென்றான். 9

ஈந்தினை நோக்கிநின் றிறைவன் றூதுவர்
வாய்ந்தநின் குலையிவண் வருக வேண்டுமென்
றாய்ந்தநன் மறைதெரி யமுத நன்கனி
யேய்ந்தவர்க் கினைத்திறந் தியம்பி னாரரோ. 10

ஆதிதன் றூதுவ ரறையக் கேட்டலுஞ்
சோதிவெண் குருத்தொடுந் தோன்ற மேலெழுந்
தேதினுஞ் சிதைகிலா திழிந்து மாநில
மீதினில் விரிதலை விளங்கி நின்றதே. 11

விரிதலைத் தருவடி நின்ற மென்குலைப்
பரிவொடும் பயப்பயக் குதித்துப் பாரிடை
யிருவிழி தெரிபவ ரெவர்க்கு மின்புறத்
திருமுகம் மதுமுனஞ் சிறந்து நின்றதே. 12

அந்தர விரிதலைக் கமைந்த பூங்குலை
யிந்தமா நிலத்திடை யிறங்கி யிவ்வுழை
வந்ததிற் புதுமையு மறுத்துண் டோவெனச்
சிந்தையுற் றறபிநந் நபியைச் சிந்தித்தான். 13

படித்தலம் புகழ்நபி பாதம் போற்றிநின்
றடிக்கடிப் புதுமையுற் றறபி யீந்தின
திடத்தினிற் குலைபொருந் திடச்செய் வீரெனத்
திடத்தொடும் பயத்தொடுஞ் செப்பி னானரோ. 14

மழைமுகிற் கவிகையின் வள்ள னன்கெனக்
குழைதரும் விரிதலைக் குலையைப் பார்த்துநின்



10811A_rev2.indd 120 12/5/2018 3:48:41 PM

னுழையினிற் செல்கென வுரைப்ப வோடிமுற்
புழைவழி நுழைந்தது பொருந்தி நின்றதே. 15

மேதையச் சமுமுள விலங்கி னாயதோர்
சாதியன் றீதொரு தருமுன் னாதலும்
போதலும் படைத்தவர் புதிய நாயகன்
றூதுவ ருண்மையென் றடியைச் சூடினான். 16

பாதபங் கயமலர் சிரசிற் பற்றிநின்
றாதியிற் சொலுங்கலி மாவை யன்பொடு
மோதினன் றெளிந்தன னுரிய நாயகன்
றூதுவர்க் கிவனொரு துணைவ னாயினான். 17

ஈத்தங்குலை வரவழைத்த படலம் முற்றிற்று.

## சீறாப்புராணம் ஈத்தங்குலை வரவழைத்த படலம்

நபிகள் நாயக வரலாற்றைக் கூறுவது சீறாப்புராணம் காப்பிய இலக்கணங்கள் அமையப் பெற்றது. அறபு மொழியில் 'சீறத்' என்றால் வாழ்க்கை என்று பொருள். 'சீறத்' என்பது சீறா என்றே உச்சரிக்கப்படும். சீறா என்ற சொல்லே நபிகள் நாயக வரலாற்றைக் குறிக்கும் சொல்லாகக் கருதுவர் முகமதிய மக்கள்.

## உமறுப் புலவர்

சீறாப் புராணத்தை இயற்றியவர் உமறுப்புலவராவார். உமறுப் புலவரின் மூதாதையர் நறுமணப் பொருள்களை வியாபாரம் செய்தவர்கள். அரபு நாட்டு வணிகர்கள் தமிழ் நாட்டிற்கு வந்தவர்கள். அந்தப் பரம்பரையில் தோன்றியவர் செய்கு முகமது அலி என்பவர். இப் பெயர் பின்னர் சேகு முதலியார் என வழங்கப் பெற்றது. இவருடைய புதல்வர் தான் உமறுப்புலவர்.

இவர் சீறாப்புராணத்தை விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், கிசுறத்துக் காண்டம் என மூன்று காண்டங்களாகப் பாடினார். 5028 விருத்தப் பாக்களிலே நபிகள் வரலாறு பேசப்படுகிறது. ஈத்தங்குலை வரவழைத்த படலம் நுபுவ்வத்துக் காண்டத்தில் இடம் பெறுகிறது. பெருங்காப்பியம் பாடிய பெரும்புலவராகத் திகழ்கிறார் உமறுப்புலவர்.

## ஈத்தங்குலை வரவழைத்த படலம்

17 பாடல்களைக் கொண்டது



10811A_rev2.indd 121 12/5/2018 3:48:41 PM

நண்பர்கள் புடைசூழ நபிகள் இருக்கும் போது ஒரு அறபி வந்தான். காலினில் கபுசும், கையில் குந்தமும், உடலில் சட்டையும், அதன் மேல் கட்டிய கச்சையும், ஒரு தோளில் தோற்படையுமாக அவன் கோலம் இருந்தது.

குறிப்பு

அவன் நபிகளைப் பார்த்து இந்நிலத்தில் நீர் யார் எனக் கேட்டான். அன்புறும் சிந்தை கொண்ட நபிகள் அவனைப் பார்த்து இவ் வுலகம் புகழ்கிற 'இறைவனுடைய தூதன்' நான் என்று உரைத்தார்.

அவன், நீர் இறைத்தூதர் என்பதற்கு எதைச் சாட்சியாகக் காட்டுவீர் என்றான். நபிகளோ நான் சாட்சி காட்டினால் நீ கலமாவை அன்போடு ஓதுவாயோ என்று திரும்பக் கேட்டார்.

அவனும் யாவரும் அறியுமாறு நீங்கள் சான்று காட்டினால் என் மனக் குற்றம் நீங்கி 'நபி உமை அல்லது இல்லை' என 'நும் வழிப்படுவன்' என மொழிந்தான். மேலும் இங்கிருக்கிற ஈச்ச மரத்தின் குலை வரவழையும். குலை வருமானால் என் மனம், வாக்கு ஒத்து யான் அருமறை வழிப்படுவன் என்றான்.

நபிகள் அவர்கள் ஈந்தினை நோக்கி நின்று உன் குலை இங்கு வரவேண்டும் என அமுதமொழி புகன்றார். அவ்வளவில் ஈந்தானது வெண்குருத்து மேலே தோன்ற யாண்டும் குலை பரப்பி நின்றது.

"இரு விழி தெரிபவர் எவர்க்கும் இன்புற"

நின்றது என்று பாடுகிறார் உமறுப் புலவர். அறபி வியந்து வியந்து வியந்து பாராட்டினான். நபிகளை வணங்கினான். கலிமாவை ஓதினான். நபிகள் நாயகத்திற்கு ஒரு துணைவன் ஆயினான்.

இறைத் தூதர்கள் தம் அருட்பெருங்கருணையினால் அதிசயங்கள் நிகழ்த்துவர். அதன் பயனாகத் தொண்டர்களைப் பெருக்கி இறைப் பணியில் ஈடுபடுத்துவர்.

அம் முறையில் இங்கு நபிகள் நாயகம் ஈத்தங்குலை வரவழைத்து அறபி ஒருவனின் அறியாமையை அகற்றி இறைவன் பால் அன்பு கொள்ளச் செய்தார்.

## வினா விடைகள்

1. உமறுப் புலவர் – ஒரு சிறு குறிப்பு வரைக.

சீறாப் புராணத்தை இயற்றியவர் உமறுப் புலவர். உமறுப் புலவரின் மூதாதையர் நறுமணப் பொருள்களை வியாபாரம் செய்தவர்கள். அரபு நாட்டு வணிகர்கள் தமிழ் நாட்டிற்கு வந்தவர்கள். அந்தப் பரம்பரையில் தோன்றியவர் செய்கு முகமது அலி என்பவர். இப்பெயர் பின்னர் சேகு

முதலியார் என வழங்கப் பெற்றது. இவருடைய புதல்வர் தான் உமறுப் புலவர். இவர் சீறாப்புராணத்தை விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், கிசுறத்துக் காண்டம் என மூன்று காண்டங்களாகப. பாடினார். 5028 விருத்தப் பாசிகளிலே நபிகள் வரலாறு பேசப்படுகிறது. பெருங்காப்பியம் பாடிய பெரும் புலவராகத் திகழ்கிறார் உமறுப் புலவர்.

குறிப்பு

2. நபிகள் நாயகம் அறபியை ஆட்கொண்ட விதத்தை எழுதுக.

நண்பர்கள் புடைசூடி நபிகள் இருக்கும்போது ஒரு அறபி வந்தான். காலினில் கபுசும் கையில் குந்தமும் உடலில் சட்டையும், அதன் மேல் கட்டிய கச்சையும், ஒரு தோளில் தோற்படையுமாக அவன் கோலம் இருந்தது. அவன் நபிகளைப் பார்த்து இந்நிலத்தில் நீர் யார் எனப் கேட்டான். அன்புறும் சிந்தை கொண்ட நபிகள் அவனைப் பார்த்து 'இறைவனுடைய தூதன்' நான் என்று உரைத்தார். அவன், நீர் இறைத்தார் என்பதற்கு எதைச் சாட்சியாகக் காட்டுவீர் என்றான். நபிகளோ, நான் சாட்சி காட்டினால் நீ கலமாலை அன்போடு ஓதுவாயா என்று திரும்பக் கேட்டார். அவனும் யாவரும் அறியுமாறு சான்று காட்டினால் என் மனக் குற்றம் நீங்கி 'நபி உமை அல்லது இல்லை' என 'நும் வழிப்படுவன்' என மொழிந்தான். மேலும் இங்கிருக்கிற ஈச்ச மரத்தின் குலை வரவழையும். குலை வருமானால் என் மனம், வாக்கு ஒத்து யான் அருமறை வழிபடுவன் என்றான். நபிகள் அவர்கள் ஈத்தினை நோக்கி நின்று உன் குலை இங்கு வரவேண்டும் என அமுதமொழி புகன்றார். உடனே ஈத்தானது வெண்குருத்து மேலே தோன்ற குலை பரப்பி நின்றது. அறபி வியந்து பாராட்டினான். நபிகளை நாயகத்திற்கு ஒரு துணைவன் ஆயினான். இறைத் தூதர்கள் தம் அருட்பெருங்கருணையினால் அதிசயங்கள் நிகழ்த்துவர். அதன் பயனாகத் தொண்டர்களைப் பெருக்கி இறைப் பணியில் ஈடுபடுத்துவர். அதே முறையில் இங்கு நபிகள் நாயகம் ஈத்தங்குலை வரவழைத்து அறபி ஒருவனின் அறியாமையை அகற்றி இறைவன் பால் அன்பு கொள்ளச் செய்தார்.



10811A_rev2.indd 123 12/5/2018 3:48:41 PM

குறிப்பு

## கூறு 11

# தேம்பாவணி
# முதற்காண்டம்
# காட்சிப் படலம்

### வானவர் இறைவனை வணங்க ஆயர்களை அழைத்தல்

இன்ன வாயில் இன்ன தன்மை இன்ன யாவையும் ஆகையில்,
பொன்ன நாடு துன்னம் உம்பர், பொன்னுருக்கொடு ஆங்குபோய்,
மின்னல் நேரும் அன்னை ஈன்ற வேத நாதனைத் தொழ,
உன்னலாத கோவல் இன்பம் உண்ண உற்று அழைத்தனர். 1

### ஆயர் இறைவனடி பணிந்து மகிழ்தல்

கொழுந்துறும் குளிர்ந்தமுல்லை கொண்டகோவல் கூட்டமும்,
எழுந்துறும் குடத்தியாரும் ஏகி, ஆய காட்சியால்,
விழுந்துறும் களிப்புவிஞ்சி, வேதநாதன் மேற்பதம்
தொழுந்தொறும் தொழுந்தொறும் துளங்குகின்ற தோற்றமே. 2

### இறைவனைப் போற்றத் தொடங்குதல்

பஞ்(ச) அரங்கில் இன்பு அரங்கு பான்மையால், அடைவரத்து
அஞ்சலம் குழித்து உவந்து அமிழ்ந்து, அமிழ்ந்(து) உளந்தனில்
விஞ்ச இன்பம், நெஞ்சு அடங்குஇல், மேவல் ஆர்ந்ததம்முயிர்
உஞ்சல் ஆடி, வாயில் வாயிலுற்று உரைத்த லுற்றனர் 3

# கூறு 12

## உள்ளமுருகி இறைவனைப் போற்றுதல்

குறிப்பு

எண்ணுளே அடங்கலின்றி ஏந்த மாட்சி பூண்டு, வான்
விண்ணுளே பொலிந்து வந்த விண்ணவர்க்கு வேந்தனே
புண்ணுளே மருந்து நீவிப்போன ஆட்டை மீட்கவோ,
மண்ணுளே எழுந்துவந்து மண்ணன் என்று உதித்தனை? 1
ஒண்தலங்கள் அண்டஉம்ப ரும்தொழும் பராபரா
விண்தலம் கலந்துஇலங்க வெண்களங்கன் ஒப்பெனா,
மண்தலங்கள் எங்கும் பாரும் வாழ, வீரவெண் குடை
கொண்டு, அலங்கல் கொண்டதேறல் கொண்டஅன்பு கொற்றவா

## அன்னையையும் சூசை முனிவனையும் வாழ்த்துதல்

இரவியேந்த கஞ்சம் ஈன்ற இலகுமுத்தம் ஏய்த்து, எல்
புரவுஇல், வேய்ந்த சேயைஈன்ற பொருவில் அன்னை வாழுதி
சுருதிவேய்ந்த மாட்சிபூண்ட துணைவனான மாதவத்து
உருவில் வேய்ந்த வேந்த வாழி என்று உறுதிசொற்றினார் 2



10811A_rev2.indd 125 12/5/2018 3:48:41 PM

# கூறு 13

### கன்னித்தாயும் சூசையும் ஆயர்க்கு விடைகொடுத்தல்

குறிப்பு

கன்னியாய தாயும்ஓங்கு காவலனும் அன்புற,
இன்இறாலினம் கனிந்த இன்பஅம்சொல் ஓதலால்,
உன்னம் மேவும் ஈர அன்பு முன்னமுள உறாமையால்
மின்ன(ல்)மார் தூவலொத்த வீழும்நாட்டம் மாரியே. 7

### சாந்தி என்னும் இடைச்சி மரியாளிடம் பேசத் தொடங்குதல்

பாடல் எண் (ஒவ்வொரு பாடலின் முதல்வரி)
ஏந்தி, ஓங்கு உளத்து இன்ப நெடுங்கடல்
நீந்தி நீந்தி, நிலைக்கரை காண்கிலா,
காந்தி வேய்ந்தனைக் கனிந்து ஓதுவாள்
சாந்தி நாமம் தரித்த குடத்தியே. 8

### சாந்தியின் வினாக்கள்

ஆவ தேமுனர் ஆயது போல் அறிந்து,
ஈவ தேநசை பின்ற அளித்திடும்
கோவ தேமிசை ஆள்தனிக் கோலினான்,
நோவ தேஇனி தென்றுஉதித் தான்கொலோ? 9

கொல்லும் வேலொடும் கூர்நெடும் வாளொடும்
வில்லும் வாளியும் ஆழியும் வில்செய,
ஒல்லும் ஆழி உருட்டிடக் கோன்துணை
செல்லும் வீரவெஞ் சேனைஇலா யதுஏன்? 10



10811A_rev2.indd 126 12/5/2018 3:48:41 PM

# கூறு 14

குறிப்பு

## தாய்மரியின் விடை

என்ற வாசகம், எந்தை மனுக்குலம்
சென்றவாய் அருள் காட்டிய சீர் உணர்வு
ஒன்றலாகி, உருகிய தாய், புனல்
மின்தவா விழி தூவி விளம்பினாள். 11

அம்பினால் அபையர் செயும் அத்துணை
நம்பினார், தனி நற்செய்கை ஈடிலார்
கொம்பில் ஏறும், இடைதுவளும் கொடி
எம்பிரான் வலிக்கு இத்துணை வேண்டுமோ? 12

வேண்டும் ஓர்வினை வேண்டுமென்றால், முடித்து
ஆண்டும் ஓர்தனிக் கோல்அரசான், எரி
தூண்டும் ஓர்சினம் தோன்றுழி, அப்பகை
தாண்டும் ஓர்வலி தாங்குவர் யாவரோ? 13

## தேம்பாவணி

கலைகளுள் சிறந்ததாகவும் காலத்தால் அழிக்க முடியாததாகவும் விளங்குவது இலக்கியக் கலை. இலக்கிய வடிவங்களுள் பழைமையானது, இனிமையானது கவிதை வடிவம். கவிதை இலக்கியங்களில் சிறப்புமிக்கது காப்பிய வடிவம். நீண்ட தொடர்நிலைச் செய்யுள்களாக அமையும் காப்பியங்கள், கற்போர் நெஞ்சில் நிலைத்து நிற்கும் ஆற்றல் பெற்றன. இத்தகைய சிறந்த காப்பியங்கள் பல தமிழில் உள்ளன. அவற்றுள், கிறித்துவ சமயம் சார்ந்த செய்திகளைக் கூறும் தேம்பாவணி, தமிழிலக்கிய வரலாற்றில் தனித்து விளங்குகிறது. அக்காப்பியத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்தி, அக்காப்பியத்தின் சுவையை ஓரளவு நுகரச் செய்வதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

தேம்பாவணி என்னும் தமிழ்க் காப்பியத்தைப் படைத்து வழங்கியவர் வீரமாமுனிவர். இவர் இத்தாலிய நாட்டைச் சேர்ந்தவர். கிறித்தவ சமயத் தொண்டுக்காகத் தமிழகம் வந்து, தமிழின் சிறப்பினால் ஈர்க்கப்பட்டு, தமிழ்த் தொண்டராகவும் தமிழறிஞராகவும் மாறிவிட்ட அவரது வாழ்வையும் பணியையும் பற்றிக் காண்போம்.

வீரமாமுனிவர் என்பது அவரது இயற்பெயர் அல்ல. கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்பதே அவரது இயற்பெயர். கிறித்துவ சமயப் பணி



10811A_rev2.indd 127 12/5/2018 3:48:41 PM

குறிப்பு

செய்வதற்காக, அவர் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். கி.பி. 1710இல் இந்தியாவுக்கு வந்தார். கோவா, கொச்சி, அம்பலக்காடு வழியாக, மதுரை மாவட்டத்தில் உள்ள காமநாயக்கன் பட்டியை வந்தடைந்தார். தமது சமயப்பணி தமிழ்நாட்டில் வெற்றி பெற வேண்டுமெனில், தமக்குத் தமிழறிவு மிகவும் இன்றியமையாதது என்று நன்குணர்ந்தார். மேலும் தமிழகம் வந்து தமிழராகவே மாறி, தம் பெயரையும் தத்துவ போதகர் என மாற்றிக் கொண்டு, தமிழ்ப்பணியும் புரிந்த இராபர்ட்-டி-நொபிலி என்னும் மேலைநாட்டு இறையடியாரைப் பற்றி இவர் கேள்விப்பட்டார். அவர்போலவே, தாமும் இறைப்பணியைச் செய்திட விரும்பினார். அதனால், இவரும் தமது பெயரைத் தைரியநாதர் என்று மாற்றிக் கொண்டார். பின்னாளில் மக்கள் இவரை வீரமாமுனிவர் என்றே அழைத்தனர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தார்தாம் இப்பெயரை இருவருக்குச் சூட்டினர் என்பர் சிலர்.

## தோற்ற மாற்றம்

வீரமாமுனிவர் பெயர் மாற்றம் செய்து கொண்டதோடு, இந்நாட்டில் இருந்த சமயத் தொண்டர்களைப் போலவே, தாமும் நெற்றியில் சந்தனம் பூசி, காதில் முத்துக் கடுக்கன் அணிந்து, காவி அங்கி உடுத்தி, புலித்தோல் பதிக்கப்பட்ட இருக்கையில் அமர்ந்து கொண்டார். இப்படி, தோற்ற மாற்றம் செய்துகொண்டது மட்டுமல்ல, காய்கறி உணவை மட்டுமே உண்டு, சைவ உணவினராகவும் மாறிவிட்டார். தமிழின் மீது இவருடைய பற்றை என்னென்பது! தோற்றத்தில் மட்டுமின்றி, உணவு முறையிலும் மாறியது மேலும் சிறப்பானது.

## சமயப் பணி

இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குருக்கள்பட்டி மற்றும் ஏலாக்குறிச்சி, கோனான்குப்பம் முதலிய பல இடங்களில் சமயத் தொண்டு புரிந்தார். தாம் சமயப்பணி புரிந்த இடங்களிலேயே, பல்வேறு தமிழ் இலக்கிய இலக்கண நூல்களையும் அகராதிகளையும் எழுதி வெளியிட்டார். தமிழ்நாட்டுக்க வந்து தமிழராகவே வாழ்ந்தார் வீரமாமுனிவர். 1747ஆம ஆண்டு தமிழ்நாட்டிலேயே உயிர்நீத்தார். உலகில் வாழ்ந்த சமய மற்றும மொழித்தொண்டர்கள் வரிசையிலே இவ்வாறு தமக்கென ஓர் அழியாத, தனித்துவமான இடத்தைத் தேடிக் கொண்டார் பெஸ்கி எனப்பட்ட விரமாமுனிவர்.

## வீரமாமுனிவரது படைப்புகள்

தத்தம் தாய்மொழியிலே புலவர்கள் பல்வேறு இலக்கியங்களைப் படைப்பது பொதுவழக்கு. தமது தாய்மொழி யல்லாத பிறமொழிகளை அறிஞர்கள் கற்று

குறிப்பு

அதில் அழ்ந்த புலமை பெறுவதும் உலகில் காணக்கூடியதே. எனினும் ஒருவருக்குத் தம் தாய்மொழி யல்லாத பிறமொழியில் இலக்கியம், இலக்கணம், அகராதி முதலிய அனைத்துத் துறைகளிலும் அரிய நூல்கள் பல படைக்கம் அளவுக்கு ஆற்றலும் அரும புலமையும் அடைவது மிகமிக அரிய செயலாகும். செயற்கரிய அச்செயலைச் செய்து உலக வரலாற்றிலேயே தனித்து நிற்பவருள் ஒருவராக வீரமாமுனிவர் திகழ்கிறார்.

## நூல்கள்

இத்தாலி நாட்டில் பிறந்து, தமது முப்பதாம் வயதிலேயே தமிழகம் வந்த அவர், தமிழில் சிற்றிலக்கியங்கள், இலக்கணம், உரைநடை, அகராதி, இசைப்பாடல்கள் முதலிய பல துறைகளில் நூல்கள் படைத்தார். அதோடு மட்டுமல்லாமல் இலக்கியப் படைப்புகளுள் மிக அரியதாகக் கருதப்படும் தேம்பாவணி எனப்படும் காப்பியம் ஒன்றையும் இயற்றி வெற்றி கண்டுள்ளார். மேலும் அவர், திருக்காவலூர்க் கலம்பகம், அடைக்கல மாலை, அன்னை அழுங்கல் அந்தாதி, கித்தேரியம்மாள் அம்மானை முதலிய சிற்றிலக்கியங்களையும், சதுரகராதி எனப்படும் அகராதியையும், தொன்னூல் விளக்கம் என்ற இலக்கண நூலையும் எழுதியுள்ளார். இவற்றுள் தொன்னூல் விளக்கம், குட்டித் தொல்காப்பியம் என அழைக்கப்படும் பெருமையுடையது. இப்படிப் பல்வேறு வகையான நூல்களைப் படைத்த ஒரு புலவரைக் காண்பது, தமிழில் மட்டுமன்று; உலகின் பிற மொழிகளிலும் கூட மிக அரிய ஒன்றாகும்.

## காப்பிய அறிமுகம்

இனி, தேம்பாவணி எனப்படும் இக்காபியத்தின் சிறப்புகளையும் பண்புகளையும் காண்போம். இன்னொரு கிறித்தவக் காப்பியமான இரட்சணிய யாத்திரிகத்தைப் போலவே, இத் தமிழ்க் காப்பியமும் பிறமொழிக் காப்பியம் ஒன்றைத் தழுவி, தமிழ் நெறிக்கேற்ப எழுதப்பட்டதாகும். ஸ்பானிய நாட்டு ஆகிருத நகரில் வாழ்ந்த ஆகிர்த மரியாள் என்னும் கன்னி இறைநகரம் (ஊவைல ழுக புழன) என்னும் நூலை, அன்னை மரியின் ஆணைப்படி எழுதியதாகக் கூறியுள்ளார். அன்னை மரியினால் தமக்கு உரைக்கப்பட்ட சூசையப்பரின் வரலாற்றையே தாம் நூலாக எழுதியுள்ளதாக அவர் கூறுகிறார். அந்நூலைத் தழுவி, தமிழ் மரபுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கம் ஏற்ப வீரமாமுனிவர் தேம்பாவணியை இயற்றியிருக்கிறார். மேலைநாட்டு நூலின் மொழிபெயர்ப்பு எனத் தோன்றாத வகையில், இக்காப்பியத்தை வீரமாமுனிவர் உருவாக்கியுள்ளார். இங்க வந்து, தன்னைத் தமிழராக ஆக்கிக் கொண்டு ஒரு காப்பியத்தைத் தழுவி

எழுதுவது என்றால், அதுவும் தமிழ்ப் பண்பாட்டிற்கு ஏற்ப என்பது வியப்பைத் தருகிறதல்லவா? காப்பியத்தின் சிறப்புகளைத் தொடர்ந்து காண்போமா?

குறிப்பு

## காப்பியக் கருவும் கதையும்

இத்தமிழ்க் காப்பியத்தின் கதைத் தலைவராக விளங்குபவர் இயேசு பெருமானின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையே ஆவார். வளன் என்றும் குறிக்கப்படும் இவரைப் பற்றிய வரலாற்றுக் குறிப்ப விவிலியத் திருமறையில் ஐந்தே இடங்களில் சிற்சில வரிகளிலேயே இடம் பெறுகிறது. எனினும், ஆகிர்த் மரியாளின் மூலநூலைத் தழுவி, வீரமாமுனிவர் சூசையின் வரலாற்றை விரிவான காப்பியமாக வடித்துள்ளார்.

## காப்பியத் தொடக்கம்

சூசை எனப்படும் வளனார் பிறந்த நாடான யூதேயா நாட்டு வளமும், அதன் தலைநகராகிய எருசலேம் நகரச் சிறப்பும் கூறிக் காப்பியத்தைத் தொடங்குகிறர் ஆசிரியர். பின்னர் சூசையின் முன்னோரில் சிறந்த தாவீது என்னும் பேரரசனின் வரலாற்றைக் கூறுகிறார். சூசை பன்னிரு வயதிலேயே துறவு மேற்கொள்ளத் துணிவதும், பின்னர் இறைவனின் ஆணைப்படி நாடு திருமபுவதும் முதலிய பல செய்திகள் கூறப்படுகின்றன.

## கதைச் சுருக்கம்

கடவுளின் திருவுள்ளப்படி சூசைக்கும் மரிக்கும் திருமணம் நிகழ்கிறது. அவர்கள் இல்லற வாழ்வில் இணைக்கப்பட்டாலும் துறவு நெறியிலேயே வாழ்கின்றனர். இறையாற்றலால் மனித உறவின்றி அன்னை மரியிடம் பிறக்கும் தெய்வக் குமரனாம் இயேசுவை அவர்கள் வளர்த்து வருகின்றனர். வானவரின் கட்டளைப்படி செயல்படும் அவர்கள், அக்கட்டளையால் அரசன் ஏரோதன், திருக்குழந்தைக்குச் செய்ய இருந்த துன்பத்தினின்று நீங்க, எகித்து (எகித்து = எகிப்து நாடு) நாடு செல்கின்றனர். அந்நாட்டுக்கு வானவர்களின் துணையுடன் செல்லும் இத்திருக்குடும்பத்தினர் பயணம் பற்றியும், வானவர்கள் இவர்களுக்கு எடுத்துரைத்த விவிலியக் கதைகள் பற்றியும் காப்பியம் கூறுகிறது. ஏரோதன் ஆட்சியின் கொடுமைகள் சித்திரிக்கப்படுகின்றன. இவ்வரசன் இறந்தபிறகு, இவர்கள் தாய் நாடு திரும்புகின்றனர். திருமறை பல நாடுகளிலும் வளரும் பாங்கு விளக்கப்படுகிறது. திருமகன் இயேசு குழந்தையாகவே பல அருஞ்செயல்கள் புரிவதும் கூறப்படுகின்றது. பின்னர் சூசை நோயால் துன்பம் அடைந்து இறந்து, புண்ணிய அன்மாக்களுக்குத் திருமகனின் தூதராக செல்கிறார். இறைமகன் இயேசுவும் திருப்பாடுகளை அடைந்து, இறந்து



10811A_rev2.indd 130 12/5/2018 3:48:41 PM

உயிர் பெற்றபின், சூசையும் மீண்டும உயிர்பெற்று எழுகிறார். அவருக்க விண்ணுலகிலும் மண்ணுலகிலும் திருமுடி சூட்டப்பெறுகிறது. இவ்வாறு வளனார் பெருமையையும் வரலாற்றையும் கூறிக் காப்பியம் நிறைவடைகிறது.

குறிப்பு

## காப்பிய அமைப்பு

தேம்பாவணிக் காப்பியம் பாயிரம் எனப்படும் முகவுரையும், படலங்கள் எனப்படும் முப்பாத்தாறு சிறு பிரிவுகளும் கொண்டு விளங்குகிறது. இந்த முப்பத்தாறு படலங்களையும் மூன்று காண்டங்களாகப் பிரித்து வெளியிட்டுள்ளனர். தமிழ்க் காப்பியங்களின் அமைப்புக்கும் மரபுக்கும் ஏற்ப, பாயிரப் பகுதியில் நூல் எழுதப்பட்ட வரலாறு கூறப்படுகிறது. அதில் அவையடக்கமாக 'கடலையே நக்கிக் குடிக்க முற்பட்ட ஒரு பூனையைப் போல, ஊமையன் போன்ற நானும் சொல்லுவதற்க அரிய வளனாரின வரலாற்றை வடிக்க முற்பட்டேன்' எனக் கூறுகிறார். உவமையின் அழகை எண்ணிப் பாருங்கள். எத்துணைத் தன்னடக்கம்! பின்னர் காப்பிய மரபுப்படி நாட்டு வளம், நகர் வளம் முதலியன நன்கு வருணிக்கப்படுகின்றன.

## மூவர் பெருமை

காப்பியத்திலுள்ள முப்பத்தாறு படலங்களிலும் காப்பியத் தலைவனாகிய சூசை, அவரது துணைவியாகிய மரியாள், அவர்களால் வளர்க்கப்படும் தெய்வீகத் திருக்குழந்தையாகிய இயேசு ஆகிய மூவரது பேராற்றலும் பெருமைகளும் நன்கு விரித்துரைக்கப்படுகின்றன.

## விவியக் கதைகளும் செய்திகளும்

விவிலியத் திருமறையில் பழைய ஏற்பாடு எனும் முற்பகுதியில் இடம்பெறும் பல கதைகள், வானவர்களின் வாய்மொழியாகக் கூறப்படுகின்றன. அவ்வாறே புதிய ஏற்பாடு எனும் விவிலியப் பிற்பகுதியில் இடம் பெறும் அரிய செய்திகளும் வரலாறுகளும் காப்பியக் கதையின் ஊடாகவே எடுத்துரைக்கப்படுகின்றன.

## தமிழ் மரபும் மொழிநடையும்

தமிழ் மரபுக்கேற்ற உவமைகளும் மரபுத் தொடர்களும் மட்டுமன்றி, பழங்கதைகளும் கூட ஆங்காங்கே பயன்படுத்தப்படுகின்றன. மேலை நாட்டவர் ஒருவர் படைத்த காப்பியம் எனச் சற்றும் நினைக்கத் தோன்றாதவாறு, மிக உயர்ந்த மொழி நடையும், இலக்கியத் திறன்களும் காப்பியம் முழுவதும் வெளிப்படுகின்றன.

குறிப்பு

## காப்பியத்தின் மூல நூல்கள்

இக்காப்பியத்தின் மூலநூல் ஆகிர்த மரியாள் என்பார் எழுதிய இறைநகரம் என்ற நூலே என்பது முன்னரே சுட்டப்பட்டது. எனினும், விவிலியத் திருமறை (டீடைடந)யும் இதற்கு முதல் நூல் என்பதை நாம் மறக்கலாகாது. எல்லாக் கிறித்தவ இலக்கியங்களுக்கும் விவிலியமே முதல் நூலாக அமைகிறது. தேம்பாவணிக்கும், விவிலியமே முதல் நூல் எனலாம். தேம்பாவணியில் விரித்துரைக்கப்படும் சூசையின் வரலாறு, விவிலியத்தில் ஐந்தே இடங்களில் மிகச் சில வரிகளிலேயே கூறப்படுவதால், ஆகிர்த மரியாளின் நூலைத் தழுவி ஆசிரியர் காப்பியம் அமைக்கிறார். எனினும் விவிலியத்தின் இருபிரிவுகளிலும் கூறப்படும் ஏராளமான கதைகளையும் வரலாறுகளையும் ஆசிரியர் நூல் முழுவதும் பலவகைகளிலும் எடுத்துரைப்பதால், இக்காப்பியம் விவிலியத் திருமறையின் சாரமாகவே பல இடங்களில் காணக் கிடைக்கிறது. ஆகவே விவிலியமும். இறைநகரம் என்ற நூலும் ஆகிய இரண்டுமே, இக்காப்பியத்தின் மூல நூல்கள் எனக் கருதத்தக்கன.

## காப்பியத்தின் தனிச்சிறப்புகள்

தமிழில் அமைந்த காப்பியங்களுள், ஒவ்வொன்றுக்கும் ஒரு சில தனித்தன்மைகள் உள்ளன. அவ்வகையில், தேம்பாவணிக்குரிய தனிச் சிறப்புகளாக, பலவற்றைச் சுட்டலாம். சிலவற்றை மட்டும் இங்குக் காண்போம்.

## ஆசிரியரின் தனித்தன்மை

தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்டது எனும் பெருமை தேம்பாவணிக்கே உண்டு. அதுவும் சமயப் பணி புரிவதற்காகத் தமது முப்பதாம் வயதில் இங்கு வந்த முனிவர் ஒருவரால் எழுதப்பட்ட காப்பியம் என்பது வியப்பூட்டும் செய்தியாகும். மேலும் பன்மொழிப் புலமை வாய்ந்த ஒருவரால் படைக்கப்பட்ட காப்பியம் இதுவாகும். வீரமாமுனிவர், இத்தாலியம், இலத்தீன், போர்த்துகீசியம் முதலிய மேலைநாட்டு மொழிகளிலும் தமிழ், வடமொழி, தெலுங்க, மலையாளம் போன்ற கீழை நாட்டு மொழிகளிலும் புலமை பெற்றவர். மேலும் வீரமாமுனிவரைப் போல, வேறெந்தக் காப்பியப் புலவரும் சிற்றிலக்கியம், அகராதி, இலக்கணம், உரைநடை பனப் பிற இலக்கிய வகைகளில் நூல்கள் படைத்தாரல்லர்.

## தமிழ் மரபு



குறிப்பு

தேம்பாவணி ஆசிரியர், வெளிநாட்டவரே ஆயினும், காப்பியக் கதைத் தலைவர் சூசை வாழ்ந்ததும் தமிழ் மண்ணில் இல்லை. எனினும், காப்பியம் முழுக்கத் தமிழ் மணம் கமழ்வதாக, தமிழ்ப் பண்பாட்டில் தோய்ந்ததாகவே படைக்கப் பெற்றுள்ளமைக்குப் பல சான்றுகள் கூறலாம். பிற தமிழ்க் காப்பியங்களைப் போலவே, சீரிய உலகம் மூன்றும் என மங்கலச் சொற்களைப் பெய்தே, தமது தேம்பாவணிக் காப்பியத்தைத் தொடங்குகிறார் ஆசிரியர். இறைவனை வணங்க முற்படும்போது, மேனாடுகளில் வழங்கும் கிறித்தவ மரபுகளைச் சாராது, தமிழ் மரபையே சார்ந்து, இறைவனது பாதங்களையே முதலில் வணங்குவதையும், இறைவனது பாதங்களை மலராகக் காண்பதையும் இங்குக் காண்கிறோம். இறைவனுக்கு வாகனங்களை உரிமை செய்து பாடுவன தமிழகச் சமயங்கள். அத்துடன், இறைவனுக்குரிய கொடிகளாகச் சிலவற்றைக் குறிப்பதும் இங்குள்ள சமய மரபு. இதனைப் பின்பற்றி வீரமாமுனிவரும் திருமகன் இயேசுவை மேக வாகனத்தில் வருபவராகவும், அவரது முன்னோரான தாவீது அரசனைச் சிங்கக் கொடியோன் என்றும் பாடுகிறார்.

மேலும் இறைவனது திருமேனிக்கு வண்ணம் (நிறம்) குறித்துப் பாடுவது, இறைவனைத் தரையில் தலைபட வணங்குவது, கை கூப்பி வணங்குவது, மலர்கள் தூவி வழிபாடு செய்வது, பல்வகை வளக்குகளை ஆலயத்தில் ஏற்றுவது, தேர்த்திருவிழா காண்பது முதலிய பல தமிழ்ச் சமய மரபுகளைத் தம் காப்பியத்தில் வீரமாமுனிவர் இணைத்துள்ளதைக் காண்கிறோம். ஓரிரு இடங்களில் தாம் கூறவரும் செய்திகளுக்கு உவமையாகத் தமிழ்நாட்டுப் புராணச் செய்திகளையும் பயன்படுத்தியுள்ளார். இவ்வாறு தமிழ் மரபுக்கேற்ப, தம் காப்பியத்தைக் கவிஞர் அமைத்துள்ளமை புலனாகிறது.

## வாழ்வியற் கோட்பாடுகள்

இக்காப்பியத்தின் மற்றொரு சிறப்பு, இது சூசையப்பரின் வரலாற்றைக் கதையாகக் கூறும் நோக்கத்தோடு அமையாது, வரலாற்றின் ஊடே பல அரிய வாழ்வியற் கோட்பாடுகளை வெளிப்படுத்துவதாகும். சான்றாக, அறத்தின் மாட்சியும், அறநெறி செல்வோர் தம் பெருமைகளும் காப்பியம் எங்கணும் மிகவும் வலியுறுத்திக் கூறப்படுகின்றன. அறநெறி வாழ்வதற்குத் தேவையான பண்பகளாகிய ஊக்கமுடைமை, தவம், தியானம், ஞானம், இரக்கம் போன்றவையும் நன்கு வலியுறுத்தப்படுகின்றன. இயேசு பெருமானின் தியாக வாழ்வை முன்னிறுத்திப் பல உண்மைகள் விவரிக்கப்படுகின்றன. திருக்குடும்பத்தார் மூவரும் உலக மக்களின் மீட்புக்காகவும் நலத்துக்காகவும்



10811A_rev2.indd 133 12/5/2018 3:48:42 PM

குறிப்பு

வறுமை வாழ்வையும் துறவு நெறியையும் மேற்கொண்ட தன்மை எடுத்தோதப்படுகிறது. காம உணர்ச்சிகளின் கேடுகள், புலனடக்கத்தின் உயர்வு, உண்மைத் துறவுக்கும் பொய்த் துறவுக்கும் உள்ள வேறுபாடு, தாழ்மை, அன்புடைமை, புகழுடைமை, கல்விச் சிறப்பு,ஈகைச் சிறப்பு, கற்பின் மாண்பு முதலிய மிக உயரிய கோட்பாடுகள் காப்பியம் எங்கணும் பல்வேறு வகைகளில் கதைகளாக, கருத்துகளாக, உரையாடல்களாக, உவமைகளாக வெளிப்படுத்தப்படுவது இக்காப்பியத்தின் தனிச் சிறப்பாகும்.

## முதற்காண்டம்
## காட்சிப் படலம்

இதில் இறைவனை வணங்க ஆயர்களை அழைத்தல், ஆயர் இறைவனைப் போற்றல், அன்னையையும் சூசையையும் வாழ்த்துதல், சாந்தியின் வினாக்களும் மரியன்னையின் விடையும், சாந்தி தான் கேட்ட வேத உரையைக் கூறுதலும் அதற்கு மரியாள் விளக்கமும், இறைத்தூதன் மக்களுக்காகத் துன்பம் உறுதலும் உயிர் விடுதலும், இறைவனைச் சாந்தி போற்றலும் ஆயர் திருக் குழந்தையைப் பணிதலும் ஆகிய காட்சிகள் இடம் பெறுகின்றன.

### கன்னித்தாயும் சூசையும் இறைவனை வணங்க ஆயர்களை அழைத்தல்

வாசல் இத்தன்மையது அதன் இயல்பு இத்தகையது எல்லாம் இத்தன்மையான என விளங்கும் பொன்போன்ற நாடு மேலுலகம். அங்கு பொன்னுருக் கொண்டு போய் மின்னல் போன்ற அன்னை ஈன்ற மகனை – வேத நாதனைத் தொழுவதற்கு நினையாத ஆயர்களே வாருங்கள் இன்பம் பெறலாம் வாருங்கள் என அழைத்தனர்.

### ஆயர் பணிந்து மகிழ்தல்

முல்லைநில வாழுநராகிய ஆயர்கள், ஆயமகளிருடன் எழுந்து சென்று வேதநாதனைக் கண்ட காட்சியால் மிக மிக மகிழ்ந்தவர்களாகி அவர்கள் வணங்கும்போது எல்லாம் அவர்கள் உள்ளம் பூரிப்பு அடைய அவர்கள் தோற்றம் ஒளிமயமானது.

### இறைவனைப் போற்றுதல் (3, 4, 5)

இறைவனைக் கண்டபோதில் இன்பம் பெற்ற தன்மையால் உளத்தில் உவகை ஊற்றெடுக்கத் தம் உயிரெல்லாம் தளிர்ப்ப ஆடி, வந்து வந்து பார்த்து மகிழ்ந்தனர்.

எண்ணுதற்கு அடங்காத மாண்புகள் உடையவனே வானிலே விளைந்த விண்ணவர்க்க வேந்தே புண்பட்ட ஆட்டை மீட்கவோ மண்ணுளே நீ வந்து மண்மகனாகப் பிறந்தனை.

குறிப்பு

வானும் மண்ணும் தொழும் பரா பரா நீ மண்ணுக்கு வந்ததாலே மண்தலங்கள் விண்தலங்களை ஒத்தன. மண்ணில் வாழும் உயிரெல்லாம் ரட்சிக்க நீ வெண்குடைகொண்டு மாலை கொண்டு, அன்பு கொண்டு வந்தாயோ கொற்றவனே என்று பலபட இறைவன் புகழை ஆயர்கள் ஓதினர்.

## அன்னையையும் சூசையப்பரையும் வாழ்த்துதல்

சூரியனைக் கண்ட தாமரை போன்று மலர்ந்த முகத்தையுடைய சேயை ஈன்ற ஒப்பற்ற அன்னையை வாழ்க என ஆயர்கள் வாழ்த்தினர். வேதங்களை ஒத்த மாண்புமிகு மாதவனான சூசையப்பரை வாழ்க வாழ்க என வாழ்த்தினர்.

## கன்னித்தாயும் சூசையும் ஆயர்க்கு விடைகொடுத்தல்

கன்னித்தாயும் சூசையும் தேனினும் இனிய அன்பு படைத்த சொற்களைச் சொன்னார்கள். இத்தகைய அன்பை ஆயர் உள்ளம் முன்பு பெற்றதில்லை. இப்போது மழை பொழிந்தாற் போல அன்பு மழை பொழிந்தது.

## சாந்தியின் வினாக்கள்

இடைக்குல மகளிருள் ஒருத்தி சாந்தி. அவள் உள்ளத்தில் எழும் இன்ப வெள்ளத்தில் நீந்தி நீந்திக் கரைகாண முடியாமல் ஒளிமயமான அன்னை மரியாளைப் பார்த்துப் பேசுகிறாள்.

இனி நடக்க இருப்பதெல்லாம் முன்னரே அறிந்தும், கொடுப்பதையே விரும்பி, ஆயர் குழாத்திடைத்தனியே அரசாட்சி செய்திட நோவதையே இனிதென்று எண்ணி இறைவன் உதித்தானோ?

உவகை ஆள்வதற்கு வந்த மகன், வேலும், வாளும், வில்லும் அம்பும் கொண்ட வெம்மை மிக்க சேனை இல்லாமல் வந்தது ஏன்? என்று சாந்தி வினவுகிறாள்.

## தாய் மேரியின் விடை (11-13)

அரசாண்ட குலங்கள் காட்டிய அருள் உணர்வு பெருகியதால் உருகிய தாய் கண்களில் நீர் பெருகக் கூறுகிறாள்.

தனித்துச் செய்யும் நற்செயல்களிலே ஈடுபாடு இல்லாதவர்கள், அம்பினை உடையவர்கள் செய்யும் துணைவலியை நம்பினார்கள். இடை துவளும் கொடி



10811A_rev2.indd 135 12/5/2018 3:48:42 PM

கொம்பிலே ஏறும். இது இயல்பு. ஆனால் இறைவன் ஆற்றலுக்க வேறு வேறு துணைகளும் வேண்டுமோ?

குறிப்பு

உலகை ஆளும் ஒப்பற்ற ஓர் அரசன் (இறைவன்) ஒரு செயலை முடிக்க வேண்டும் என்று கருதினால் கருதியவாறே அதனை முடிப்பான். எரிதணல் போல அவன் சினப்பானேயானால் அதை மாற்றும் ஆற்றல் யாருக்கு உண்டு? என்று அன்னை விடை கூறுகிறாள்.

சாந்தி தான் கேட்ட வேதவுரையைக் கூறியது.

சொல்லுதற்கெல்லாம் அரிய அருள் விளங்கித் தோன்றுகின்ற காலம் இது என்று ஒளிபடைத்த முடியுடைய அன்னை கூறியதை உணர்ந்த சாந்தி, பற்று நீங்கிய உலக வாழ்க்கையின் பயனைக் கூறுகிறாள்.

அன்னை தந்தை இல்லாதவன் கூறியவாறு என்னை இங்கு உணர்த்தி ஆட்கொண்ட இறைவன் - மின்னலை ஒத்தவன் - தோன்றும் போது எல்லோரும் அவனை வணங்குவார்கள்.

## வினா விடைகள்

1. வீரமாமுனிவர் பற்றி சிறுகுறிப்பு வரைக.

   வீரமாமுனிவரின் இயற்பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி ஆகும். இவர் இயற்றிய முக்கிய நூல் "தேம்பாவணி". இவர் இயற்றிய பிற நூல்கள் சதுரகராதி, தொன்னூல் விளக்கும், வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், திருக்காவலூர்க் கலம்பகம். பரமார்த்த குரு கதை என்ற நூல் உரைநடையில் அமைந்த முதல் நூலாகும். இவரை உரைநடையின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

2. கன்னித்தாயும் சூசையும் இறைவனை வணங்க ஆயர்களை எவ்வாறு அழைத்தனர்?

   வாசல் இத்தன் மையது, அதன் இயல்பு இத்தகையது, எல்லாம் இத்தன்மையான என விளங்கும் பொன்போன்ற நாடு மேலுலகம். அங்கு பொன்னுருக் கொண்டு போய் மின்னல் போன்ற அன்னை ஈன்ற மகனை  வேத நாதனைத் தொழுவதற்கு நினையாத ஆயர்களே வாருங்கள் இன்பம் பெறலாம் வாருங்கள் என அழைத்தனர்.

3. சாந்தியின் வினாக்களுக்கு தாய் மேரி அளித்த விடை யாது?

   தனித்துச் செய்யும் நற்செயல்களிலே ஈடுபாடு இல்லாதவற்கள், அம்பினை உடையவர்கள் செய்யும் துணைவலியை நம்பினார்கள். இடை

துவளும் கொடி கொம்பிலே ஏறும். இது இயல்ப. ஆனால் இறைவன் ஆற்றலுக்க வேறு வேறு துணைகளும் வேண்டுமோ? உலகை ஆளும் ஒப்பற்ற ஓர் அரசன் (இறைவன்) ஒரு செயலை முடிக்க வேண்டும் என்று கருதினால் கருதியவாறே அதனை முடிப்பான். எரிதணல் போல் அவன் சினப்பானேயானால் அதை மாற்றும் ஆற்றல் யாருக்கு உண்டு? என்று அன்னை விடை கூறினாள்.

**குறிப்பு**

4. தேம்பாவணி பற்றிக் குறிப்பு வரைக.

தேம்பாவணி என்றால் வாடாத பூமாலை என்று பொருள். இந்நூல் காப்பியத் தலைவராகிய சூசையப்பர் வரலாற்றைக் கூறுவதாகும். வீரமாமுனிவர் சூசையப்பரை "தேம்பா அணியாவான் வாடா அருள் மகன்" என்று பாடியுள்ளார். இதுவே காப்பியத்திற்குப் பெயராகிறது. கிறித்துவ சமயம் சார்ந்தது. 36 படலங்களாகப் பிரிக்கப்பட்டு 3615 விருத்தப் பாக்களில் ஏசுநாதரின் வளர்ப்புத்தந்தையாகிய சூசையப்பரின் வரலாற்றை எடுத்துரைக்கிறது.



10811A_rev2.indd 137 12/5/2018 3:48:42 PM

# மாதிரி வினாத்தாள்-I

**தாள் I - தமிழ்ச் செய்யுள்**

**நேரம்: 3 மணி** **மதிப்பெண்: 75**

**பகுதி அ**
**(5 × 5 = 25 மதிப்பெண்கள்)**

எவையேனும் ஐந்து வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை எழுதுக.

1. கண்ணன் பாட்டில் பாரதியின் நோக்கம் யாது?
2. நாமக்கல்லார் காட்டும் வாழ்க்கை நெறி யாது?
3. பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி வழி பாரதி விளக்கும் கருத்துக்கள் யாவை?
4. நோயற்ற வாழ்வு குறித்து நாமக்கல்லார் குறிப்பிடுவன யாவை?
5. தேம்பாவணி கூறும் ஏசுநாதரின் போதனைகளை விளக்குக.
6. அயோத்தி நகர காலை நேர நிகழ்ச்சிகளை விவரி.
7. ஞானக்கூத்தன் மோசிக்கீரனார் பற்றி கூறுவன யாவை?
8. கண்ணதாசன் கண்ணன் மீது காட்டும் அன்பை விளக்குக.
9. பாரதமாதாவின் பழம்பெருமைகளாக பாரதியார் கூறுவன யாவை?
10. பாரதிதாசன் பற்றி குறிப்பு வரைக.
11. பிறைநிலவின் புன்னகையாக தூரன் கூறுவது யாது?

**பகுதி ஆ**
**(5 × 10 = 50 மதிப்பெண்கள்)**

எவையேனும் ஐந்து வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை எழுதுக.

1. இறைவனை எப்போது எப்படி வணங்க வேண்டும் என்று கண்ணதாசன் குறிப்பிடுகிறார். விவரிக்க.
2. கண்ணன் என் விளையாட்டுப் பிள்ளை என்று பாரதி கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக.
3. அப்துல் ரகுமான் பாடல்களில் காணப்படும் படிமங்களை விளக்குக.
4. தயரதனின் உள்ளக் கருத்தினை விவரிக்க.



10811A_rev2.indd 138 12/5/2018 3:48:42 PM

5. கண்ணகியின் வழக்குரையைக் கேட்ட பாண்டிய மன்னனின் நிலை குறித்து விளக்கி எழுதுக.
6. இளங்கோ வடிகளின் கவித்திறத்தை வழக்குரைக் காதை மூலம் நிறுவுக.
7. உலகப்பன் பாட்டு உணர்த்தும் சமுக ஏற்றத்தாழ்வை விளக்குக.
8. மீராவின் கவிதைகளில் காணலாகும் சமூக அறத்தை வெளிப்படுத்துக.



10811A_rev2.indd 139 12/5/2018 3:48:42 PM

# மாதிரி வினாத்தாள்-II

**தாள் I - தமிழ்ச் செய்யுள்**

**நேரம்: 3 மணி** **மதிப்பெண்: 75**

**பகுதி அ**
**(5 × 5 = 25 மதிப்பெண்கள்)**

எவையேனும் ஐந்து வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை எழுதுக.

1. ஆயர்பாடி மாளிகையில் கண்ணன் செய்வது என்ன?
2. மீராவின் கவிதையில் காணலாகும் சமூக அவலத்தை எழுதுக.
3. வழக்குரை காதை கூறும் அறத்தை விளக்குக.
4. கனவு பற்றிய குறிப்பாக சிலப்பதிகாரத்தில் கூறப்படுவது யாது?
5. உமறு புலவர் பற்றிறய குறிப்பு வரைக.
6. சாந்தி, அன்னை மரியாளிடம் கேட்ட வினாக்கள் யாவை?
7. சூரிய நிறக் கண்ணனை கவிஞர் எப்படி எல்லாம் பாராட்டுகிறார்?
8. கோப்பெருந்தேவி கண்ட கனவு யாது?
9. “கண்ணும் எழுதேம்” பாடலில் மைதீட்டாமைக்கு தலைவி கூறும் காரணம் யாது?
10. “கண்ணன் துயிலும், காசினியின் உறக்கமும்” பற்றி கூறுக.
11. கவியரசு கண்ணதாசன் பற்றி சிறு குறிப்பு வரைக.

**பகுதி ஆ**
**(5 × 10 = 50 மதிப்பெண்கள்)**

எவையேனும் ஐந்து வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை எழுதுக.

1. “செய்யும் தொழிலே தெய்வம்” என்னும் பாடலில் சிறப்புக்களைத் விவரிக்க.
2. அலீ மென்னும் வேதத்தை விளக்கி கட்டுரை எழுதுக.
3. வல்லிக்கண்ணனின் படைப்பாளுமை குறித்து விவரிக்க.
4. தசரதன் இராமனுக்கு தன் கருத்தை எவ்வாறு உரைத்தான்?



10811A_rev2.indd 140 12/5/2018 3:48:42 PM

5. தேம்பாவணியைப் பற்றி விளக்குக.
6. கு. ப. இராஜகோபாலனின் “எதற்காக” என்ற பாடலை விளக்குக.
7. இராமனின் சிறப்புகளாக மன்னர்கள், முனிவர்கள் கூறும் கருத்துகளை தொகுத்து எழுதுக.
8. மந்திரக் கிழவரின் மாண்புகளாக கம்பர் கூறுவற்றை விளக்குக.



10811A_rev2.indd 141 12/5/2018 3:48:42 PM

10811A_rev2.indd 142 12/5/2018 3:48:42 PM

# இளங்கலை பட்டப்படிப்பு

# 11A

# பகுதி-I : தமிழ் தாள்-I

## முதற் பருவம்



## அழகப்பா பல்கலைக்கழகம்


(தேசிய தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் கற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64)தகுதியும்
மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது)

காரைக்குடி - 630003

**தொலைநிலைக்கல்வி இயக்ககம்**

ISBN 978-93-5338-200-1